# ஹஸ்ரத் அஹ்மது (அலை)
# அவர்களின் வாழ்க்கை வரலாறு


ஆசிரியர்

மவ்லவி முஹம்மது உமர் H.A



வெளியிடுவோர்
நஸாரத் நஷ்ரோ இஷாஅத்
காதியான்




# ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு


ஆசிரியர்
மவ்லவி முஹம்மது உமர் H.A.

வெளியிடுவோர்
நஸாரத் நஷ்ரோ இஷாஅத்,
காதியான், பஞ்சாப்.

# Life History of Hazrath Ahmad (as)
# (in Tamil)


| | | |
|---|---|---|
| Written by | : | Maulavi Muhammad Umar H.A. |
| Composed by | : | A. Abdul Nizar |
| First Edition | : | 1981 |
| Present Edition | : | 2021 |
| Copies | : | 1000 |
| Published by | : | Nazarat Nashr-o-Isha'at<br>Qadian. |
| Printed at | : | Fazl-e-Umar Printing Press<br>Qadian - 143 516<br>Gurdaspur, Punjab. |

Noorul Islam Toll Free No : 1800 103 2131
Tamil Toll Free No : 1800 425 40000



**ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)**

வாக்களிக்கப்பட்ட மஹ்தி மஸீஹ்

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுனர்

# பதிப்புரை

*மதிப்பிற்குரிய மவ்லவி முஹம்மது உமர் சாஹிப் அவர்களால் எழுதப்பட்ட 'ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு' எனும் நூல் முதன் முறையாக 1981 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நூல் வாக்களிக்கப்பட்ட மஸீஹான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கையின் சில பகுதிகளைக் குறித்து எடுத்துரைக்கின்றது.*

*ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பெரியவர்களும் குழந்தைகளும் அறியத்தக்க வகையில் சுருக்கமாகவும், எளிதில் புரியும் வகையிலும் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலின் முதற்பதிப்புப் பிரதிகள் முற்றிலும் தீர்ந்து விட்டதாலும், காலத்தின் தேவையைக் கருத்தில் கொண்டும் மேலும் சில இணைப்புகளுடன் மீண்டும் வெளியிடப்படுகிறது.*

*இந்நூலை, எல்லா வகையிலும் அருளுக்குரியதாகவும் பயனளிக்கக் கூடியதாகவும் ஆக்குமாறு இறைவனிடம் பிரார்த்தனை செய்கின்றோம்.*

**ஹாஃபிஸ் மக்தூம் ஷரீஃப்**
*நாஸிர் நஷ்ரோ இஷாஅத்*
*காதியான்*

# அணிந்துரை

இஸ்லாத்திற்கு அதன் ஆரம்பக் காலத்தில் கிடைத்த வெற்றிக்கும் வளர்ச்சிக்கும் பிறகு முஸ்லிம் சமுதாயம் நம்பிக்கையிலும் செயல்பாட்டிலும் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக உயிரற்ற ஒரு நிலையினை அடைந்தது.

அப்போது அல்லாஹ் தனது முன்னறிவிப்பின்படி இஸ்லாத்தின் உலகளாவிய வெற்றிக்காகவும் வீழ்ச்சியடைந்த முஸ்லிம் சமுதாயத்தை உண்மையான இஸ்லாத்தின் கீழ் ஒன்று சேர்ப்பதற்காகவும் ஹஸ்ரத் மஹ்தி மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பினான்.

பரிசுத்த ஆவியைக் கொண்டு அல்லாஹ் அன்னாருக்கு உதவி செய்தான். இதன் காரணமாக அஹ்மதிய்யா ஜமாஅத் இன்று உலக நாடுகளிலெல்லாம் நிலைநாட்டப்பட்டிருக்கின்றது. இன்று உலகெங்கும் பல கோடி அஹ்மதிகள் உள்ளனர்.

இஸ்லாத்தின் மீதுள்ள உயிரோட்டமான தொடர்பு மற்றும் பற்றுதலின் காரணமாக இந்த ஜமாஅத் தனது தீவிர பிரச்சாரத்தால் உலகெங்கும் இஸ்லாத்திற்கு வெற்றி தேடித் தந்து கொண்டிருக்கின்றது.

இத்தகு இஸ்லாமிய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட இந்த மகானுடைய வாழ்க்கை வரலாறு ஒவ்வோர் அஹ்மதி முஸ்லிமுக்கு மட்டுமல்லாமல் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணையாதவர்களுக்கும் தெரிய வேண்டியதொன்றாகும்.

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆன்மீகப் புதல்வரான ஹஸ்ரத் இமாம் மஹ்தி மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு தமிழ் மொழியில் அச்சாகி வெளிவருவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்நூலை எழுதியுள்ள நம்முடைய இயக்கத்தின் தமிழ்நாடு பொறுப்புப் பிரச்சாரகர் ஜனாப் **மவ்லவி முஹம்மது உமர் சாஹிப்** *H.A.* அவர்களுக்கு அல்லாஹ் நற்பலனைத் தந்தருள்வானாக! நீண்ட ஆயுளுடனும் பூரண ஆரோக்கியத்துடனும் இஸ்லாத்திற்கு மேலும் தொண்டாற்றுவதற்கான வாய்ப்புகளை அவருக்குத் தந்தருள்வானாக! ஆமீன்.

இந்நூலை நடுநிலையோடு நின்று தூய உள்ளத்துடன் அனைவரும் படிக்க வேண்டும். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் உண்மை நிலையையும் அஹ்மதிய்யத்தின் சத்தியத்தையும் புரிந்து அதை ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பு எல்லாருக்கும் கிடைக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**மிர்ஸா வஸீம் அஹ்மது**
தலைவர்
இந்திய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்
காதியான், பஞ்சாப்.
1980

# முன்னுரை

அஹ்மதிய்யா இயக்கத்தின் தூய ஸ்தாபகர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களைத் தமிழ்நாட்டிலுள்ள மக்களுக்கு அறிமுகப்படுத்துவதற்காக இச்சிறு நூலை வெளியிடுவதற்கான வாய்ப்பினை தந்த அல்லாஹ்வுக்கு முதலாவதாக நன்றி செலுத்துகிறேன்.

வாக்களிக்கப்பட்ட மஹ்தி மஸீஹ் (அலை) அவர்களின் வரலாற்றையும், அப்புனிதரின் வாழ்வில் நடைபெற்ற ஏராளமான சம்பவங்களையும் எடுத்துரைப்பதென்றால் அது பல பாகங்கள் அடங்கிய மிகப்பெரும் நூலாகிவிடும். எனினும் அந்தச் சீரிய வரலாற்றைக் கோடிட்டுக் காட்டும் நோக்கத்துடன்தான் இந்தச் சிறிய நூல் வெளியிடப்படுகிறது.

ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் இரண்டாம் கலீ.ஃ.பாவான ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் எழுதிய ‘சீரத் மஸீஹ் மவ்வூது (அலை) - மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு’ என்ற புத்தகத்தையும் மற்றும் சில வரலாற்று நூல்களையும் தழுவி எழுதப்பட்ட இந்தச் சிறிய நூலில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் போதனைகளும், அன்னாருடைய உண்மைக்குச் சாட்சி பகரும் சில ஆதாரங்களும், வரலாற்றுச் சம்பவங்களின் சில பகுதிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அத்துடன் ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் மறைவிற்குப் பிறகு அமைக்கப்பட்ட கிலா.ஃ.பத்தின் அரிய சாதனைகளும் இஸ்லாமிய சேவைகளும் மிகவும் சுருக்கமாக இதில் இடம்பெற்றிருக்கின்றன.

இச்சிறு நூலை நல்ல தமிழில் திறம்பட தொகுத்து வெளியிட உதவிய ஆத்மீக சகோதரர் ஜனாப் **முஹம்மது அஹ்மது லெப்பை** அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். இறைவன் அவருக்கு அதற்கான நற்பலனைத் தந்தருள்வானாக.

இந்நூல் தமிழ் தெரிந்த மக்களுக்குச் சிறந்த பயனை அளிக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**முஹம்மது உமர்** H.A.
நூலாசிரியர்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தோற்றமும் இளமைப் பருவமும் | 01 |
| 2. | தந்தையின் மரணமும், முதல் வஹியும் | 10 |
| 3. | வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்னும் வாதம் | 15 |
| 4. | பாதிரி அப்துல்லாஹ் ஆத்தமுடன் நடைபெற்ற விவாதம் | 19 |
| 5. | சர்வ சமய மாநாட்டில் நிகழ்த்திய சொற்பொழிவு | 21 |
| 6. | பண்டிட் லேக்ராமின் மரணம் | 25 |
| 7. | டாக்டர் மார்ட்டின் கிளார்க் | 26 |
| 8. | மார்க்கங்களிடையே நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஆலோசனை | 29 |
| 9. | அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றம் | 32 |
| 10. | குத்பா இல்ஹாமிய்யா | 33 |
| 11. | கரம்தீன் என்பவர் தொடுத்த வழக்குகள் | 34 |
| 12. | அமெரிக்காவைச் சார்ந்த அலெக்ஸாண்டர் டூயியின் அழிவு | 37 |
| 13. | ஸியால்கோட், லாஹூர் பயணங்களும், பேருரைகளும் | 41 |
| 14. | மரணமும் நல்லடக்கமும் | 43 |
| 15. | போதனைகளும் நல்லுபதேசங்களும் | 50 |
| 16. | அடையாளங்கள் | 60 |
| 17. | எதிர்ப்புகளும், அவற்றின் முடிவுகளும் | 69 |
| 18. | அஹ்மதிய்யா கிலாஃபத் | 111 |
| 19. | இயக்கத்தின் வளர்ச்சியும் பணிகளும் | 114 |

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ
نَحۡمَدُہٗ وَ نُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ

# வாக்களிக்கப்பட்ட மஹ்தி மஸீஹ் ஹஸ்ரத் அஹ்மது (அலை)

## தோற்றமும் இளமைப் பருவமும்

அஹ்மதிய்யா இயக்கம் இன்று உலகம் முழுவதும் பரவி இருக்கும் ஒரு பேரியக்கமாக உள்ளது. பல கோடி மக்களைக் கொண்ட இவ்வியக்கம் 1889 ஆம் ஆண்டு இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வியக்கம் உலகெங்கும் 210 –க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியிருக்கின்றது. இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் வெளியே இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, பிரான்ஸ், ஸ்பெயின், சுவிட்சர்லாந்து, ஹாலந்து, ஜெர்மனி, இத்தாலி, சிசிலி, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, கிழக்கு ஆப்பிரிக்கா, வட ஆப்பிரிக்கா, மொரீஷியஸ், சீனா, ஆஸ்திரேலியா, எத்தியோப்பியா, இஸ்ரேல், சிரியா, புடாபெஸ்ட், ஹங்கேரி, சிங்கப்பூர், மலேஷியா, சுமத்ரா, ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக், இலங்கை, பர்மா போன்ற நாடுகளில் அஹ்மதிய்யா இயக்கத்தைச் சார்ந்தவர்கள் இஸ்லாமியச் சேவையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இவ்வியக்கத்தின் புனித ஸ்தாபகர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் இந்தியாவிலுள்ள பஞ்சாப் மாநிலத்தில் குர்தாஸ்பூர் மாவட்டத்தில் பட்டாலாவிலிருந்து 11 மைல் தூரத்திலும், அமிர்தசரஸிலிருந்து 24 மைல் தூரத்திலும் உள்ள

காதியான் என்னும் சிற்றூரில் 1835 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ஆம் நாள், இஸ்லாமிய வருடம் 1250 ஆம் ஆண்டு ஷவ்வால் மாதம் 14 ஆம் நாள் வெள்ளிக் கிழமை காலை பிறந்தார்கள்.

***இமாம் மஹ்தி (அலை) அவர்களின் குடும்பம்:***

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் குடும்பம் பஞ்சாபில் முகலாயப் பரம்பரையில் புகழ் பெற்ற மதிப்புமிக்க குடும்பமாகத் திகழ்ந்தது. பாரசீக வம்சத்தைச் சேர்ந்த அன்னாரின் பிரபுத்துவக் குடும்பம் பாபரின் ஆட்சிக் காலத்தில் கி.பி. 1530 ஆம் ஆண்டு – ஹிஜ்ரி 938 –ல் பஞ்சாபில் குடியேறியது. அமீர் தைமூரின் சிறிய தந்தையார் ஹாஜி பர்லாஸின் வழிவந்த மிர்ஸா ஹாதி பேக் என்பவர் 200 பேர்களோடு பஞ்சாபில் குடியேறினார். மன்னர் பாபர் மிர்ஸா ஹாதி பேக்கை அந்த இடத்தின் காஸி (Qazi) ஆக நியமித்து அந்த இடத்திற்கும், 85 கிராமங்களுக்கும் 65 மைல் சுற்றளவுக்கு அதிகாரியாக்கினார். அந்த இடத்திற்கு இஸ்லாம்பூர் காஸி என்று பெயரிட்டனர். காலப்போக்கில் காஸி, காதியாகி, பின்னர் காதியான் ஆகிவிட்டது.

500 –க்கும் மேற்பட்ட அலுவலர்களும், நூற்றுக்கும் மேற்பட்ட இஸ்லாமிய அறிஞர்களும், திருக்குர்ஆனை மனனம் செய்த ஹாஃபிஸ்களும் மிர்ஸா ஹாதி பேக்கோடு எப்போதும் இருந்து வந்தனர். அந்நாட்களில் இஸ்லாமியப் போதனைகளுக்கும் கட்டளைகளுக்கும் ஏற்ப இறையச்சத்தோடு வாழ்க்கை நடத்தி வந்த மக்கள் காதியானில் அதிகமாக வாழ்ந்த காரணத்தால் பஞ்சாப் முழுவதிலும் அவ்வூருக்கு மிகச் சிறந்த மதிப்பும், மரியாதையும் இருந்து வந்தது.

பின்னர் சீக்கியர்களின் தாக்குதல்களின் காரணமாகக் காதியானைத் தவிர மற்ற கிராமங்கள் இந்தக் குடும்பத்தின் அதிகாரத்திலிருந்து பறிக்கப்பட்டுவிட்டன. அத்தோடு இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி வந்துவிட்டது. சீக்கியர்கள் கைப்பற்றிய இடங்களையெல்லாம் ஆங்கிலேயர் எடுத்துக் கொண்டனர்.

இவ்வாறு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் குடும்பம் பஞ்சாபில் மதிப்பும் மரியாதையும் மிக்க புகழ் பெற்ற குடும்பமாகத் திகழ்ந்தது.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் தந்தையார் ஹஸ்ரத் குலாம் முர்தஸா சாஹிப் ஆங்கிலேய ஆட்சியில் மதிப்புக்குரிய பணியில் இருந்து வந்தார்கள். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் தாயார் சிராக் பீவி சாஹிபா பஞ்சாபில் புகழ் பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர்களுக்கு மூன்று ஆண் மக்களும், இரண்டு பெண் மக்களும் இருந்தனர். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இன்னொரு பெண் குழந்தையோடு இரட்டைக் குழந்தையாகப் பிறந்தார்கள். அந்தப் பெண் குழந்தை சில நாட்களில் மரணமடைந்து விட்டது. 'இமாம் மஹ்தி அவர்கள் இரட்டைக் குழந்தையாகப் பிறப்பார்கள்' என்று ஹஸ்ரத் முஹ்யித்தீன் இப்னு அரபி அவர்கள் ஏற்கனவே முன்னறிவிப்புச் செய்துள்ளதால் அன்னாரின் பிறப்பே அவர்களின் உண்மைக்கு ஒரு சான்றாகத் திகழ்கின்றது.

(ஆதாரம்: ஹஸ்ரத் முஹ்யித்தீன் இப்னு அரபி அவர்களின்
ஃபுஸூஸுல் ஹிகம் என்னும் நூல், பக்கம் 36)

### இமாம் மஹ்தி (அலை) அவர்களின் காலமும் எதிர்பார்ப்பும்:

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் பிறப்பு நெருங்கிக் கொண்டிருக்கும் காலத்திலேயே, இக்காலத்தில் தோன்றுவார் என்று எல்லா மார்க்க வேத நூல்களிலும் முன்னறிவிக்கப் –பட்டுள்ள ஓர் ஆன்மீகச் சீர்திருத்தவாதியின் வருகையை எல்லாச் சமுதாயங்களும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தன.

அஹ்லே ஹதீஸ் ஜமாஅத்தின் புகழ்பெற்ற தலைவரும், மார்க்க அறிஞருமான நவாப் ஸித்தீக் ஹஸன் சாஹிப் பின்வருமாறு எழுதுகிறார்:

"ஹிஜ்ரி கணக்கின்படி 1000 ஆண்டுகள் கழிந்து மேலும் 200 வருடங்கள் ஆன பின்னர் இமாம் மஹ்தி அவர்கள் தோன்றுவார்கள் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்புச் செய்துள்ளபடி 13 ஆம் நூற்றாண்டில் இமாம் மஹ்தி தோன்ற வேண்டும். ஆனால் இந்த நூற்றாண்டு முடிவடைந்து விட்டது. 14 ஆம் நூற்றாண்டு ஆரம்பித்துச் சில மாதங்கள் கழிந்து விட்டன. விரைவில் இமாம் மஹ்தி தோன்றுவார்கள் என்பதில் எந்த விதமான ஐயத்திற்கும் இடமில்லை." (இக்திரா புஸ்ஸாஅ, பக்கம் 221)

முஸ்லிம்களின் தலைவர்களில் ஒருவரும், கவிஞருமான டாக்டர் முஹம்மது இக்பால் ஒரு கவிதையில் இவ்வாறு கூறுகிறார்:

"இந்தக் காலம் ஓர் இப்ராஹீமைத் தேடிக் கொண்டிருக்கிறது. இன்று லாயிலாஹ இல்லல்லாஹ்வின் இடத்தைச் சிலை வணக்கம் பிடித்துக் கொண்டது." (ஸர்பே கலீம்)

ஸமீன்தார் என்ற பத்திரிகை ஒரு கவிதையில் இவ்வாறு வரைகின்றது:

“இந்தக் காலத்தின் இமாமத்திற்காக – தலைமை ஏற்று வழிநடத்துவதற்காக – இமாம் மஹ்தியே! விரைந்து வாருங்கள்! உங்களை ஸியாரத் செய்வதற்காக – தரிசிப்பதற்காக மக்கள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.”

இந்தியாவிற்கு வெளியே எகிப்து, சிரியா போன்ற இஸ்லாமிய நாடுகளிலும் இமாம் மஹ்தியின் வருகை ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டது.

ஹஸ்ரத் காஜா நிஸாமுத்தீன் அவ்லியாவின் வாரிசான காஜா ஹஸன் நிஸாமுத்தீன் என்பவர் இஸ்லாமிய நாடுகளில் தாம் மேற்கொண்ட சுற்றுப் பயணத்திற்குப் பின்னர் விடுத்த ஓர் அறிக்கையில் பின்வருமாறு கூறுகிறார்:

“இஸ்லாமிய நாடுகளில் நான் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இடங்களிலெல்லாம் அங்குள்ள ஷேக்மார்களும், இமாம்களும் இமாம் மஹ்தியின் வருகையை மிகவும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டேன்.”

(அஹ்லே ஹதீது பத்திரிகை)

இதேபோன்று பைபிளில் காணப்படும் முன்னறிவிப்புகளின் படி இயேசு மஸீஹின் இரண்டாவது வருகையை மிகவும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்; இன்றும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். “இதோ இயேசு வந்து கொண்டே இருக்கிறார்; என கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக அவர்கள் கூறிக் கொண்டே இருக்கிறார்கள். இதற்காக அவர்கள்

**1868, 1873, 1898** என்று பல வருடங்களைக் குறிப்பிட்டு அறிக்கை விட்டுக் கொண்டே இருந்தனர். இறுதியில் நிராசையடைந்த சிலர் பின்வருமாறு கூற ஆரம்பித்தனர்.

It is further said that the time for the coming of the Messiah is expired. (தாலமூத் பக்கம் 35)

அதாவது 'மஸீஹின் வருகையின் காலம் கடந்து விட்டது' என்று தாலமூதை மேற்கோள் காட்டிக் கூறப்பட்டது.

சுருங்கக்கூறின், கிறிஸ்தவ உலகம் இன்றும் இயேசுவின் இரண்டாம் வருகையை மிகவும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

அதேபோன்று கலியுகத்தில் தோன்ற வேண்டிய ஓர் அவதாரப் புருஷரை – கல்கியின் தோற்றத்தை இந்து சமுதாயம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு எல்லா மார்க்கத்தைச் சார்ந்தவர்களும் தத்தமது மார்க்கங்களில் இக்காலத்தில் தோன்றுவதாக முன்னறிவிப்புச் செய்யப்பட்ட ஒரு சீர்திருத்தவாதியை எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஒரு காலக்கட்டத்தில்தான் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தோன்றினார்கள்.

***இளமைப் பருவமும் கல்வியும்:***

அக்காலத்தில் பஞ்சாப் மாநிலம் கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த காரணத்தினால், அங்கு அறியாமை அதிகமாகப் பரவியிருந்தது. மக்களுக்குக் கல்வியின் மீது கவனமோ, அக்கறையோ இல்லாதிருந்தது. எனினும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் தந்தையார் தனது மகனுக்கு தமது

வீட்டிலேயே திருக்குர்ஆன், அரபி மொழி, பாரசீக மொழி, தத்துவம், தர்க்க சாஸ்திரம் ஆகியவற்றில் ஆரம்பக் கல்வி கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தார். தானும் வைத்திய சாஸ்திரத்தைக் கற்றுக் கொடுத்தார். இதைத் தவிர வேறு எந்தக் கல்வியையும் கற்கும் வாய்ப்பை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பெறவில்லை.

உலகியல் கல்வியைக் கற்பதில் கவனமோ, நாட்டமோ இல்லாத ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள், எப்போதும் தமது தந்தையார் கட்டிய பள்ளிவாயிலில் தனிமையாக அமர்ந்து திருக்குர்ஆன் ஓதுவதிலும் அதைப் பற்றிச் சிந்திப்பதிலும் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார்கள். மார்க்க சம்பந்தமான நூல்களைக் கவனமாகப் படித்து வந்தார்கள். ஆனால் எந்த அதிமகத்தான பொறுப்பை நிறைவேற்றுவதற்காக அவர்கள் அனுப்பப்பட்டிருந்தார்களோ, அதற்கு அவர்கள் கற்ற இந்தக் கல்வி போதுமானதாக இல்லை. எனவே பிற்காலத்தில் அன்னார் பெற்ற ஆன்மீகக் கல்வி அனைத்தும் இறைவன் புறமிருந்து கிடைத்த ‘இல்மே லதுன்னீ’ என்ற இறை ஞானமேயாகும்.

எனவேதான் பிற்காலத்தில் அவர்களோடு மார்க்க சம்பந்தமாக விவாதம் செய்து தோற்றுப்போன சிலர் உயர் கல்வி எதுவும் பெறாத இவர் ஒரு மார்க்க அறிஞராக இருக்க முடியாது என்று குற்றம் சாட்டினர்.

இயேசு கிறிஸ்துவின் காலத்தில் வாழ்ந்த யூத மத அறிஞர்கள், இயேசுவின் உரைகளைக் கேட்ட பின்னர், “இவன் தச்சனுடைய குமாரன் அல்லவா? இவன் தாய் மரியாள் என்பவள் அல்லவா?............... இப்படி இருக்க இதெல்லாம் இவனுக்கு எப்படி

வந்தது?" (மத்தேயு 13 : 55,56) என்று கேட்டனர் என்ற ஒற்றுமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## ***அரசாங்கப் பணியும், கிறிஸ்தவர்களோடு நிகழ்த்திய விவாதங்களும்:***

ஆரம்பக் கல்வி கற்ற பின்னர், ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் தந்தையார் அன்னாருக்கு ஸியால்கோட் என்னும் இடத்தில் ஓர் அலுவலகப் பணிக்கான ஏற்பாட்டைச் செய்தார்கள். அஹ்மது (அலை) அவர்கள் தம் தந்தையின் வற்புறுத்தல் காரணமாகவே இந்தப் பணியை ஒப்புக் கொண்டார்கள் என்றாலும் அலுவலக நேரம் முடிந்த பின்னர் திருக்குர்ஆனையும், பிற மார்க்க நூல்களையும் கற்பதிலும், அவற்றைப் பிறருக்குக் கற்றுக் கொடுப்பதிலும், மார்க்க சம்பந்தமான விவாதங்களிலும் ஈடுபட்டு வந்தார்கள். 29 வயது நிரம்பிய இளைஞராக இருந்தும், தூய்மையும் இறை பக்தியும் நிறைந்த புனித வாழ்க்கை நடத்தி வந்ததால், இந்து, முஸ்லிம், கிறிஸ்தவப் பெருமக்களின் மத்தியில் அன்பும் ஆதரவும் மதிப்பும் பெற்றுத் திகழ்ந்தார்கள். அலுவலகத்திலும், பொதுவாழ்விலும் கண்ணியத்திற்குரியவராகக் கருதப்பட்டார்கள்.

அக்காலத்தில்தான் முதன் முதலில் பஞ்சாப் மாநிலத்தில் கிறிஸ்தவப் பிரச்சார அமைப்பு (Missions) ஏற்படுத்தப்பட்டு, கிறிஸ்தவப் பாதிரிகள் இஸ்லாத்திற்கெதிரான பிரச்சாரத்தில் முழுமூச்சோடு ஈடுபட்டு வந்தனர். அவர்களோடு விவாதங்களில் ஈடுபட்ட புகழ்பெற்ற இஸ்லாமிய அறிஞர்கள் கூட அவர்களின் தர்க்க ரீதியான வாதங்களுக்கு விடையளிக்க முடியாமல் தோல்வி கண்டனர். இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டதே

கிறிஸ்தவ மார்க்கத்தை நிலைநாட்டுவதற்காகத்தான் என்ற எண்ணத்தோடு அவர்கள் செயலாற்றி வந்தனர். இஸ்லாத்திற்கு எதிராகவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராகவும் மிகவும் கீழ்த்தரமான முறையில் பிரச்சாரம் செய்து வந்தனர்.

ஆனால் அந்தக் கிறிஸ்தவப் பாதிரிகள் அனைவரும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களோடு விவாதங்களில் ஈடுபட்ட போதெல்லாம் தோல்வியே கண்டனர். புகழ்பெற்ற பாதிரிகள் பலர் தங்கள் தோல்வியை ஒப்புக் கொண்டனர். இவ்வாறு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் வாலிப வயதிலேயே இஸ்லாத்தின் போர் வீரராகத் திகழ்ந்தார்கள்.

***பணியிலிருந்து விலகல்:***

நான்கு வருட காலம் திருப்தியற்ற நிலையிலும் தமது விருப்பத்திற்கு எதிராகவும் பணியாற்றிய பின், தந்தையாரின் அனுமதி பெற்று, அப்பணியிலிருந்து விலகி தமது சொந்த ஊருக்குத் திரும்பி வந்தார்கள். பின்னர் தந்தையின் ஆலோசனையின்படி அப்போது நடைபெற்று வந்த தமது பூர்வீக சொத்து சம்பந்தமான வழக்கு தொடர்பான பணிகளில் ஈடுபட்டு வந்தார்கள். ஆனால் இப்படிப்பட்ட உலகியல் விஷயங்களில் தமக்கு விருப்பமில்லாவிட்டாலும், தந்தையாரின் விருப்பத்திற்காக மனமொன்றாமல் அவற்றில் ஈடுபட்டு வந்தார்கள். இந்தக் காலக்கட்டம் அன்னாருக்கு மிகவும் இக்கட்டான காலக் கட்டமாக இருந்தது. அன்னாரின் தந்தையும், சகோதரர் மிர்ஸா குலாம் காதிர் அவர்களும் உலகியல் பணிகளில் மனமொன்றி

ஈடுபடாததற்காக அவ்வப்போது ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களைக் கடிந்து கொண்டனர். அவர்கள், அன்னாரின் இத்தகைய நடைமுறைக்குக் காரணம் சோம்பல் என்று கருதினர். எதிர்காலத்தைப் பற்றி எந்தக் கவலையுமில்லாமல், எப்போதும் திருக்குர்ஆன் ஓதுவதிலும், இறை வணக்கத்திலும், மார்க்க நூல்களைப் படிப்பதிலும், அவற்றை ஆராய்வதிலும் தொடர்ந்து ஈடுபட்டு வந்ததால், பிற்காலத்தில் பிறருக்குக் கீழ் கைகட்டி நின்று வாழ்க்கை நடத்த வேண்டியது வருமே என்று அவர்கள் அஞ்சினர். ஆனால் மார்க்க விஷயங்களில் மூழ்கி இருந்த ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது தந்தையைத் திருக்குர்ஆன், ஹதீஸின் பக்கம் திருப்புவதற்கு முயற்சி செய்தார்கள். இருந்த போதிலும், உலகியல் பணிகளில், தன்னால் இயன்ற வரை தந்தைக்கு உதவி ஒத்தாசை செய்து வந்தார்கள். ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் மார்க்கப் பணிகளில் ஈடுபட்டு வந்தார்கள்.

## தந்தையின் மரணமும், முதல் வஹியும்

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு 40 வயதான போது, அதாவது 1876 –ஆம் ஆண்டு, அன்னாரின் தந்தையார் உடல் நலம் குன்றி படுக்கையில் இருந்தார்கள். அப்போது ஒருநாள், ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு ‘வஸ்ஸமாயி வத்தாரிக் – இரவின் மீது ஆணையாக! இரவில் வரப்போவது என்னவென்று உமக்குத் தெரியுமா?’ என்ற இல்ஹாம் (இறை அறிவிப்பு) கிடைத்தது. அச்சமயம், தமது தந்தையார் அன்றைய இரவில் மரணித்து விடுவார்கள் என்ற எண்ணம் அவர்களின் உள்ளத்தில் தோன்றியது. இந்த இறையறிவிப்பைப் பெற்றதும்,

அன்னார் மிகுந்த துயரத்திற்கும், வருத்தத்திற்கும் ஆளானார்கள். இதனைக் குறித்து ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

“எனது தந்தையார் மக்ரிப் – சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு மரணமடைவார்கள் என்ற செய்தி கிடைத்ததும், மனித இயல்பின் காரணமாக நான் மிகுந்த துயரத்திற்குள்ளானேன். ஏனென்றால் குடும்பத்தின் அன்றாட வாழ்க்கைச் செலவுகள் அனைத்தும் தந்தைக்குக் கிடைத்து வந்த பென்ஷன் – ஓய்வூதியம் மற்றுமுள்ள அவர்களின் வருமானங்களின் மூலமாகத்தான் நடைபெற்று வந்தன.”

தந்தையின் மறைவோடு இந்த வருமானங்கள் அனைத்தும் நின்று விடும். எனவே அன்னாரின் மரணத்திற்குப் பிறகு குடும்பத்தின் நிலை என்னவாகும்? என்ற பயம் உள்ளத்தில் தோன்றியது. இந்த அச்சமும் பயமும் உள்ளத்தில் தோன்றிய அதே நொடியில் எனக்கு ஒரு மயக்க நிலை ஏற்பட்டு இரண்டாவது ஓர் இல்ஹாம் (இறை அறிவிப்பு) கிடைத்தது. அது ‘அலைஸல்லாஹு பிகாஃபின் அப்தஹு’ – ‘தன் அடியானுக்கு அல்லாஹ் போதுமானவனாக இல்லையா?’ என்பதாகும்.

இந்த இல்ஹாம் கிடைத்த மறுகணம் எனது உள்ளத்தை ஆட்கொண்டிருந்த அச்சமும் பயமும் நீங்கி, புதிய ஊக்கமும் தெம்பும் ஏற்பட்டது. அதோடு அல்லாஹ் என்னை ஒருபோதும் கை விடவோ, வீணாக்கவோ மாட்டான் என்ற உறுதியான நம்பிக்கை ஏற்பட்டது....... அப்போதே இந்த இல்ஹாம் அடங்கிய ஒரு

மோதிரத்தைச் செய்து கொண்டேன். அந்த மோதிரம் இன்றும் என்னிடம் இருக்கின்றது.

(ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் விரல்களை அலங்கரித்த அந்த மோதிரம் தற்போது ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் விரல்களை அலங்கரித்துக் கொண்டிருக்கிறது.)

மேலே கூறிய இல்ஹாம்கள் கிடைத்த அன்றைய தினமே மக்ரிப் சமயத்திற்கு சற்று முன் அன்னாரின் தந்தையார் மரணம் அடைந்தார்கள். அன்றிலிருந்து ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்வில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கியது.

***துன்பங்களும் துயரங்களும்:***

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் தந்தைக்கு காதியான், பட்டாலா, அமிர்தசரஸ், குர்தாஸ்பூர் ஆகிய இடங்களில் சில வீடுகளும், கடைகளும் சொந்தமாக இருந்தன. இந்தச் சொத்துக்கள் அனைத்திற்கும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களும், அவர்களது சகோதரரும் சம அளவிலான வாரிசுகளாக இருந்தும், ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஒருபோதும் தமக்குரிய பங்கைக் கோரவில்லை. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் தேவைகளை அன்னாரது தமையனார் ஓரளவுக்கு நிறைவேற்றி வந்தபோதிலும், பணி ஏதும் செய்யாமல் புத்தகங்கள் படிப்பதிலேயே தமது காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கும் நிலையைக் கண்டு அவர் அடிக்கடி தமது வெறுப்பை வெளிப்படுத்திக் கொண்டே இருந்தார். அதுமட்டும்

அல்லாமல் இந்தச் சகோதரர் எப்போதும் குர்தாஸ்பூரிலேயே தங்கி இருந்ததால், இங்கு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பலவிதமான தொல்லைகளுக்கும் இன்னல்களுக்கும் ஆளானார்கள். ஆனால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இந்தக் கஷ்டங்கள் அனைத்தையும் பொறுமையோடு சகித்துக் கொண்டார்கள்.

இந்த நாட்களில், இறை அருளைப் பெறுவதற்காக ஆறு மாத காலம் தொடர்ந்து நோன்பு நோற்று வந்தார்கள். சில சமயம் நோன்பு திறப்பதற்கு உணவு இல்லாத காரணத்தால், வெறும் தண்ணீரை மட்டும் குடித்து நோன்பு திறந்திருக்கிறார்கள்.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமக்குக் கிடைத்த உணவுப் பொருட்களை ஏழைகளுக்கும், விதவைகளுக்கும், அனாதைகளுக்கும் பகிர்ந்தளித்து வந்தார்கள். பல சமயம் அவர்கள் பசியோடு நாட்களைக் கழித்திருக்கிறார்கள்.

அன்னாரின் உறவினர்களே உயிர்ப் பகைவர்களாக மாறி விடுவார்கள் என்பதை அன்றைய தினம் உலகம் அறிந்திருக்க வில்லை. இருந்தபோதிலும், எந்த விதமான உலகியல் உதவியோ, மக்களின் ஒத்தாசையோ இன்றி இறைவனது தனிப்பட்ட உதவியால் அவர் வெற்றி பெறுவார் என்பது அல்லாஹ்வின் நியதிகளுள் ஒன்றாக இருந்தது.

***சகோதரரின் மரணம்:***

**1884** –ஆம் ஆண்டு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் சகோதரர் மிர்ஸா குலாம் காதிர் சாஹிப்

மரணமடைந்தார். அவருடைய சொத்துக்கள் அவருடைய மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டன. பராஹீனே அஹ்மதிய்யா நூலின் மூலம், ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் புகழ் இந்தியா முழுவதும் பரவியதன் காரணமாக ஏராளமான மக்கள் அவர்களை சந்திப்பதற்குக் காதியான் வரத் தொடங்கினார்கள். அவ்வாறு வருகை புரிந்தவர்களுள் மார்க்க அறிவிலும், இறை ஞானத்திலும் முழு இந்தியாவிலும் புகழ் பெற்றவரும், காஷ்மீர் மன்னரின் குடும்ப மருத்துவருமான ஹஸ்ரத் ஹக்கீம் நூருத்தீன் சாஹிப் அவர்களும் ஒருவர். அவர்கள் பின்னர் நிரந்தரமாகக் காதியானிலேயே தங்கி இஸ்லாமியத் தொண்டிற்காக தம்மை முற்றிலுமாக அர்ப்பணித்தார்கள்.

இந்நாட்களில் காதியானுக்கு வந்த பல அறிஞர்களும், இஸ்லாமியத் தொண்டர்களும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களிடம் பைஅத் வாங்கும்படி கேட்டுக் கொண்டார்கள். ஆனால் இந்த வேண்டுகோள்களையெல்லாம் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் நிராகரித்துக் கொண்டே வந்தார்கள். பின்னர் 1888 –ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இறைவன் புறமிருந்து பைஅத் வாங்குவதற்கான கட்டளை பிறந்தது.

இதற்குச் சில மாதங்களுக்குப் பிறகு, 1889 –ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 –ஆம் தேதி லூதியானாவில் அஹ்மது ஜான் என்பரின் வீட்டில் பைஅத் வாங்கும் முதல் நிகழ்ச்சி நடைபெற்றது. ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் (ரலி) அவர்கள் முதன் முதலில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் அருளுக்குரிய கரங்களில் பைஅத் செய்தார்கள். அன்றைய தினம் 40 பேர் பைஅத்

செய்தனர். இவ்வாறு ஒரு ஜமாஅத் உருவானது. அன்றிலிருந்து தொடர்ந்து பைஅத்துகள் நடைபெற ஆரம்பித்தன.

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்னும் வாதம்

**1891** –ஆம் ஆண்டு ஒரு பெரும் மாறுதல் ஏற்பட்டது. முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் (இன்று வரை) எதிர்பார்த்துக் கொண்டிருந்த 'ஈஸா நபி' (இயேசு நாதர்) மரணித்து விட்டார் என்றும் அவரது ஆவியிலும் தத்துவத்திலும், ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை அனுப்பி இருப்பதாகவும் இறைவன் இல்ஹாம் மூலம் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு அறிவித்தான். இப்படிப்பட்ட இல்ஹாம்கள் தொடர்ந்து வந்த வண்ணம் இருந்த காரணத்தால், ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இதனை அறிக்கை மூலம் மக்களுக்குத் தெரிவித்தார்கள்.

இந்த அறிவிப்பு வெளியானதும் இந்தியா முழுவதும் அன்னாருக்கு கடும் எதிர்ப்பு உருவானது. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களைப் புகழ்ந்து அறிக்கை வெளியிட்டுப் பாராட்டுத் தெரிவித்த ஆலிம்கள்தான் இந்த எதிர்ப்பில் முன்னணியில் இருந்தனர். குறிப்பாக 'பராஹீனே அஹ்மதிய்யா' என்னும் நூலுக்கு மதிப்புரை வழங்கி, அதனை தமது பத்திரிகையான 'இஷாஅத்துஸ் ஸுன்னா' –வில் வெளியிட்ட மவ்லவி முஹம்மது ஹுஸைன், இப்போது ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு எதிரான கிளர்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டார். "நான் தான் அவரது முன்னேற்றத்திற்குக் காரணமாக இருந்தேன்; நானே அவரை வீழ்ச்சி அடையச் செய்வேன்" என்று முழங்கினார். அவர் லூதியானா நகருக்கு வந்து ஹஸ்ரத் அஹ்மது (அலை)

அவர்களைத் தம்மோடு விவாதத்திற்கு வருமாறு சவால் விட்டார். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களும் அந்த சவாலை ஏற்று அவரோடு விவாதத்தில் ஈடுபட்டார்கள். அது **1891 –**ஆம் ஆண்டு ஜூலை மாதம் **20 –**ஆம் தேதி தொடங்கி பல நாட்கள் நடைபெற்றது. 'லூதியானாவில் நடைபெற்ற அல்ஹக் என்னும் விவாதம்' என்ற தலைப்பில் நூல் வடிவில் அது வெளிவந்துள்ளது. இந்த விவாதத்திற்குப் பிறகு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பல நாட்கள் லூதியானாவில் தங்கியிருந்து பின்னர் காதியானுக்குத் திரும்பி வந்தார்கள்.

பின்னர் மீண்டும் லூதியானா சென்று **28.09.1891** அன்று டெல்லி சென்றடைந்தார்கள். அங்கு மவ்லவி நதீர் ஹுஸைன் என்னும் அஹ்லே ஹதீஸ் தலைவர் விவாதம் செய்ய முன் வந்தார். ஜுமுஆ மசூதியில் விவாதத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் இந்த விவாதத்தைப் பற்றியோ அதற்குரிய நிபந்தனைகளைப் பற்றியோ ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களிடம் கலந்து பேசவோ ஆலோசனை செய்யவோ இல்லை. குறிப்பிட்ட நேரத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை அழைக்க ஒருவரை அனுப்பினார்.

ஆனால் அங்கு நிலவிய குழப்பமான சூழ்நிலையை அறிந்த ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இந்த விவாதத்தில் கலந்து கொள்ள மறுத்து விட்டார்கள். இதனை அவர்கள் வெளியிட்ட அறிக்கை ஒன்றில், "(இவ்விஷயத்தில் என்னோடு கருத்து மாறுபாடு கொள்பவர்) திருக்குர்ஆன்படி ஹஸ்ரத் ஈஸப்னு மர்யம் மரணிக்காமல் உயிரோடு இருப்பதாக இறைவன் மீது

ஆணையிட்டுக் கூற வேண்டும். அவ்வாறு ஆணையிட்ட ஒரு வருட காலத்திற்குள், அவ்வாறு சத்தியம் செய்தவர் இறைவன் புறமிருந்து கிடைக்கும் ஏதாவதொரு தண்டனைக்கு ஆளாகவில்லை என்றால், நான் பொய்யனென்று நிரூபிக்கப்பட்டு விடும்; மேலும் நான் இதுவரை எழுதியுள்ள நூல்கள் அனைத்தும் தீக்கிரையாக்கப்படும்" என்று குறிப்பிட்டார்கள். அதற்கென ஒரு நாளையும் குறிப்பிட்டார்கள்.

இந்த விளம்பரத்தை அறிந்த மவ்லவி நதீர் ஹுஸைன் சாஹிபும் அவரது சீடர்களும் அதிர்ச்சி அடைந்தனர். பெரும்பாலான மக்கள் அவ்வாறு சத்தியம் செய்வதில் தவறேதும் இல்லை என்று கூறினார்கள். அதன்படி டெல்லியிலுள்ள மிகப்பெரும் ஷாஹி மஸ்ஜிதில் குறிப்பிட்ட ஒருநாள் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் ஒன்று திரண்டனர். இந்நிலையில் அங்கு போக வேண்டாம் என பலர் தடுத்தும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது சீடர்கள் 12 பேருடன் குறிப்பிட்ட நேரத்தில் ஜாமிஆ மஸ்ஜிதுக்குச் சென்றார்கள். அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு மத்தியில் நடந்து சென்று மஸ்ஜிதின் மிஹ்ராபின் பக்கம் அமர்ந்தார்கள்.

அங்கு ஏற்படும் நிலைமையைச் சமாளிப்பதற்கும், அமைதியை நிலைநாட்டுவதற்கும் காவல்துறை அதிகாரியும், நூற்றுக்கணக்கான காவல்துறையினரும் வந்திருந்தனர். ஏராளமான மக்கள் கூட்டத்தில், கல்லெறிந்து கலகம் விளைவிப்பதற்கும் எதிரிகள் ஆயத்தமாக இருந்தனர். விவாதம் தொடங்குவதற்கு முன்னதாக நடைபெற்ற உரையாடலிலேயே

தோல்வி கண்ட உலமாக்கள் தொடர்ந்து விவாதம் செய்ய மறுத்து விட்டனர். முன்னர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கூறியதுபோன்று சத்தியம் செய்வதற்கும் எவரும் தயாராக இல்லை. அப்போது அலிகாரைச் சேர்ந்த காஜா முஹம்மது யூசுப் என்பவர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களிடம் தமது கொள்கைகளை எழுதி மக்களுக்கு மத்தியில் படித்துக் காட்டுமாறு கூறினார். இந்த வேண்டுகோளை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் எதிரணி ஆலிம்கள் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது கொள்கைகளை மக்களுக்கு மத்தியில் படித்துக் காட்டினால், அன்னார் திருக்குர்ஆனையோ, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையோ ஏற்றுக் கொள்ளாமல், இஸ்லாத்திற்கு மாறுபட்ட கொள்கைகளைக் கொண்டிருக்கிறார்கள் என்ற தங்களின் பொய்ப் பிரச்சாரம் வெட்டவெளிச்சமாகி விடும் என்ற பயத்தினால் அவர்கள் இந்த ஏற்பாட்டிற்கு இணங்கவில்லை.

நிலைமை முற்றி கட்டுக் கடங்காமல் சென்று கொண்டிருப்பதை கண்ட காவல் துறையினர் தொடர்ந்து எந்த விவாதமும் நடத்தக் கூடாது என்று தடுத்தார்கள். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களையும் அவர்களோடு இருந்த சீடர்கள் 12 பேரையும் காவல் துறையினர் பாதுகாப்பாக அவர்கள் தங்கியிருந்த இடத்திற்கு அனுப்பி வைத்தனர். குழப்பம் விளைவிக்கும் நோக்கத்தோடு அங்கு கூடியிருந்தவர்களையும் கலைந்து செல்லச் செய்தனர். சில நாட்கள் அங்குத் தங்கியிருந்த பின்னர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் லாஹூர்,

ஸியால்கோட், ஜலந்தர், லூதியானா போன்ற இடங்களுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்கள்.

## பாதிரி அப்துல்லாஹ் ஆத்தமுடன் நடைபெற்ற விவாதம்

1893 –ஆம் ஆண்டு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையே ஒரு விவாதம் நடைபெற்றது. கிறிஸ்தவ சமயத்தின் பிரதிநிதியாக பாதிரி அப்துல்லாஹ் ஆத்தம் விவாதத்தில் கலந்து கொண்டார். எழுத்து மூலம் நடைபெற்ற இவ்விவாதம் 'ஜங்கே முகத்தஸ்' என்னும் பெயரில் நூலாக வெளி வந்துள்ளது. இந்த விவாதத்தில் தோல்வி கண்ட கிறித்தவ பாதிரிமார்கள் குழப்பம் விளைவித்துக் கொண்டிருந்தனர். இந்த விவாதத்தின்போது நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கதாகும். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை இழிவுபடுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் கிறிஸ்தவ பாதிரிகள் கண் பார்வையற்ற சிலரையும், உடல் ஊனமுற்ற சிலரையும் விவாதம் நடந்த இடத்திற்கு அழைத்து வந்தனர். விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அவர்களை, ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் முன் நிறுத்தி, "நீங்கள் – நானே மஸீஹ் என்று வாதம் செய்கிறீர்கள். இயேசு கை கால் ஊனமுற்றவர்களையும் கண்பார்வையற்றவர்களையும் குணமாக்கினார். நீங்களும் இவர்களைக் குணப்படுத்தினால் தான் உங்கள் வாதத்தில் நீங்கள் உண்மையாளர் என்று நிரூபணமாகும்; அதற்காகவே நாங்கள் இந்த உடல் ஊனமுற்றவர்களை உங்கள் முன் அழைத்து வந்திருக்கிறோம்" என்று கூறினார்கள். கிறிஸ்தவர்களின் தந்திரமான இந்த

உபாயத்தைக் கண்டதும் அங்குக் கூடியிருந்த மக்கள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டது. கூடியிருந்த கிறிஸ்தவர்கள், மிர்ஸா சாஹிபைத் தாங்கள் அவமானத்திற்கும் தோல்விக்கும் உள்ளாக்கி விட்டோம் என்ற பெருமிதத்தில் மகிழ்ச்சியில் திளைத்திருந்தனர். ஆனால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இந்தக் கேள்விக்குப் பதில் அளித்ததும், அவர்களின் பெருமிதம் அவமானமாக மாறியது.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பதிலாகக் கூறினார்கள்: ‘‘இயேசு மஸீஹ் இப்படிப்பட்ட நோயாளிகளையும், ஊனமுற்றவர்களையும் குணப்படுத்தினார் என்பது உங்கள் கொள்கையாகும். அதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இத்தகைய அற்புதங்களை நிகழ்த்தியதாகக் கூறப்பட்டிருப்பது ஆன்மீகமான பொருளிலேயே அன்றி, பௌதீகமான பொருளில் அல்ல என்பதே எங்கள் கொள்கையாகும். இயேசு கிறிஸ்து அவர்கள் ஆன்மீக நோயாளிகளையும், ஊனமுற்றவர்களையும் குணமாக்கினார்கள் என்று திருக்குர்ஆனின் அடிப்படையில் நாங்கள் நம்புகின்றோம். பைபிள் இதோடு இன்னொன்றையும் கூறுகின்றது. அதாவது, உங்களிடம் கடுகளவாவது விசுவாசம் இருந்தால், நான் காட்டியதை விட அதிகமான அற்புதங்களை உங்களால் காட்ட முடியும் என்று இயேசு கூறியதாகப் பைபிள் கூறுகிறது. எனவே இந்த நோயாளிகளை உங்கள் முன்னிறுத்தி பைபிள் கூறுவது போல் உங்களிடம் கடுகளவாவது விசுவாசம் இருந்தால் இயேசு செய்ததைப் போன்று, இவர்களைக் குணப்படுத்துங்கள் என்று

நாங்கள் உங்களிடம் கேட்கிறோம். நீங்கள் அப்படிச் செய்தால் உங்கள் மதம் உண்மையானது என்று ஒப்புக் கொள்கிறோம். ஆனால் நீங்கள் இவர்களைக் குணப்படுத்தவில்லை என்றால் உங்களிடம் கடுகளவு கூட விசுவாசம் இல்லை என்பதையும் உங்கள் மதம் பொய்யானது என்பதையும் நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டும்.''

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் இந்தப் பதிலைக் கேட்டதும், பாதிரிகள் பதிலேதும் கூற முடியாமல் மௌனம் பூண்டு தலை குனிந்த வண்ணம் தாங்கள் அழைத்து வந்த நோயாளிகளை அவ்விடத்தை விட்டு அகலச் செய்தனர். இந்த விவாதத்தின்போது கிறிஸ்தவர்களின் வாதங்களை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் எப்படி முறியடித்தார்கள் என்பதை 'ஜங்கே முகத்தஸ்' என்னும் நூலில் விரிவாகக் காணலாம்.

## சர்வ சமய மாநாட்டில் நிகழ்த்திய சொற்பொழிவு

**1896** –ஆம் ஆண்டு சில அறிஞர்கள், உலகத்தில் காணப்படும் அனைத்து மதங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு தத்தமது மதங்களின் கொள்கையினை எடுத்துரைப்பதற்காக பஞ்சாபிலுள்ள லாஹூரில் ஒரு சர்வ சமய மாநாட்டிற்கான ஏற்பாட்டைச் செய்தனர். இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துபவர்கள் தமது உரையில் பிற மதத்தையோ அதனைச் சார்ந்தவர்களையோ தாக்கிப் பேசாமல் தமது மதத்தின் கொள்கைகளை மட்டும் எடுத்துரைக்க வேண்டும் என்பது முக்கியமான நிபந்தனையாகும். இந்த நிபந்தனைக்கு உட்பட்டு பின்வரும் ஐந்து விஷயங்களைப் பற்றி தமது மதத்தின்

கொள்கைகளைக் கட்டுரை வடிவில் எழுதுமாறு எல்லா மத அறிஞர்களுக்கும் அழைப்புகள் விடுக்கப்பட்டன.

1) மனிதனின் உலகியல், ஒழுக்க, ஆன்மீக நிலைகள்.
2) மறுவுலக வாழ்வு.
3) உலகில் மனிதன் படைக்கப்பட்டதன் நோக்கமும் அதை நிறைவேற்றுவதற்கான வழிகளும்.
4) மனிதன் செய்யும் செயல்களின் பலன்கள் இவ்வுலகிலும் மறுவுலகிலும் கிடைப்பதெப்படி?
5) இறை ஞானம் பெறுவதற்கான வழிகள்.

இந்த மாநாட்டின் அமைப்பாளர்கள் காதியானுக்கு வந்து ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களைச் சந்தித்து மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுமாறு கேட்டுக் கொண்டனர். அவர்களின் இந்த முயற்சிக்கு தாம் முழுமையான ஆதரவும், ஒத்துழைப்பும் தருவதாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் வாக்குறுதி அளித்தார்கள். உடல் நலமில்லாத நிலையிலும் இந்த மாநாட்டில் படிப்பதற்காக ஒரு கட்டுரையை எழுதினார்கள். அப்போது, ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு, “உம்முடைய கட்டுரை மற்ற கட்டுரைகளை விடச் சிறந்து விளங்கும்” என்ற இல்ஹாம் (இறை அறிவிப்பு) கிடைத்தது. அதன் அடிப்படையில் அவர்கள் தமது கட்டுரை மற்ற கட்டுரைகளை விடச் சிறந்து விளங்கும் என இறைவன் தமக்கு வாக்குறுதி அளித்திருப்பதாக விளம்பரம் செய்தார்கள்.

இந்த மாநாடு 1896 –ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26, 27, 28 ஆகிய நாட்களில் நடைபெற்றது. மாநாட்டிற்கு ஆறு நடுவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இந்தியாவிலுள்ள புகழ்பெற்ற மார்க்க அறிஞர்கள் கலந்து கொள்கின்ற காரணத்தால் ஆயிரக்கணக்கான மக்கள் மாநாட்டில் கலந்து கொண்டனர். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் உரை டிசம்பர் மாதம் 27 –ஆம் நாள் பிற்பகல் 1.30 மணி முதல் 3.30 மணி வரை நடைபெறும் என நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களால் மாநாட்டிற்குச் செல்ல முடியவில்லை. எனவே ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் கட்டுரையை அன்னாரது சீடர்களில் ஒருவரான ஹஸ்ரத் மவ்லானா அப்துல் கரீம் சாஹிப் மாநாட்டில் படித்தார். அவர் அந்த உரையைப் படிக்க ஆரம்பித்ததும் மாநாட்டுப் பந்தலில் அமைதி நிலவியது. இரண்டு மணி நேரம் எப்படிச் சென்றது என்று அறியாத வண்ணம் அனைவரும் உரையைச் செவிமடுப்பதில் ஆழ்ந்திருந்தனர். இந்தக் கட்டுரைக்காக ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது; ஆனால் கட்டுரையில் முதல் பகுதி கூட முற்றுப் பெறாதிருந்தது. இந்த உரைக்குப் பின் உரையாற்ற வேண்டிய மவ்லவி முபாரக் அலி என்பவர் தமக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தையும் இந்தக் கட்டுரையைப் படித்து முடிப்பதற்காக எடுத்துக் கொள்ளலாம் எனக் கூறினார். மக்கள் அதை மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்றனர். மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) தொடர்ந்து படித்தார். மாலை 4.30 மணியாகி, மாநாடு முடியும் நேரமும் வந்துவிட்டது; ஆனால் இன்னும் கட்டுரையின் முதல் பகுதி கூட படித்து முடிக்கப்படவில்லை. அங்குப் பெருந்திரளாகக் கூடியிருந்த

மக்கள் உரை முழுவதையும் கேட்க வேண்டும் என்ற தங்களின் ஆவலை வெளிப்படுத்தினார்கள். இந்த உரையை முழுவதும் படித்து முடிப்பதற்காக மாநாட்டை மேலும் ஒருநாள் நீடிக்க வேண்டும் என அங்குக் கூடியிருந்த மக்கள் அனைவரும் கேட்டுக் கொண்டனர். இதனை ஏற்று 28 –ஆம் தேதிக்காக நிர்ணயிக்கப்பட்டிருந்த நிகழ்ச்சிகளுக்குப் பிறகு, 29 –ஆம் தேதியன்று மேலும் ஒருநாள் மாநாடு நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது. வேறு சில மார்க்கத்தைச் சேர்ந்த அறிஞர்களும் 29 –ஆம் தேதி தமக்கும் நேரம் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதால் அன்று காலை 9.30 மணிக்கே மாநாட்டு நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. ஆனால் காலை 9.00 மணிக்கே மாநாட்டு மண்டபம் நிரம்பி வழியத் தொடங்கியது. காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட உரை பிற்பகல் 1.30 மணிக்கு நிறைவு பெற்றது. இவ்வாறு இரண்டு நாளில் ஏழரை மணி நேரத்தில் இந்த உரை படித்து முடிக்கப்பட்டது.

இந்த உரையே அங்குப் படிக்கப்பட்ட எல்லா உரைகளையும் விடச் சிறந்தது என்று அங்குக் கூடியிருந்த அனைத்து மார்க்கத்தைச் சேர்ந்தவர்களும் ஒரு முகமாகத் தீர்ப்பளித்தனர். சுருக்கமாகக் கூறுவதென்றால், இந்தப் பேருரை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்குக் கிடைத்த மிகப்பெரும் வெற்றியாகும். பஞ்சாபிலும், அதற்கு வெளியிலும் ஏராளமான பத்திரிகைகள் இந்த உரையைப் பாராட்டிக் கட்டுரைகள் எழுதின.

இந்தப் பேருரை 'இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம்' (The Philosophy of the Teachings of Islam) என்னும் பெயரில் அரபி, ஃபார்ஸி, ஆங்கிலம், உருது, பிரெஞ்சு,

ஹஸ்பான்வீ, சீன மொழி, பர்மிய மொழி, சிங்களம், மலையாளம் முதலிய உலகின் பல மொழிகளில் நூலாக வெளிவந்துள்ளது. தமிழிலும் இது மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். (தற்போது இந்நூலின் இரண்டாம் பதிப்பு வெளிவந்து விட்டது.)

## பண்டிட் லேக்ராமின் மரணம்

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் காலத்தில் ஆரிய சமாஜத்தைச் சேர்ந்தவர்கள் இஸ்லாத்தையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் மிகவும் இழிவான முறையில் தாக்கிப் பேசிக் கொண்டிருந்தனர். ஆரிய சமாஜின் தலைவர் பண்டிட் லேக்ராம் இஸ்லாத்தை இழிவுபடுத்த மிகவும் அற்பமான வழிகளைக் கையாண்டார். அவரது ஏளனப் பேச்சும், பரிகாசமும் உள்ளத்தைப் புண்படுத்தின. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள், அவர் எழுப்பிய ஆட்சேபனைகள் அனைத்திற்கும் தொடர்ந்து பதிலளித்து வந்தார்கள். மேலும் பலமுறை அவருக்கு எச்சரிக்கை விடுத்தார்கள். ஆனால் இஸ்லாத்தின் மீது கடும் பகையும் விரோதமும் கொண்ட பண்டிட் லேக்ராம், இஸ்லாத்தையும் அதன் தூய ஸ்தாபகரையும் இழிவு படுத்துவதில் மும்முரமாக ஈடுபட்டார். எனவே ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமக்கு இறை அடையாளத்தை வெளிப்படுத்திக் காட்டுமாறு இறைவனிடம் பிரார்த்தனை செய்தார்கள். இறைவன் புறமிருந்து கிடைத்த அறிவிப்பின் அடிப்படையில் லேக்ராம் தனது நடைமுறைகளை விட்டு விலகவில்லை என்றால், இறைவனின் மிகப் பெரும் தண்டனைக்கு ஆளாவார் என எச்சரிக்கை செய்தார்கள். லேக்ராமோ இந்த

தெய்வீக எச்சரிக்கையை உதாசீனப்படுத்தியது மட்டுமல்லாமல், எவ்வளவு காலத்திற்குள் தமக்கு இந்தத் தண்டனை கிடைக்கும் என்று ஏளனத்தோடு கேட்டார். அதற்கு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் 1893 –ஆம் ஆண்டு பிப்ரவரி 20 –ஆம் நாள் கிடைத்த இல்ஹாமின்படி அன்றிலிருந்து 6 ஆண்டுகளுக்குள் ஒரு பெருநாளுக்கு அடுத்த நாள் அவர் அல்லாஹ்வின் மிகப்பெரும் தண்டனைக்கு ஆளாவார் எனவும், ஆனால் இதற்கிடையில் இஸ்லாத்திற்கு எதிரான தமது போக்கை மாற்றிக் கொண்டு தமது செயல்களுக்காக பாவமன்னிப்புக் கோரினால், இந்த இறை ஆக்கினையிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்றும் அறிவித்தார்கள். ஆனால் அவர் இதையும் புறக்கணித்து விட்டு தொடர்ந்து இறைவனின் கோபத்திற்காளாகும் விதத்தில் இறை நிந்தனை செய்வதில் மிகவும் இழிவான வழிமுறையினைக் கையாண்டு வந்தார்.

இதன் காரணமாக, இறைவனின் தண்டனை குறித்த முன்னெச்சரிக்கைக்கு ஏற்ப 1897 –ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6 –ஆம் தேதி மிகவும் இழிவான விதத்தில் இறைவனது தண்டனைக்கு ஆளாகி மரணமடைந்தார். இதன் மூலம் இஸ்லாத்தின் சிறப்பையும், ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் உண்மையையும் இறைவன் எடுத்துக் காட்டினான்.

## டாக்டர் மார்ட்டின் கிளார்க்

டாக்டர் மார்ட்டின் கிளார்க் என்னும் பாதிரி தம்மைக் கொலை செய்ய அப்துல் ஹமீத் என்பவரை நியமித்ததாக 1897 –ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் நாள் ஹஸ்ரத் அஹ்மது (அலை)

அவர்கள் மீது பொய்க் குற்றம் சுமத்தி குர்தாஸ்பூர் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடுத்தார். M.W. டக்லஸ் என்னும் மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. முக்கிய சாட்சியான அப்துல் ஹமீத் என்பவரை விசாரிக்கும்போது அவர் முன்னுக்குப்பின் முரணான வாக்குமூலம் அளித்தார். இதனைக் கவனித்த நீதிபதி 27 நாட்களில் நான்கு முறை விசாரணை செய்து அது பொய் வழக்கு எனத் தீர்ப்பளித்தார். நீதிபதி தமது தீர்ப்பில் கூறியதாவது,

“நாம் அவருடைய (அப்துல் ஹமீதின்) வாக்குமூலத்தைக் கவனித்தபோது அதில் முன்னுக்குப் பின் முரணான கருத்துகள் இருப்பதை அறிந்தோம். அவர் ஒரு கிறிஸ்தவப் பிரச்சார நிலையத்தில் தங்கி இருந்ததைப் பற்றியும் அறிந்தேன். அவருடைய முரண்பட்ட வாக்குமூலங்களிலிருந்து அவருக்கு யாரோ சொல்லிக் கொடுத்து அதன்படி அவர் வாக்குமூலம் அளிக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டேன். எனவே காவல்துறை கண்காணிப்பாளர் (Superintendent) முன்னிலையில் அவரிடம் வாக்குமூலம் வாங்குமாறு கேட்டுக் கொண்டேன். அதன்படி அவரைக் கிறிஸ்தவ பிரச்சார நிலையத்தில் இருந்து அகற்றி காவல்துறை அதிகாரிகள் தங்கள் கண்காணிப்பில் வைத்தனர். பிறகு வாக்குமூலம் வாங்க ஆரம்பித்தவுடன், அவர் காவல்துறை அதிகாரிகளின் கால்களில் விழுந்து அழுதவாறு பின்வருமாறு கூறினார். கிறிஸ்தவப் பாதிரிகள் என்னை அச்சுறுத்தி அவ்வாறு கூற வைத்தனர். வாழ்க்கையை வெறுத்துத் தற்கொலை செய்து கொள்ளக்கூட நான் தயாராக இருக்கிறேன். உண்மையில் நான் மிர்ஸா

சாஹிபைப் பற்றி இதுவரை கொடுத்த வாக்குமூலங்கள் அனைத்தும் பொய்யாகும். கிறிஸ்தவ மிஷனிலுள்ள பாதிரிகள் கற்றுக் கொடுத்தவற்றைத்தான் நான் நீதிமன்றத்தில் கூறினேன். மிர்ஸா சாஹிப் மார்ட்டின் கிளார்க்கைக் கொல்ல என்னை அனுப்பவே இல்லை. எனக்கும் மிர்ஸா சாஹிபுக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இருந்ததில்லை. பல பெயர்கள் எனக்கு மறந்து போய் விடும் என்ற அச்சத்தில் அவற்றை எனது உள்ளங்கையில் எழுதித் தருவார்கள். மிர்ஸா சாஹிபை இழிவுபடுத்துவதில் நிச்சயம் நாம் வெற்றி பெறுவோம் என்று பாதிரிகள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வார்கள்.'' இவ்வாறு அப்துல் ஹமீத் விளக்கமான வாக்குமூலம் அளித்தார்.

நீதிபதி டக்லஸ் தமது தீர்ப்பில் மேற்கண்டவாறு விளக்கம் கூறி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை மிகுந்த கண்ணியத்தோடும், மரியாதையோடும் வழக்கிலிருந்து விடுவித்தார். இந்த வழக்கில் பொய் சாட்சியம் கூற ஆரிய சமாஜத்தைச் சேர்ந்தவர்களும், மவ்லவி முஹம்மத் ஹுஸைன் பட்டாலவியும் நீதிமன்றத்திற்கு வந்திருந்தனர். நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு இவர்கள் அனைவருக்கும் பெருத்த அவமானமாக அமைந்தது.

நீதிபதி தமது தீர்ப்பில், பொய் வழக்குத் தொடுத்தமைக்காக மார்ட்டின் கிளார்க் மீது வழக்குத் தொடுப்பதற்கும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு அனுமதி வழங்கினார். ஆனால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள், தமது வழக்கு வானத்தில் நடைபெறுகிறது என்றும், அல்லாஹ் தகுந்த தீர்ப்பளிப்பான் என்றும் கூறி விட்டார்கள்.

***அஸ்ஸூல்ஹ் ஹைர்:***

இந்நாட்களில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் 'அஸ்ஸூல்ஹ் ஹைர்' என்னும் பெயரில் ஒரு நூல் எழுதினார்கள். அதில் இஸ்லாத்திற்கு எதிராக அதன் விரோதிகள் செய்து வரும் ஆட்சேபணைகளுக்கு பதிலளித்து அவற்றை முறியடிக்க பத்தாண்டு காலம் அவகாசம் வேண்டும் என்றும், அதுவரை தமக்கு எதிராகச் செய்யப்பட்டு வரும் எதிர்ப்புகளை நிறுத்தி வைக்க வேண்டும் என்றும் முஸ்லிம் உலமாக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள். ஏனெனில், இஸ்லாத்தின் சார்பாக வாதிடும் சக்தி சிதறிப் போகின்றது என்றும், தாம் உண்மையாளர் இல்லை என்றால் இந்தப் பத்து வருட காலத்திற்குள் தாம் அழிக்கப்பட்டு விடுவேன் என்றும் கூறினார்கள். ஆனால், வெறுப்பும் வைராக்கியமும் கொண்ட ஆலிம்கள் இந்த வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளவில்லை.

## மார்க்கங்களிடையே நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஆலோசனை

1897–98 –ல் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் மதங்களுக்கு இடையே தீவிரமான விவாதங்களும், அதைத் தொடர்ந்து பயங்கரமான கலவரங்களும் நடைபெற்றன. இத்தருணத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அப்போதைய வைஸ்ராயிடம் விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்தார்கள். அதில் பல்வேறு மார்க்கங்களைச் சேர்ந்த மக்களுக்கிடையில் நிலவும் வெறுப்பு, குரோத மனப்பாங்கு இவற்றின் விளைவாக ஏற்படும் மதக்கலவரங்களைப் போக்கி சாந்தியையும், சமாதானத்தையும்

நிலவச் செய்ய கீழ்வரும் ஆலோசனைகளைத் தெரிவித்து இருந்தார்கள்.

1. ஒவ்வொரு மதத்தின் பிரதிநிதியும் விவாதங்களின்போதும் மதப் பிரச்சாரம் செய்யும்போதும் பிற மதங்களைக் குறித்து பழித்துப் பேசவும், அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளைக் கூறி ஏளனம் செய்யவும் அனுமதிக்கப்படக் கூடாது. மாறாக, தத்தமது மதங்களின் போதனைகளையும், அவற்றின் சிறப்பம்சங்களையும் மட்டுமே எடுத்துக் கூற வேண்டும். அதன் மூலம் பிற மதத்தைச் சேர்ந்தவர்களின் மனம் வேதனைக்கு உள்ளாகாமலும் அவர்களின் உணர்வுகள் பாதிக்கப் படாமலும் இருக்க வகை ஏற்படும்.
2. இந்த செயல்திட்டம் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் வேறொரு வழியைப் பின்பற்றலாம். அதாவது, தமது மதத்தில் ஒரு குறைபாடு இருந்தும், அதை மறைத்து விட்டு அதே குறைபாடு மற்ற மதங்களில் இருப்பதாகக் குற்றம் சாட்டக் கூடாது.
3. தங்களுடைய மத நூல்களிலிருந்து மட்டுமே சான்றுகளையும், ஆதாரங்களையும் எடுத்துக் காட்டி பிரச்சாரம் செய்ய வேண்டும்.

சுருக்கமாக, ஏனைய மதங்களை குறை கூறுவதற்குப் பதிலாக தமது மதத்தின் சிறப்புகளையும் நன்மைகளையும் எடுத்துக் கூறினால், மதங்களுக்கு மத்தியில் சகிப்புத் தன்மை ஏற்படும். இனக் கலவரங்களையும் தவிர்க்க முடியும்.

ஆனால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் இந்த ஆலோசனையை மத பண்டிதர்களும், பிரச்சாரகர்களும், பிரதிநிதிகளும் ஏற்றுக் கொள்ளவில்லை. இறுதியாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தம் மறைவிற்கு (26.05.1908) ஓரிரு தினங்களுக்கு முன் 'சமாதானத் தூது' என்னும் தலைப்பில் ஒரு சிறு நூல் எழுதினார்கள். இந்தத் தூதுச் செய்தியில் இந்தியாவின் இரு முக்கிய மார்க்கங்களைச் சார்ந்த இந்துக்கள், முஸ்லிம்களுக்கு குறிப்பாகவும், பிற மார்க்கங்களுக்குப் பொதுவாகவும் ஒருமைப்பாடு, ஒற்றுமை, அன்பு, நேசம் இவற்றின் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார்கள். ஆனால் இந்த 'சமாதானத் தூதை'–யும் இந்த மதத் தலைவர்கள் எவரும் ஏற்கவில்லை. இதன் விளைவாக இந்தியாவிலுள்ள சமுதாயங்களுக்கு மத்தியில் பகைமையும் வெறுப்புணர்வும் இன்று வரை இருந்து வருகிறது. ஏராளமான உயிர்களும் பொருள்களும் சொத்துக்களும் நஷ்டமாகும் அளவுக்கு இனக் கலவரங்களும் நடைபெறுகின்றன.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் 'சமாதானத் தூது' என்னும் சிறு நூலைப் பற்றி, அது வெளிவந்த 40 ஆண்டுகளுக்குப் பின் 'ஃபிராண்டியர் மெயில்' என்னும் ஆங்கில ஏடு தனது 12.12.1948 இதழில் பின்வருமாறு எழுதியது:

"காந்தியடிகள் இந்திய அரசியல் வானில் தோன்றுவதற்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர், 1889 –ஆம் ஆண்டில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது தாமே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என அறிவித்தார்கள். அவர் தமது சமாதானத் தூது என்னும் நூலில் இந்தியாவிலுள்ள பல்வேறு சமுதாயங்களுக்கு மத்தியில் நேச

உணர்வும் பாசப் பிணைப்பும் மலர்வதற்கு நல்ல பல திட்டங்களைக் கூறியிருந்தார். மக்களிடையே மத சகிப்புத் தன்மையையும், ஒற்றுமையையும், சகோதரத்துவத்தையும் உருவாக்க முனைந்தார். எதிர்காலத்தில் நிகழ இருப்பவற்றை தமது தொலைநோக்கால் – தீர்க்கதரிசனமாக கண்டுணர்ந்து அவற்றைத் தவிர்க்கும் வழிகளையும் கூறிச் சென்ற இப்பெருந்தகை உண்மையிலேயே பாராட்டுக்குரியவர்."

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் போதனைகளின்படி செயலாற்றி இருந்தால் நிச்சயமாக இனக்கலவரங்களும் இழப்புகளும் ஏற்பட்டிருக்காது.

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றம்

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் 1889 –ஆம் ஆண்டு தம்மை ஏற்றுக் கொள்பவர்களுக்கென தனியான ஓர் அமைப்பை (ஜமாஅத்தை) ஏற்படுத்தினார்கள். பிரச்சாரப் பணிகளும், தஃலீம், தர்பிய்யத் (கல்வி, ஒழுக்க மேம்பாட்டிற்கான) பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

1901 –ஆம் ஆண்டு இந்தியாவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெற்றது. அப்போது ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது தமது ஜமாஅத்தைச் சேர்ந்தவர்கள் தங்களை அஹ்மதி முஸ்லிம்கள் என்று பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்கள். அத்தோடு தமது ஜமாஅத்திற்கு அஹ்மதிய்யா ஜமாஅத் என்று பெயரும் இட்டார்கள்.

### *ரிவியூ ஆஃப் ரிலீஜியன்ஸ் என்னும் ஆங்கில ஏடு:*

ஐரோப்பிய நாடுகளில் இஸ்லாமியப் பிரச்சாரம் செய்வதற்காக ஆங்கிலத்தில் ஒரு மாத ஏட்டைத் துவக்க வேண்டும் என 1902 –ல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அதன்படி ரிவியூ ஆஃப் ரிலீஜியன்ஸ் என்ற பெயரில் ஆங்கிலத்திலும் உருதுவிலும் ஒரு மாத ஏடு வெளிவரத் தொடங்கியது. இன்றும் ஐரோப்பா, அமெரிக்கா, மற்றுமுள்ள ஆங்கிலம் அறிந்த மக்கள் வாழும் இடங்களிலெல்லாம் மிகப் பரவலாக இந்த ஆங்கில ஏடு வெளியிடப்பட்டு இஸ்லாமியப் பிரச்சாரத்திற்காக அருந்தொண்டாற்றி வருகின்றது.

## குத்பா இல்ஹாமிய்யா

(இறை அறிவிப்பின் அடிப்படையில் நிகழ்த்தப்பட்ட பேருரை).

1902 –ஆம் ஆண்டு கொண்டாடப்பட்ட ஹஜ்ஜுப் பெருநாள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்த ஆண்டில்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையின்படி – இல்ஹாமே இலாஹியின் அடிப்படையில் முழுக்க முழுக்க அரபு மொழியில் மிகச்சிறந்த அருளுக்குரிய ஒரு குத்பாவை ஓதினார்கள். இந்தக் குத்பா ஓதப்பட்ட அரபு மொழி மிக மிக அசாதாரணமானதாகவும், அற்புதமானதாகவும் அமைந்திருந்தது. அதில் அடங்கியிருந்த இறை ஞானம் மிகப்பெரும் மார்க்க அறிஞர்களையெல்லாம் வியப்பில் ஆழ்த்தியது. முற்றிலும் அரபு மொழியிலேயே ஆற்றப்பட்ட இப்பேருரை ‘குத்பா இல்ஹாமிய்யா’ என்னும் பெயரில் வெளிவந்துள்ளது.

## கரம்தீன் என்பவர் தொடுத்த வழக்குகள்

**1902 –** ஆம் ஆண்டு இறுதியில் கரம்தீன் என்பவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக ஒரு மான நஷ்ட வழக்குத் தொடுத்தார். பஞ்சாபில் ஜஹ்லம் என்ற இடத்தில் விசாரணைக்கு வந்த இந்த வழக்கில் கலந்து கொள்வதற்காக **1903 –**ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்களைக் காண்பதற்கும் வரவேற்பதற்கும் ஜஹ்லம் இரயில் நிலையத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தார்கள். ஜஹ்லம் நகரத்திலும் பெருந்திரளான மக்கள் கூடியிருந்தார்கள். அன்று ஒரே நாளில் ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் பைஅத் செய்து அஹ்மதிய்யா இயக்கத்தில் சேர்ந்தார்கள். நீதிமன்றத்திலும் வழக்கு விசாரணையைக் கேட்பதற்காக ஏராளமானோர் கூடியிருந்தார்கள். முதல் நாள் விசாரணையிலேயே இந்த வழக்குப் பொய்யானது என்று நிரூபிக்கப்பட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கண்ணியத்தோடும் மரியாதையோடும் வழக்கிலிருந்து விடுவிக்கப் பட்டார்கள்.

**1903 –** ஆம் ஆண்டு முதல் ஜமாஅத் அற்புதமான விதத்தில் பல முன்னேற்றங்களைக் கண்டது. சில நாட்களில் ஐநூறு பேர் பைஅத் செய்யும் பாக்கியம் பெற்றனர். இவ்வாறு ஜமாஅத் உறுப்பினர்களின் எண்ணிக்கை இலட்சக்கணக்கில் பெருகி பஞ்சாப் மாநிலம் மட்டுமல்லாது முழு இந்தியாவிலும், இந்தியாவிற்கு வெளியேயும் ஜமாஅத்துகள் உருவாகத் தொடங்கின.

இந்த ஆண்டில் தான் ஆப்கானிஸ்தானிலுள்ள காபூலில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பெருமதிப்பிற்குரிய தோழரும், மிகப்பெரும் மார்க்க அறிஞருமான ஹஸ்ரத் சாஹிப் ஸாதா அப்துல் லத்தீப் சாஹிப் (ரலி) அவர்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்தார் என்ற ஒரே காரணத்திற்காக பாதி உடல் நிலத்தில் புதைக்கப்பட்டு கல்லால் அடித்து ஷஹீதாக்கப் பட்டார்கள். இரக்கமற்ற இந்த கொடுஞ் செயலின் காரணமாக இந்த நாடு இறைவனின் கோபத்திற்கு ஆளாகி, இந்த வன்செயலுக்குக் காரணமாக இருந்தவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் காலராவில் மாண்டு போனார்கள்.

***கரம்தீனின் இரண்டாவது வழக்கு:***

தமது முதல் வழக்கில் தோல்வி கண்ட கரம்தீன் ஜமாஅத்தின் எதிரிகளின் தூண்டுதலால், குர்தாஸ்பூர் நீதிமன்றத்தில் மீண்டும் ஒரு மான நஷ்ட வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கு மீண்டும் மீண்டும் தள்ளிப் போடப்பட்டுக் கொண்டே இருந்ததாலும், அடிக்கடி விசாரணைக்கு அழைக்கப்பட்டதாலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குர்தாஸ்பூரிலேயே தங்கியிருக்க நேரிட்டது.

கரம்தீன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக பயங்கரமான பொய்க் குற்றச்சாட்டுகளைக் கூறி வந்தார். எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது நூல் ஒன்றில் அவரைப் பற்றிக் குறிப்பிடும்போது ‘கத்தாப் – மிகப்பெரிய பொய்யன்’ என்று கூறியிருந்தார்கள். இதன் அடிப்படையிலேயே அவர் மான நஷ்ட வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கு இரண்டு

வருடங்கள் நீடித்துக் கொண்டு சென்றது. வழக்கை விசாரித்துக் கொண்டிருந்த நீதிபதியின் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அவரை அணுகி, எப்படியாவது அந்த வழக்கில் மிர்ஸா சாஹிபுக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டிருந்தார்கள்.

இதைக் கேள்வியுற்ற அஹ்மதி சகோதரர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இந்தச் செய்தியைத் தெரிவித்தனர். அப்போது படுத்துக்கொண்டிருந்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகுந்த கோபத்துடன், ‘‘என்ன! அவர் அல்லாஹ்வின் சிங்கத்தின் மீது கைவைக்க நினைக்கிறாரா? அவ்வாறு செய்தால் அதன் பலனை விரைவில் அவரே பார்க்க நேரிடும்!’’ என்று கூறினார்கள். இச்செய்தி உண்மையானதா? அல்லது பொய்யானதா? என்று தெரியவில்லை. ஆனால் அதன்பின் அந்த நீதிபதி பதவியிறக்கம் செய்யப்பட்டு அங்கிருந்து மாற்றப்பட்டார். பிறகு அமிர்தசரஸ் செஸன்ஸ் நீதிபதி திரு ஹெய்ரி என்பவரின் நீதிமன்றத்திற்கு இந்த வழக்கு விசாரணை மாற்றப்பட்டது. இந்த வழக்கின் கோப்புகளைப் படித்துப் பார்த்த அவர் மிகத் தெளிவாகத் தீர்ப்புச் சொல்லப்பட வேண்டிய இந்த வழக்கு இத்தனை காலம் நீடிக்கப்பட்டதற்காக வருத்தம் தெரிவித்தார். கரம்தீன் போன்றவர்களுக்கு ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் பயன்படுத்தியதை விடக் கடுமையான சொற்களைக் கூடப் பயன்படுத்தலாம் என்று கூறி இரண்டே மணி நேரத்தில் இந்த வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

## அமெரிக்காவைச் சார்ந்த அலெக்ஸாண்டர் டூயியின் அழிவு

அமெரிக்காவில் சிகாகோ நகரில் டாக்டர் அலெக்ஸாண்டர் டூயி என்பவர், தான் இயேசுவின் வருகைக்கான வழி அமைப்பதற்காகத் தோன்றியுள்ளதாக வாதித்தார். அதோடு மட்டும் நில்லாமல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை மிகவும் இழிவாகப் பேசியதன் காரணமாக இறைவனின் கோபத்திற்காளாகி அகால மரணமடைந்தார். டாக்டர் டூயி இஸ்லாத்தின் மிகப் பெரிய எதிரியாகத் திகழ்ந்ததோடு, தாம் இஸ்லாத்தை அழிப்பதற்காகத் தோன்றியிருப்பதாக வாதித்தார். தமது பிரார்த்தனை மூலம் உலகிலுள்ள முஸ்லிம்கள் அனைவரும் மரணமடைந்து விடுவர் என்றும், இஸ்லாம் வேரோடு அழிக்கப்படும் என்றும் கஅபா நாசமடைந்து விடும் என்றும் அவர் கூறினார். இதனை அறிந்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் 1902 ஆகஸ்டு மாதம் 8 –ஆம் நாள் அவருக்கு ஒரு திறந்த மடல் (Open Letter) வரைந்தார்கள். அதில் இயேசு மரணமடைந்து விட்டார். அவருடைய கல்லறை காஷ்மீரில் இருக்கிறது எனவும் அறிவித்து இதுபற்றி உண்மையை அறிய தம்மோடு பிரார்த்தனைப் போட்டிக்கு வருமாறு அழைத்தார்கள். “நம்மிருவருள் பொய்வாதியை உண்மையாளரின் வாழ்நாளிலேயே மரணமடையச் செய்யுமாறு நாம் இருவரும் பிரார்த்தனை செய்வோம்” என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்கள். (ரிவியூ ஆஃப் ரிலீஜியன்ஸ் 1902 செப்டம்பர் வெளியீடு)

டாக்டர் டூயி இந்தச் சவாலுக்கு எந்தப் பதிலும் அளிக்காமல் மௌனம் சாதித்தார். ஆனால் அமெரிக்காவின் 32 –க்கும்

மேற்பட்ட பத்திரிகைகள் இந்தச் சவாலை விளக்கமாகப் பிரசுரித்தன. டாக்டர் டூயி இடமிருந்து எந்தப் பதிலையும் பெறாத நிலையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவருக்கு மீண்டும் பின்வருமாறு ஒரு கடிதம் எழுதினார்கள்.

“எனக்கோ தற்போது 70 வயதாகி விட்டது. டாக்டர் டூயியோ தனக்கு 65 வயது என அவரே கூறுகிறார். அதாவது என்னை விட அவருக்கு வயது குறைவு. எனவே இது வயதைக் கொண்டு தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை அல்ல; உண்மையான தீர்ப்பை வழங்கக்கூடியவன் இறைவனே! எனவே உண்மை –யாளருக்குச் சாதகமான தீர்ப்பை அவனே வழங்குவான்.”

தமது இரண்டாவது கடிதத்திற்கும் பதில் கிடைக்கப் பெறாத நிலையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அமெரிக்கப் பத்திரிகைகளில் பின்வருமாறு அறிக்கை வெளியிட்டார்கள்:

“தன்னை எதிர் நோக்கியிருக்கும் இறையாக்கினையில் இருந்து அவரால் தப்பி ஓடவே முடியாது. அவரையும், அவருடைய ஸியோன் நகரத்தையும் பல்வேறு ஆபத்துகள் வந்து சூழும். எனது சவாலை ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் இறையாக்கினையை சந்திப்பதைத் தவிர அவருக்கு வேறு வழியில்லை.” (நியூ கமர்ஷியல் அட்வெர்டைஸர், நியூயார்க்)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தொடர்ச்சியான பல அறைகூவல்களையும் புறக்கணித்துக் கொண்டிருந்த டாக்டர் டூயியை பதிலளிக்குமாறு அமெரிக்கப் பத்திரிகைகள் வற்புறுத்திக் கொண்டிருந்தன. இறுதியாக டூயி தமது சொந்தப் பத்திரிகையில் பின்வருமாறு விளம்பரம் செய்தார்.

“இயேசு காஷ்மீரில் மரணமடைந்தார் என்று கூறி எனக்கு அடிக்கடி கடிதம் எழுதிக் கொண்டிருக்கும் முஹம்மதி மஸீஹ் ஒருவர் இந்தியாவில் இருக்கிறார். நான் ஏன் அவருக்குப் பதில் அளிக்கவில்லை என்று மக்கள் என்னிடம் கேட்கிறார்கள். இந்தக் கொசுக்களுக்கும், ஈக்களுக்கும் நான் பதிலளிக்க வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா? நான் அவற்றின் மீது ஒரு கால் வைத்தால் அவை நசுங்கிப் போய்விடும். அவைகளும் சில காலம் பறந்து விளையாட நான் சந்தர்ப்பம் அளிக்கிறேன்.” (லீவ்ஸ் ஆஃப் ஹீலிங்)

டூயியிடமிருந்து இந்தப் பதில் கிடைத்ததும், தனக்கும் டூயிக்கும் இடையில் நிகழும் இந்த ஆன்மீகப் போராட்டத்தின் இறுதித் தீர்ப்பை வழங்குமாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவனிடம் பிரார்த்தனை செய்தார்கள். அத்துடன் கர்வம் கொண்ட டூயியின் வீழ்ச்சிக் காலம் ஆரம்பமானது.

இந்நிலையில் 1905 –ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் நடைபெற்ற ஒரு மாபெரும் நிகழ்ச்சியில் முடிவுரையாற்றுவதற்காக எழுந்த டாக்டர் டூயி திடீரென தனது வலது கையில் ஏதோ விஷப்பூச்சி கடித்து விட்டதைப் போன்று துடித்துக் கொண்டிருந்தார். பின்னர் கட்டுப்படுத்த முடியாத விதத்தில் கைகளை வீசி மேஜை மீது அடிக்க ஆரம்பித்தார். தொடர்ந்து உடல் தளர்ந்து அதே இடத்தில் விழுந்து விட்டார். அது முதல் டாக்டர் டூயி வாத நோயால் அவதிப்பட்டு கை கால்களையும் நாக்கையும் அசைக்க முடியாத நிலைக்கு ஆளாகி படுக்கையில் வீழ்ந்தார். எந்தக் கால்களால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை

ஒரு பூச்சியை நசுக்குவதுபோன்று நசுக்குவேன் என்று கர்ஜனை செய்தாரோ அந்தக் கால்கள் வாதத்தால் செயலற்றவை ஆகின. அவருடைய அந்தரங்க வாழ்க்கை மிகவும் சீர்கெட்டிருந்தது. மதுவிலும் விபச்சாரத்திலும் அவர் மூழ்கியிருந்தார் என்பன போன்ற உண்மைகளும் மக்களுக்குத் தெரிய வந்தன. இதற்கிடையில் டூயி மனநோயாளியாக மாறினார். தொடர்ந்து பல்வேறு இறை ஆக்கினைகளுக்கு ஆளாகி, இறுதியில் 1907 –ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9 –ஆம் தேதி மரணமடைந்தார்.

டூயியின் மரணச் செய்தியை அறிந்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:

“எனது வாழ்நாளிலேயே அவர் வேதனைக்குரிய முடிவைச் சந்திப்பார் என்ற எனது முன்னறிவிப்பு நிறைவேறி விட்டது. நான் இறைவனால் அனுப்பப்பட்ட வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருக்கிறேன். டூயி ஒரு பொய்வாதியாக இருந்தார்.”

(ஹகீகத்துல் வஹி பக்கம் 80)

போஸ்டனிலிருந்து (Boston) வெளிவரும் தி ஹெராால்ட் என்னும் பத்திரிகை இவ்வாறு கூறுகிறது.

அதிர்ஷ்டமில்லா டூயி தமது நண்பர்களையெல்லாம் இழந்த நிலையில் மரணமடைந்தார். அவர் வாதநோயாலும், புத்தி சுவாதீனமின்மையாலும் அவதிப்பட்டார். உட்பிரிவுப் பூசலால் ஸியோன் நகரம் சின்னாபின்னமாக்கப்பட்ட நிலையில், மிகவும் பரிதாபகரமான மரணத்தை அவர் அடைந்தார். மிர்ஸா வெளிப்படையாக முன்வந்து தமது அறைகூவலில் தாமே வெற்றி பெற்றதாக அறிவிக்கிறார். (தி ஹேரால்ட் போஸ்டன் 23.06.1907)

இது ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்வில் நிகழ்ந்த ஓர் அற்புத நிகழ்ச்சியாகும்.

## ஸியால்கோட், லாஹூர் பயணங்களும் பேருரைகளும்

1904 –ஆம் ஆண்டு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் லாஹூரில் சில நாள் தங்கி இருப்பதற்காகச் சென்றார்கள். அச்சமயம் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் எழுதிய 'இஸ்லாமும் இதர மார்க்கங்களும்' என்ற தலைப்பில் அமைந்த உரை லாஹூரின் மிகப் பெரிய அரங்கம் ஒன்றில் வாசிக்கப்பட்டது. இந்த உரையை ஹஸ்ரத் மவ்லானா அப்துல் கரீம் சாஹிப் (ரலி) படித்தார்கள். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அருகிலேயே அமர்ந்திருந்தார்கள். இவ்வுரையை மக்கள் மிகுந்த ஆர்வத்தோடு கேட்டார்கள். உரை நிறைவு பெற்றபின், அங்கு கூடியிருந்த மக்களின் வேண்டுகோளுக்கிணங்க ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அரை மணி நேரம் உரையாற்றினார்கள். மக்கள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு நல்ல ஆதரவு அளித்தார்கள். ஆனால் சில முஸ்லிம் ஆலிம்களின் தூண்டுதலால் பாமர முஸ்லிம்கள் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தார்கள்.

ஸியால்கோட் நகர அறிஞர்களும், பொதுமக்களும் விடுத்த அழைப்பின் பேரில் 1904 –ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27 –ஆம் நாள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஸியால்கோட் சென்றார்கள். அங்கு அன்னாருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அவர்களைக் காண்பதற்காகப் பல்லாயிரக் கணக்கான மக்கள் இரயில் நிலையத்திலும், அவர்கள் செல்லும் பாதையிலும் திரண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஐந்து தினங்கள் ஸியால்கோட் நகரில் தங்கினார்கள். அவர்களின் வருகையை ஒட்டி ஸியால்கோட் நகரில் ஒரு பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முஸ்லிம்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதைத் தடுப்பதற்காக ஆலிம்கள் பல்வேறு திட்டங்களைத் தீட்டினார்கள். ஆனால் இந்தத் தடைகளையும் மீறி பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அப்போது ஆற்றிய உரை 'ஸியால்கோட் பேருரை' (Lecture Sialkot) என்ற தலைப்பில் பல்வேறு மொழிகளில் வெளியானது.

1905 ஆம் ஆண்டு அக்டோபர் 11 –ஆம் நாள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் சீடரும் மிகச்சிறந்த மார்க்க அறிஞருமான மவ்லானா அப்துல் கரீம் சாஹிப் காலமானார்கள். அதன்பின் மார்க்க அறிஞர்களை உருவாக்குவதற்காகக் காதியானில் ஒரு மத்ரஸாவை (மார்க்கக் கல்விக்கூடத்தை) உருவாக்குவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டன. இவ்வாறு துவக்கப்பட்ட 'மத்ரஸா அஹ்மதிய்யா' இன்றும் சீரோடும் சிறப்போடும் இயங்கிக் கொண்டு வருகிறது. இதில் படித்துப் பட்டம் பெற்ற நூற்றுக்கணக்கான அறிஞர்கள் உலகெங்கும் இஸ்லாத்திற்குத் தொண்டாற்றி வருகின்றனர்.

ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்களின் மறைவுக்கு 15 நாட்களுக்குப் பின் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் டெல்லிக்குச் சென்றார்கள். அங்கு தினமும் இஸ்லாத்தின் உயரிய தத்துவப் போதனைகளை விளக்கி

உரையாற்றினார்கள். இந்தப் பயணத்தை முடித்துத் திரும்பும் வழியில் லூதியானாவில் இரண்டு நாட்களும் அமிர்தசரஸில் இரண்டு நாட்களும் தங்கி பொதுக் கூட்டங்களில் உரையாற்றினார்கள்.

## மரணமும் நல்லடக்கமும்

1905 டிசம்பர் முதல் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இறைவன் புறமிருந்து தமது மரணத்தைப் பற்றிய செய்திகளைப் பெறத் தொடங்கினார்கள். அப்போது ‘அல் வஸிய்யத்’ என்னும் தலைப்பில் ஒரு நூல் எழுதினார்கள். அதில் தமது மரணவேளை நெருங்கி விட்டது என்பதை அறிவித்து, தமது ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சில நற்போதனைகளையும் வழங்கி இருந்தார்கள்.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தாம் இறைவன் புறமிருந்து பெற்ற இறை அறிவிப்பிற்கிணங்க ஒரு கபருஸ்தான் உருவாக்க விரும்புவதாக ஓர் அறிக்கை விடுத்தார்கள். இதில் நல்லடக்கம் செய்யப்படுபவர் தொழுகை, நோன்பு போன்ற இஸ்லாமியக் கடமைகளைத் தவறாமல் கடைபிடிப்பவராகவும், தமது சொத்திலும், வருமானத்திலும், குறைந்தது பத்தில் ஒரு பகுதியை இறைவழியில் செலவு செய்பவராகவும் இருக்க வேண்டுமென்ற நிபந்தனையும் விதித்தார்கள். இவ்வாறு இந்தக் கபருஸ்தானில் அடக்கம் செய்யப்படுபவர் சொர்க்கவாசியாக இருப்பார் என்று இறைவன் தமக்கு அறிவித்ததாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கூறியிருந்தார்கள்.

இந்தக் காலக்கட்டத்தில் இந்தியாவில் பல இடங்களில் ஜமாஅத்துகள் உருவாயின.

1907 டிசம்பர் மாதம் லாஹூரில் ஆரிய சமாஜத்தின் சார்பில் ஒரு சர்வ சமய மாநாடு நடத்தப்பட்டது. இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் படி ஜமாஅத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. மாநாட்டில் உரையாற்றும் எந்தவொரு மார்க்கப் பிரதிநிதியும் பிற மார்க்கங்களைத் தாக்கிப் பேசக் கூடாது என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டது. ஆனால் இதில் ஏதோ ஒரு சதி இருப்பதாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தெரிவித்தார்கள். இருந்தபோதிலும் இந்த மாநாட்டில் படிப்பதற்கென ஒரு கட்டுரை தயார் செய்தார்கள். அந்தக் கட்டுரையில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான அவசியத்தை எடுத்துரைத்து, இஸ்லாத்தின் சீரிய போதனைகளை விளக்கியிருந்தார்கள். 500 –க்கும் மேற்பட்ட அஹ்மதிகள் நுழைவுக்கட்டணம் செலுத்தி இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். அஹ்மதியல்லாத மற்ற முஸ்லிம்களும் கலந்து கொண்டனர். ஆனால் மாநாட்டில் இறுதியாக உரையாற்றிய ஆர்ய சமாஜின் பிரதிநிதி விதிமுறைகள் அனைத்தையும் மீறி இஸ்லாத்தை மிகவும் இழிவாக ஆட்சேபித்தும், பரிகசித்தும் பேசினார். அஹ்மதிகள் பொறுமையைக் கடைபிடித்து அமைதியோடு அதனைச் சகித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இவ்வாறு பொறுமையைக் கடைபிடிக்கவில்லை என்றால் அன்றைய தினம் விரும்பத் தகாத பல அசம்பாவிதங்கள் நிகழ்ந்திருக்கும்.

1908 –ஆம் ஆண்டு ஏப்ரல் 26 –ஆம் நாள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது துணைவியாரின் சிகிச்சைக்காகக் காதியானிலிருந்து லாஹூர் சென்றார்கள். காதியானியிலிருந்து புறப்படுமுன், 'காலத்தின் தீமைகளைப் பற்றிப் பயப்படாமல் இருக்காதீர்!' என்ற இறையறிவிப்பை (இல்ஹாமை)ப் பெற்றார்கள். இந்த இறை அறிவிப்பிற்கேற்ப இந்தப் பயணத்தின்போது பல இடையூறுகளைச் சந்திக்க நேர்ந்தது. மிகப் பயங்கரமான எதிர்ப்புகள் உருவாயின. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் லாஹூரில் ஓரிரு மாதங்கள் தங்கத் திட்டமிட்டிருந்த படியால், சுற்று வட்டாரத்திலுள்ள பல இடங்களிலிருந்து பெருந்திரளான அஹ்மதிகள் லாஹூருக்கு வந்த வண்ணம் இருந்தனர்.

இதற்கிடையில் லாஹூர் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர்கள், உள்ளூர் முஸ்லிம் தலைவர்களுக்கும், பிரமுகர் –களுக்கும் அஹ்மதிய்யா இயக்கத்தை அறிமுகப்படுத்துவதற்காக ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்தனர். விருந்துக்கு முன் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது வாதத்தைப் பற்றியும், அதன் உண்மையைப் பற்றியும் உரையாற்றினார்கள். உணவு அருந்துவதற்காக உரையை முடித்தபோது, அங்கிருந்தோர், 'எங்களுக்கு, பௌதீக உணவை விட ஆன்மீக உணவே அவசியம்; எனவே தயவு செய்து மேலும் உரையாற்றுங்கள்' என்று கேட்டுக் கொண்டார்கள். எனவே இரண்டு, இரண்டரை மணி நேரம் ஹுஸூர் தொடர்ந்து உரையாற்றினார்கள். இந்த உரையில் தமது நபித்துவ வாதத்தின் உண்மையை விளக்கமாக எடுத்துரைத்தார்கள்.

இதற்கிடையில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு உடல் நலம் குன்றியது. அப்போது, 'அர்ரஹீலு தும்மர் ரஹீலு – பயணத்திற்கு நேரமாகி விட்டது' என்ற இறையறிவிப்பு கிடைத்தது. இது தமது மரணத்தைப் பற்றிய முன்னறிவிப்பு என ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அறிவித்தார்கள். 'நாம் உடனடியாகக் காதியான் திரும்புவோம்' என்று அன்னாரின் துணைவியார் கூறியபோது, 'இனி இறைவன் நாடினால்தான் போக முடியும்' என்று பதிலளித்தார்கள்.

நோயுற்றிருந்த இந்த நிலையிலும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இந்தியாவின் மக்கள் மத்தியில் வெறுப்பையும், துவேஷத்தையும் அகற்றி ஒற்றுமையையும், சகோதரத் –துவத்தையும் ஏற்படுத்துவதற்காக, 'சமாதானத் தூது' என்னும் பெயரில் ஒரு நூல் எழுதினார்கள். இதனால் அன்னாரின் உடல்நலம் மேலும் குன்றியது. இந்த நூலை எழுதி முடித்த அன்றிரவு, 'மகுன் தக்யா பர் உம்ரே நாபாய்தார்' – 'நிரந்தரமில்லாத இவ்வாழ்வின் மீது நம்பிக்கை கொள்ளாதீர்' என்னும் இறை அறிவிப்பு கிடைத்தது. இது தம்மைக் குறித்த இறையறிவிப்பு என்று அவர்கள் கூறினார்கள். அன்றிரவு முதல், நிலைமை கவலைக்கிடமானது.

உடனடியாக ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் (ரலி) அவர் களுக்கும், ஏனைய டாக்டர்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டு வரவழைக்கப்பட்டார்கள். சிகிச்சைக்குப் பின் சிறிது நேரம் உறங்கினார்கள். மறுநாள் அவர்கள் 1908 –ஆம் ஆண்டு மே மாதம் 26 – ஆம் நாள் காலையில் எழுந்து சுபுஹ் தொழுதார்கள்.

தொண்டை வறண்டு இருந்ததால் எதுவும் பேசாமல் படுத்துக் கொண்டார்கள். சிறிது நேரம் மயக்க நிலை ஏற்பட்டது. பிறகு இறுதியாக 'அல்லாஹ்' என்று மெல்லிய குரலில் கூறியவண்ணம் தமது இறுதி மூச்சை விட்டார்கள். அதோடு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது எஜமானனாகிய, யாருடைய மார்க்கத் திற்காக தமது வாழ்நாள் முழுவதும் தொண்டாற்றினார்களோ அந்த அல்லாஹ்வின் முன்பு ஆஜரானார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

காலை 10.30 மணிக்கு மரணமடைந்த ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் உடலை உடனடியாகக் காதியான் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மாலையில் உடல் காதியானுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. நல்லடக்கம் செய்யப் படுவதற்கு முன் காதியானில் கூடியிருந்த அஹ்மதிகள் ஹஸ்ரத் ஹக்கீம் மவ்லானா நூருத்தீன் (ரலி) அவர்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது 'அல் வஸிய்யத்' என்னும் நூலில் குறிப்பிட்டிருந்தபடி முதலாவது கலீஃபாவாகத் தேர்ந்தெடுத் தார்கள். இந்தத் தேர்தலுக்குப் பிறகு ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஜனாஸா தொழுகையை நடத்தினார்கள். பிறகு பெஹிஷ்தி மக்பராவில் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் மறைவிற்குப் பிறகு இந்தியாவிலுள்ள பல்வேறு மதங்களையும், சமுதாயங்களையும் சார்ந்த பல பத்திரிகைகள் அன்னாரின் நல்லியல்புகளையும் இஸ்லாத்திற்குச் செய்த அதிமகத்தான சேவைகளையும் பாராட்டிக் கட்டுரைகளும், செய்திகளும் வெளியிட்டன. அவற்றில்

ஒன்றிரண்டை இங்கு தருவது இச்சிறு நூலை நிறைவு செய்வதாய் அமையும் எனக் கருதுகிறோம்.

மவ்லானா அபுல் கலாம் ஆஸாத் அவர்களை ஆசிரியராகக் கொண்டு அமிர்தசரஸிலிருந்து வெளிவந்த 'வக்கீல்' என்னும் பத்திரிகை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் மறைவு குறித்துப் பின்வருமாறு செய்தி வெளியிட்டது.

"மர்ஹூம் (மறைந்த பெரியார்) மிகப் பெரும் மகத்துவம் மிக்கவராக விளங்கினார். அவரின் நாவும், பேனாவும் மிகவும் சக்திவாய்ந்தவையாகவும், மக்கள் உள்ளங்களை வசப்படுத்து –பவையாகவும் இருந்தன. அவருடைய விரல்களில் புரட்சியின் கம்பிகள் இயங்கிக் கொண்டிருந்தன. அவருடைய இரண்டு கை முஷ்டிகளும் சக்திவாய்ந்த பேட்டரிகளாக இருந்தன. மர்ஹூம் கடந்த முப்பதாண்டு காலமாக மார்க்க உலகில் மிகப் பெரும் பூகம்பமாகவும், வலிமை வாய்ந்த புயலாகவும் விளங்கினார்...... மிர்ஸா குலாம் அஹ்மது அவர்களின் மரணம் நமக்கெல்லாம் படிப்பினை தருவதாக அமைந்திருக்கிறது. மார்க்க உலகில் இத்தகு புரட்சியினை ஏற்படுத்தக்கூடிய இப்படிப்பட்ட பெரியவர்கள் உலகில் எல்லாக் காலங்களிலும் தோன்றுவதில்லை. இப்படிப்பட்ட மஹாத்மாக்கள் தோன்றும்போது ஒரு மாபெரும் புரட்சியை ஏற்படுத்திய பின்னர் இவ்வுலகிலிருந்து மறைகிறார்கள்.

மிர்ஸா சாஹிபின் சில கொள்கைகளில் நமக்குக் கருத்து மாறுபாடு இருந்தபோதிலும் முஸ்லிம் உலகிலிருந்து ஒரு மிகப் பெரும் சக்திவாய்ந்த அறிஞர் பெருந்தகை மறைந்து விட்டார் என்ற உணர்வு நமக்கு ஏற்படுகின்றது. மர்ஹூம் மார்க்க உலகில்

எவராலும் வெல்ல முடியாத மிகப்பெரும் வெற்றி வீரராகத் திகழ்ந்தார் என்பதை எம்மால் மறுக்க இயலாது. இந்தியாவில் மார்க்க அரங்கில் இப்படிப்பட்ட மகத்துவமிக்கப் பேரறிஞர் ஒருவர் எதிர்காலத்தில் தோன்றுவாரா என்பது சந்தேகம்தான்.''

(வக்கீல் ஜூன் 1908)

அல்லாமா நியாஸ் பதஹ்பூரி தமது 'நிகார்' என்னும் பத்திரிகையில் பின்வருமாறு எழுதுகிறார்:

''நிச்சயமாக மர்ஹூம் இஸ்லாமியக் கலாச்சாரத்தையும், நல்லொழுக்கத்தையும் புதுப்பித்துக் காட்டினார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியை ஏற்று நடக்கும் ஓர் ஆன்மீக ஜமாஅத்தை உருவாக்கிச் சென்றார்கள்.

அஹ்மதிய்யா இயக்கத்தின் தூய ஸ்தாபகர் அசாதாரணமான அறிவும், ஞானமும், சிந்தனைத்திறனும் பெற்ற மனிதராக விளங்கினார்கள். இறைவனிடமிருந்து தனிப்பட்ட ஒரு குத்ரத் கிடைத்ததன் காரணமாக, அதன் சக்தியாலும், பேரொளியாலும் தமக்குப் பிறகு ஓர் ஆன்மீக இயக்கத்தை விட்டுச் சென்றார்கள்.

அஹ்மதிய்யா இயக்க ஸ்தாபகரின் முழு வாழ்க்கை வரலாற்றையும் நான் முழுமையாகப் படிக்கவில்லை. மிர்ஸா சாஹிபின் வாழ்க்கை வரலாறு, அவருடைய போதனைகள், தத்துவங்கள், அவர் நிகழ்த்திய மாபெரும் ஆன்மீகப் புரட்சி, அவருடைய திருக்குர்ஆன் ஞானம், கொள்கைகள் ஆகியவற்றை விளக்கமாகப் படித்து ஆராய்வதற்கு முழு மனித ஆயுளும் போதாது. ஆனால் நான் இதுவரை செய்த ஆய்வின்

அடிப்படையில் ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் ஓர் அசாதாரணமான ஆன்மீக சக்தி பெற்ற ஒரு மாமேதையும், இமாம் மஹ்தி என்று வாதம் புரிவதற்கு முழுத் தகுதி பெற்றவரும் ஆவார் என்று என்னால் தைரியமாகக் கூற முடியும்.

தம்மை 'வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மஹ்தி' என வாதித்த அவர் ஒருபோதும் பொய் கூறமாட்டார் என்ற முழுமையான நம்பிக்கை எனக்குண்டு. சமுதாயத்தின் சீரமைப்பிற்கும் சீர்திருத்தத்திற்கும் தேவையான ஒரு காலக் கட்டத்தில்தான் அவர் இந்த வாதத்தைச் செய்தார். இன்று அஹ்மதிய்யா இயக்கம் உலகெங்கும் செய்து வரும் பிரச்சாரங்களும், ஆற்றிவரும் இதர நற்பணிகளும் அன்னாரின் உண்மைக்கு மறுக்க முடியாத ஆதாரமும் எடுத்துக்காட்டும் ஆகும்."

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் மறைவுக்குப் பிறகு ஏராளமான இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ, சீக்கிய மதத் தலைவர்களும், குருமார்களும், பத்திரிகையாளர்களும், அன்னார் செய்த அதிமகத்தான இஸ்லாமிய சேவைகளையும், புரட்சிகரமான சீர்திருத்தங்களையும் பற்றி தங்களுடைய ஏடுகளில் எழுதினார்கள். அவற்றை இங்கு விளக்கமாக எடுத்துரைத்தால் இக்கட்டுரை நீண்டு விடும் என்று கருதி விட்டு விடுகிறோம்.

## போதனைகளும் நல்லுபதேசங்களும்

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களது வருகையின் முக்கிய நோக்கம் உலகில் தவ்ஹீதை – இறைவனின் ஏகத்துவத்தை நிலைநாட்டுவதாகும். இக்காலத்தில் உலகிலிருந்து

தவ்ஹீது மறைந்து விட்டதையும், அதற்குப் பகரமாக மனிதனை வணங்கும் (Hero Worship) நிலை அதிகரித்து வருவதையும் நாம் காண்கிறோம். குறிப்பாக இன்றைய கிறிஸ்தவ உலகம் ஒரு மனிதரான ஹஸ்ரத் ஈஸா நபி (அலை) அவர்களைத் தேவனாகவும் கடவுளாகவும் தேவகுமாரனாகவும் கருதி வணங்கி வருகிறது. இறைவனின் ஏகத்துவத்தை மீண்டும் நிலைநாட்ட ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பாடுபட்டார்கள்.

***தவ்ஹீது:***

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இவ்வாறு வரைகிறார்கள்:

“பலவீனனான ஒரு மனிதனை தெய்வமாக்கி வணங்கிக் கொண்டிருப்பதைவிட, மண்ணால் படைக்கப்பட்ட ஒரு மனிதனை ‘ரப்புல் ஆலமீன்’ ஆக ஆக்குகின்ற கொடுமையை விட இதயத்திற்கு வேதனை அளிக்கின்ற வேறொரு விஷயம் இருக்க முடியாது. எனது எஜமானனும் எல்லாம் வல்லவனுமான அல்லாஹ் இறுதியில் தவ்ஹீதுக்கே வெற்றி கிடைக்கும் என்று எனக்கு ஆறுதல் தரவில்லை என்றால் நான் எப்போதோ நாசமாகி இருப்பேன்..... சத்தியத்தின் சூரியன் மேற்கிலிருந்து உதயமாகும் நாட்கள் நெருங்கி வந்து கொண்டிருக்கின்றன. ஐரோப்பாவிற்கு உண்மையான இறைவனைப் பற்றிய அறிவு கிடைக்க இருக்கிறது. அல்லாஹ்வின் உண்மையான ஏகத்துவம் உலகெங்கும் பரவும் காலம் மிகவும் நெருங்கி இருக்கிறது. அப்போது எந்த விதமான செயற்கையான பாவமன்னிப்பும், மனிதனால் உருவாக்கப்பட்ட எந்த ஒரு தெய்வமும் எஞ்சியிருக்காது..... அல்லாஹ்வைத் தவிர

வணக்கத்திற்குரியவன் எவனும் இல்லை என்று நான் கூறி வருவதை அப்போது உங்களால் உணர முடியும்.''

(14.01.1897 தேதியிட்ட விளம்பரம்)

''நாம் கைக்கொள்ள வேண்டிய விஷயங்களாவன: எல்லாவற்றையும் படைத்துக் காத்து, பரிபாலிக்கும் எல்லாம் வல்ல என்றும் நிலைத்து நிற்கின்ற ஏக இறைவன் இருக்கின்றான் என்று உளப்பூர்வமாக உறுதியாக நாம் நம்ப வேண்டும். அந்த இறைவன் என்றும் மாறாத இயல்புகளை உடையவன் என்றும் நாம் நம்ப வேண்டும். அவன் யாருடைய மகனுமல்ல. அவன் யாரையும் பெற்றெடுக்கவுமில்லை. அந்த இறைவன் துன்பத்தில் உழலக் கூடியவனோ, சிலுவையில் அறையப்படக் கூடியவனோ, இறந்து போகக் கூடியவனோ அல்லன். இவை அனைத்திலிருந்தும் அவன் தூய்மையானவன். அவன் எத்தகையவன் என்றால் மிகத் தூரத்தில் உள்ளவனாக இருந்த போதிலும் மிக அருகிலேயே இருக்கின்றான். மிக அருகில் உள்ளவனாக இருந்தபோதிலும் மிகத் தூரத்திலேயே இருக்கின்றான். அவன் ஏகனாக இருந்தபோதிலும் அவனுடைய தோற்றங்கள் பலவாகும். மனிதன் தன்னை மாற்றிக் கொள்கின்றபோது அவ்விறைவன் அவனுக்குப் புதுவிதமாகத் தோற்றமளிக்கிறான். மனிதன் தன்னை மாற்றிக் கொள்ளும்போது ஒரு மாறுதலான இறைவனைக் காண்கின்றான். ஆனால் இறைவன் மாறுவதில்லை. விபரீதமான மாற்றம் எதுவும் அவனிடத்து ஏற்படுவதுமில்லை. அவன் மாறாத முழுமையான இயல்புகளை உடையவன் ஆவான்.''

(ஹஸ்ரத் அஹ்மது (அலை) 'கிஷ்தி நூஹ்' என்ற நூலில்)

***ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நேசம்:***

இறைநேசத்திற்கு அடுத்தபடியாக, ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த நேசத்திற்கும், ஆன்மீகத் தொடர்பிற்கும் நிகரான ஒன்றைக் காண முடியாது.

அன்னார், தாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆன்மீகப் புதல்வராகவும், இமாம் மஹ்தியாகவும் மஸீஹாகவும் தோன்றியிருப்பதாக வாதம் செய்தபோது முஸ்லிம் அறிஞர்கள் அவர்களுக்கு 'காஃபிர்' பட்டம் கொடுத்துப் பல துன்பங்களுக்கு ஆளாக்கினர். அப்போது ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

"பஃதஸ் குதா ப இஷ்கே முஹம்மத் முகம்மரம்
கர் குஃப்ர் இன்பவத் பகுதா ஸக்த் காஃபிரம்"

"இறைவனுக்குப் பிறகு, எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மீதும் நான் அளவு கடந்த நேசம் கொண்டுள்ளேன். இதன் காரணமாக நீங்கள் எனக்கு 'குஃப்ர்' ஃபத்வா கொடுக்கின்றீர்கள் என்றால், இறைவன் மீது ஆணையாக! நான் 'மிகப்பெரிய காஃபிர்' ஆக இருக்கின்றேன்."

ஒளிகள் அனைத்திற்கும் உறைவிடமாகத் திகழும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களே எங்கள் எஜமானராகவும் வழிகாட்டியாகவும் திகழ்கிறார்கள். அந்தப் பேரொளியில் என்னை நான் அர்ப்பணம் செய்கின்றேன். ஏனெனில் நான் அந்தப் பேரொளியிலிருந்து தோன்றிய ஒரு கதிர் ஆவேன்.

எனது உயிரும் உள்ளமும் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பேரழகில் அர்ப்பணம் செய்யப்பட்டிருக்கின்றது. எனது உடல் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வீட்டு வாசற்படியில் அர்ப்பணம் செய்யப்பட்டிருக்கின்றது.

### *திருக்குர்ஆனைப் பற்றி ஹஸ்ரத் அஹ்மது (அலை):*

“உங்களுக்கு நான் கூறும் மிக முக்கியமான போதனை என்னவென்றால், ஒதுக்கப்பட்ட ஒரு கிரந்தத்தைப் போல் திருக்குர்ஆனைக் கைவிட்டு விடாதீர்கள் என்பதாகும். ஏனெனில் உங்கள் வாழ்வு அதில்தான் அடங்கி இருக்கிறது. எவர் திருக்குர்ஆனைக் கண்ணியப்படுத்துவாரோ அவர் வானத்தில் கண்ணியப்படுத்தப்படுவார். எவர் ஹதீஸ்கள் மற்றும் பிற சொற்களை விடத் திருக்குர்ஆனுக்கு முக்கியத்துவம் கொடுப்பாரோ அவர் வானத்தில் கண்ணியப்படுத்தப்படுவார். தற்போது பூமியில் திருக்குர்ஆனைத் தவிர மனித குலத்திற்கு வேறொரு கிரந்தமுமில்லை; அண்ணல் நபி பெருமானார் (ஸல்) அவர்களைத் தவிர ஆதமின் மக்களுக்கு இனி எந்த இறைத் தூதரும், பரிந்துரைப்பவரும் இல்லை. எனவே நீங்கள் கண்ணியத்திற்குரிய அந்த மாநபி (ஸல்) அவர்கள் மீது உளப்பூர்வமான அபிமானம் கொள்ளுங்கள். அந்த மாநபி (ஸல்) அவர்களுக்குத் தரப்படும் மதிப்பை விட மேலான மதிப்பை வேறு எவருக்கும் கொடுக்காதீர்கள். அப்போதுதான் நீங்கள் வானத்தில் இரட்சிப்பிற்குரியவர்களாக எழுதப்படுவீர்கள்......

என்னுடைய நம்பிக்கை என்னவென்றால் நீங்கள் நேர்வழி பெற மூன்று வழிமுறைகளை இறைவன் உங்களுக்கு

அளித்திருக்கின்றான். அவற்றில் முதன்மையானது திருக்குர்ஆன் ஆகும். இதில் இறைவனுடைய ஏகத்துவம் மகிமை முதலியவை தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றன. இதில் யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையேயுள்ள வேற்றுமைகளுக்கும் தீர்ப்பு கூறப்பட்டிருக்கிறது.

எனவே, இறைவனின் போதனைகளான திருக்குர்ஆனின் கட்டளைகளுக்கு எதிராக ஓர் அடி கூட எடுத்து வைக்காதீர்கள். எவர் திருக்குர்ஆனின் 700 கட்டளைகளில் ஒரு சிறிய கட்டளையையாவது மீறி நடப்பாரோ அவர் இரட்சிப்பின் வாசலைத் தனது கரங்களாலேயே மூடிக் கொள்கிறார் என்றே நான் கூறுவேன். உண்மையானதும், முழுமையானதுமான சொர்க்கத்தின் வழிகளைத் திருக்குர்ஆனே நமக்குத் திறந்து தருகின்றது; எஞ்சியிருப்பவை அதன் நிழலாகவே இருக்கின்றன. எனவே நீங்கள் திருக்குர்ஆனைக் கருத்தூன்றிப் படியுங்கள்! நீங்கள் எதனிடமும் காட்டாத நேசத்தை அதனிடம் காட்டுங்கள்! இறைவன் என்னிடம், 'எல்லா நன்மைகளும் திருக்குர்ஆனிலேயே இருக்கின்றன' என்று கூறியுள்ளான். உண்மையும் இதுவே! திருக்குர்ஆனைத் தவிர்த்து வேறொன்றுக்கு முக்கியத்துவம் அளிப்பவர்கள் பரிதாபத்திற்கு உரியவர்களே! உங்களுடைய எல்லாவிதமான வெற்றி, இரட்சிப்பு இவைகளின் உறைவிடம் திருக்குர்ஆனே ஆகும். உங்களுடைய மார்க்க சம்பந்தமான தேவைகள் அனைத்தையும் திருக்குர்ஆனே நிறைவு செய்யும். இறுதி நாளில் உங்களுடைய நம்பிக்கைகளை உண்மைப்படுத்துவதும், உண்மைக்கு மாறானதாக ஆக்குவதும் இந்தத் திருக்குர்ஆனே ஆகும். உங்களுக்கு நேர்வழி காட்ட வானத்தின்கீழ் திருக்குர்ஆனைத் தவிர வேறு வேத நூல் இல்லை.

திருக்குர்ஆனைத் தந்ததன் மூலம் மிகப் பெரும் அருட்கொடையை இறைவன் உங்களுக்கு அளித்திருக்கிறான்.”

“........எனவே உங்களுக்குக் கிடைத்துள்ள இந்த அருட் கொடையை மதித்து நடங்கள். இது மிகவும் கண்ணியத்திற்குரிய அருட்கொடையும் கிடைப்பதற்கரிய அருஞ்செல்வமும் ஆகும். திருக்குர்ஆன் அருளப்படாதிருந்தால் முழு உலகமும் ஓர் அசுத்தமான பொருளைப் போன்று ஆகி இருக்கும். திருக்குர்ஆனோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஏனைய எல்லா வழிகாட்டுதல்களும், பொருளற்றவையாகவே ஆகி விடுகின்றன. ஒரு மனிதன் பௌதீகமான முறையிலும் ஆன்மீகமான முறையிலும் முகம் திருப்பாதிருந்தால் ஒரே வாரத்தில் திருக்குர்ஆன் அவனைத் தூய்மையானவனாக ஆக்கி விடும். நீங்கள் திருக்குர்ஆனை விட்டு விலகாமல் இருந்தால் அது உங்களை இறைதூதர்களைப் போன்று ஆக்கிவிடும்.” (நூல்: கிஷ்தி நூஹ்)

### *கொள்கைகள்:*

“மார்க்கங்களுக்கு மத்தியில் உண்மையான மார்க்கம் இஸ்லாம் என்றும், நேர்வழியின் நடுவில் முழுமை பெற்றதும், மனிதக் கரங்களால் கறைபடுத்தப்படாமல் தூய்மை ஆக்கப்பட்டதுமான வேதநூல் திருக்குர்ஆன் என்றும் நபிமார்களுக்கு மத்தியில் முழுமையான போதனையைக் கொண்டு வந்தவரும், தூய்மையும், ஞானமும் நிரம்பப் பெற்றவரும் மனித இனத்திற்கு முழுமையான வழிகாட்டியுமான இறைதூதர் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆவார்கள் என்றும் இறைவன் எனக்கு அறிவித்திருக்கிறான்.” (அர்பயீன்)

“இன்று உயிருள்ள வேதநூல் திருக்குர்ஆன் என்பதையும், உயிருள்ள மார்க்கம் இஸ்லாம் என்பதையும், உயிருள்ள இறைதூதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்பதையும் நிரூபித்துக் காட்டுவதற்காகவே இறைவன் என்னை அனுப்பியிருக்கிறான்.” (மஜ்மூஆ இஷ்திகாரத் பாகம் 3 பக்கம் 267)

“இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். நான் காஃபிர் (இஸ்லாத்தை நிராகரிக்கிறவன்) அல்ல. லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (வணக்கத்திற் குரியவன் அல்லாஹ்வைத் தவிரவேறு யாருமில்லை. முஹம்மது நபி (ஸல்) அல்லாஹ்வின் திருத்தூதராவார்) என்பதே எனது கொள்கையாகும். என்னுடைய இந்தக் கொள்கையை அல்லாஹ்வுக்கு எத்தனை நாமங்கள் இருக்கின்றனவோ அவை அனைத்தின் மீதும் சத்தியம் செய்து கூறத் தயாராக இருக்கிறேன்....... எனது கொள்கைகளில் எதுவும் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு மாறானவையல்ல.” (கராமாத்துஸ் ஸாதிக்கீன்)

எங்கள் மார்க்கத்தின் இரத்தினச் சுருக்கம் ‘லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்’ என்பதாகும். இவ்வுலகிலும், இறையருளால் நாங்கள் இவ்வுலகிலிருந்து செல்லும்போதும் எங்கள் கொள்கை இதுவேயாகும். அதாவது, ஹஸ்ரத் ஸய்யிதுனா வ மவ்லானா முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் காத்தமுன் நபிய்யீனும், கைருல் முர்ஸலீனுமாக இருக்கிறார்கள். அன்னாரின் கரங்களில் மார்க்கம் முழுமை பெற்று விட்டது. மனிதன் நேரான மார்க்கத்தைக் கடைபிடித்து இறைவனை அணுகுவதற்கான இறையருள் நிறைவு பெற்று

விட்டது. திருக்குர்ஆன் ஒரு முழுமையான இறை வேதநூல் என்பதிலும் நாங்கள் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளோம். அந்தத் திருமறையின் கட்டளைகளிலும், சட்டங்களிலும், அது விதித்துள்ள வரம்புகளிலும் ஒரு புள்ளியைக் கூடக் கூட்டவோ, குறைக்கவோ முடியாது. திருக்குர்ஆனின் கட்டளைகளை ரத்து செய்யும் மாற்றம் செய்யும் எந்த ஒரு வஹியோ, இல்ஹாமோ இறங்கப் போவதில்லை. (இஸாலயே அவ்ஹாம் பாகம் 1 பக்கம் 136)

எந்த ஐந்து கடமைகளின் மீது இஸ்லாத்தின் தூண்கள் அமைந்திருக்கின்றனவோ, அவையே எங்கள் கொள்கையாகும். இறைவனின் எந்தத் திருவசனத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டுமென கட்டளையிடப்பட்டுள்ளதோ அந்த இறை வசனத்தோடு நாங்கள் முழுமையான தொடர்பு வைத்திருக்கிறோம்..... அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. ஸய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவனுடைய திருத்தூதரும் காத்தமுன் நபிய்யீனும் ஆவார்கள். மலக்குகள், மரணத்திற்குப் பின் மீண்டும் எழுப்பப்படுதல், மறுமை நாளின் கேள்வி கணக்கு, சொர்க்கம், நரகம் இவையனைத்தும் உண்மையென்று நாங்கள் திடமான நம்பிக்கை கொண்டுள்ளோம். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறிய அனைத்தும், எம்பெருமானார் (ஸல்) அவர்களின் போதனைகள் அனைத்தும் உண்மையானவை என்று நாங்கள் முழுமையாக நம்புகிறோம்.”

(அய்யாமுஸ் ஸுல்ஹ் பக்கம் 86–87)

***சகிப்புத்தன்மை:***

“அனைத்து முஸ்லிம்களிடமும், கிறிஸ்தவர்களிடமும், இந்துக்களிடமும் நான் விளக்கிக் கூற நாடுவது என்னவென்றால், உலகில் எவருமே எனக்கு எதிரியல்ல; அன்புடைய அன்னை தனது பிள்ளைகளை எந்த அளவு நேசிக்கிறாரோ அதைவிட அதிகமாக நான் மனித இனத்தை நேசிக்கிறேன். உண்மைக்கு மாறான பொய்யான கொள்கைகளுக்குத்தான் நான் எதிரியாவேன். மனிதனை இறைவனுக்கு நிகராக நேசிப்பதும், பொய், (இறைவனுக்கு) இணை வைத்தல், அக்கிரமம், அநியாயம், பாவச் செயல்கள், தீய ஒழுக்கம் ஆகியவற்றை எதிர்ப்பதுமே எனது குறிக்கோளாகும்.” (அர்பயீன்)

“மனித இனத்தின்மீது நான் கொண்டுள்ள அன்பு, நேசம், இரக்கம் எப்படிப்பட்டவையென்றால், எனது எதிரிகளுக்காகவும் நான் இறைவனிடம் பிரார்த்தனை செய்யாதவரை என் மனதிற்கு நிம்மதி ஏற்படுவதில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்காகச் செய்த பிரார்த்தனையின் பலனாகத்தான் அவர்கள் முஸ்லிம் ஆனார்கள். அதேபோன்று இரண்டு மூன்று தடவையாவது நான் பிரார்த்தனை செய்யாத எந்தவோர் எதிரியையும் என்னால் காண முடியவில்லை.”

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 96,97)

***நூல்கள்:***

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அரபி, ஃபார்ஸி, உருது மொழிகளில் 84 நூல்களை எழுதியுள்ளார்கள். அவற்றுள் சில உலகின் பல்வேறு மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

## அடையாளங்கள்

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தாம் ஓர் இறைத் தூதர் என்று பிரகடனம் செய்தார்கள். தமது வாதத்திற்கு வலுவூட்டும் ஆதாரங்களாக நான்கு விதமான சான்றுகளை எடுத்துக் காட்டினார்கள்.

1. முன்னறிவிப்புகள்
2. பிரார்த்தனைகள் ஒப்புக் கொள்ளப்படுதல்
3. அற்புதங்கள் (முஃஜிஸாத்)
4. திருக்குர்ஆனில் மறைந்திருக்கும் இறை ஞானத்தையும் இரகசியங்களையும் வெளிப்படுத்துதல்.

தமது உண்மைக்கு ஆதாரமாக இத்தகைய சான்றுகள் மூன்று இலட்சத்திற்கும் அதிகமாக வெளிப்பட்டுள்ளதாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அறிவித்தார்கள். அவற்றுள் சிலவற்றை மட்டும் இங்கு எடுத்துக் காட்டியுள்ளோம்.

1) இந்தியாவில் பிளேக் நோய் பரவுவதற்கு 12 ஆண்டுகளுக்கு முன்னரே 1884 –ஆம் ஆண்டு அந்நோய் பரவும் என முன்னறிவிப்பு செய்தார்கள். பின்னர் 1894 –ல் தமது 'நூருல் ஹக்' என்னும் நூலிலும் இதைப் பற்றிக் கூறியிருந்தார்கள். அதே வருடம் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் பஞ்சாப் முழுவதும் பிளேக் நோய் மிகக் கடுமையாகப் பரவும் என்றும், அதன் காரணமாக ஏராளமான கிராமங்கள் அழிந்து விடும் என்றும் அறிவித்திருந்தார்கள். இவ்வறிக்கை அல் ஹகம், பதர் போன்ற பத்திரிகைகளிலும் வெளி வந்தது. இந்தப் பெரும் ஆபத்தைப் பற்றிய முன்னறிவிப்பில் தமது வீட்டைப் பற்றியும், காதியான்

நகரைப் பற்றியும், தமது ஜமாஅத்தைப் பற்றியும் குறிப்பிட்டிருந் தார்கள்.

இந்த நோயின் பாதிப்பிலிருந்து தமது வீடு முழுமையாகப் பாதுகாக்கப்படும் என்றும் தமது கிராமமான காதியான் ஏனைய கிராமங்களை விட இந்த நோயிலிருந்து பாதுகாக்கப்படும் என்றும் தமது ஜமாஅத்தைச் சேர்ந்தவர்கள் இந்த நோயிலிருந்து காப்பாற்றப்படுவார்கள் என்றும் முன்னறிவிப்புச் செய்திருந் தார்கள். தமது ஜமாஅத் நூஹ் (அலை) அவர்களின் கப்பலைப் போன்றதென்றும், இந்தக் கப்பலில் ஏறியவர்கள் அதாவது, தமது ஜமாஅத்தைச் சேர்ந்தவர்கள் இந்த நோயிலிருந்து காப்பாற்றப்படுவார்கள் என்றும் தமது 'கிஷ்தி நூஹ்' என்னும் நூலில் வரைந்துள்ளார்கள்.

அவர்கள் முன்னறிவித்தபடியே பிளேக் நோய் இந்தியாவில் அதிலும் குறிப்பாகப் பஞ்சாபில் மிக அதிகமாகப் பரவி ஏராளமான மக்களைப் பலி கொண்டது; ஆனால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வீட்டையும் ஜமாத்தையும் சேர்ந்தவர்கள் அந்தக் கொடிய நோயிலிருந்து காப்பாற்றப்பட்டார்கள். இந்த அடையாளத்தைக் கண்டு ஆயிரக்கணக்கான மக்கள் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டனர்.

**1905 –**இல் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் சமீபத்தில் நிகழவிருக்கும் ஒரு பேரழிவைப் பற்றி முன்னறிவிப்புச் செய்தார்கள். பெரு நகரங்களும் ஏராளமான கிராமங்களும் நாசமாகும் என்றும், இரத்த ஆறு ஓடும் என்றும், மனிதர்களை

மட்டுமின்றி மிருகங்களையும் பறவைகளையும் கூட இந்த அழிவு விட்டு வைக்காது என்றும் கூறினார்கள்.

மேலும் ரஷ்யாவை ஆண்ட ஸார் மன்னர் மிகவும் இழிவான முறையில் மரணமடைவார் என்றும் முன்னறிவிப்பு செய்தார்கள். (பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 5 பக்கம் 97)

இந்த முன்னறிவிப்பு வெளியிடப்பட்டபோது ஸார் மன்னர் சக்திமிக்க சர்வாதிகாரியாக விளங்கினார்; வெளிப்படையாகப் பார்க்கும்போது அவர் அழிவதற்கான எந்த அடையாளமும் தென்படவில்லை.

முதலாம் உலகப்போர் ஆரம்பித்தபோது, ரஷ்யாவில் குழப்பம் ஏற்பட்டது. அப்போது ஸார் மன்னர் தமது இராணுவத்தைப் பார்வையிடுவதற்காக எல்லைப்புறங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். 1917 –ஆம் ஆண்டு மார்ச் 12 –ஆம் நாள் உலகில் மிகவும் சக்தி வாய்ந்தவராக விளங்கிய ஸார் மன்னர் கிளர்ச்சிக்கு அடிபணிந்தார். மார்ச் 15 –ஆம் நாள் தனக்கோ தன் சந்ததியினருக்கோ ரஷ்யாவின் ஆட்சியோடு எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று எழுதிக் கொடுத்தார். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் முன்னறிவிப்பின் படியே ஸார் மன்னர் குடும்ப ஆட்சி ரஷ்யாவை விட்டு நிரந்தரமாக துடைக்கப்பட்டது. பின்னர் அவர் சிறைப் பிடிக்கப்பட்டார். நவம்பர் 7 –ஆம் நாள் நடைபெற்ற போல்ஷ்விக் கிளர்ச்சியின்போது ஸார் மன்னருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டு, மாஸ்கோவிலிருந்து 1400 மைல் தொலைவிலுள்ள சைபீரியச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

நோயுற்றிருந்த அவரது மக்களை, காவலர்கள் அடித்துத் துன்புறுத்தினர். அவரது பெண் மக்கள் பெற்றோர்களின் முன்னிலையில் மோசமாக நடத்தப்பட்டனர். இவ்வாறு கொடுமையான தண்டனைகளுக்கு ஆளான பின்னர் 1918 ஜுலை 14–ல் ஸாரும் அவரது குடும்பத்தினரும் ஈவு இரக்கமின்றி கொல்லப்பட்டனர். இவ்வாறு அல்லாஹ்வின் தூதரான ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின்,

ஸார் பீ ஹோகா தோ ஹோகா
உஸ் கடீ பாஹாலே ஸார்

“அப்போது ஸாரும் மிகவும் வேதனைக்கும் பரிதாபத்திற்கும் உரிய நிலைக்கு ஆளாவார்” என்ற முன்னறிவிப்பு நிறைவேறியது.

***வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி:***

1886 பிப்ரவரி 20 –இல் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தாம் இறைவன் புறமிருந்து பெற்ற அறிவிப்பின்படி, தமக்கு ஒரு மகத்துவமிக்க மகன் பிறக்கப் போவதாக முன்னறிவிப்புச் செய்தார்கள். அந்த மகன் இஸ்லாத்தின் உண்மையை நிரூபிக்கக்கூடிய மிகப் பெரிய சான்றாக விளங்குவார். அவர் புகழ் மிக்கவராகவும், பெருமைக்குரியவராகவும், செல்வந்தராகவும், மிகச் சிறந்த அறிஞராகவும், ஆன்மீக அறிவும், உலகியல் அறிவும் அபரிதமாகப் பெற்றவராகவும் திகழ்வார் என்றும் முன்னறிவிப்பில் கூறியிருந்தார்கள். என்றென்றும் இறைவனின் நிழல் அவர் மீதிருக்கும்; அவர் உயரிய நிலையை அடைவார்; உலகம் முழுவதும் அவரது புகழ் பரவும்; உலக நாடுகள் அவரிடமிருந்து அருளைப்

பெறும் என்றும், தமக்குப் பிறக்கப் போகும் மைந்தனின் நல்லியல்புகளைப் பற்றி அவர் பிறக்கும் முன்னரே தீர்க்கதரிசனம் உரைத்து 'ஸப்ஸ் இஷ்திஹார்' என்னும் பிரசுரம் வெளியிட்டார்கள்.

இந்த முன்னறிவிப்பு வெளியிடப்பட்டு மூன்று வருடங்கள் கழித்து **1889** ஜனவரி **12** –ஆம் தேதி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. முன்னறிவிப்பின்படி அக்குழந்தைக்கு பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது என்று பெயர் சூட்டப்பட்டது. இந்த மைந்தரே பின்னர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் இரண்டாவது கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப் –பட்டார்கள்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களும் முன்னர் கூறிய முன்னறிவிப்புத் தமது வருகையின் மூலம் நிறைவேறி விட்டதென்று தெரிவித்தார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: "திருக்குர்ஆனை இறக்கி இவ்வுலகில் ஓர் ஆன்மீக அமைப்பை ஏற்படுத்திய இறைவன், வாக்களிக்கப்பட்ட மஹ்தியும் மஸீஹுமான ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு அளித்த நற்செய்தியில் **1886** –ஆம் ஆண்டிலிருந்து **9** வருடங்களுக்குள் ஓர் ஆண் குழந்தை பிறக்கும். அந்த மகன் இறைவனின் அருளால் விரைவில் உயர்நிலையை அடைவார். உலகின் எல்லை வரை அவரின் புகழ் பரவும்; இஸ்லாத்தை உலகெங்கும் பரவச் செய்து கைதிகளை விடுவிப்பதற்கும், மரணித்தவர்களை உயிர்ப்பிப்பதற்கும் காரணமாக அமைவார் என்றும் கூறினான். அவனுடைய இம்முன்னறிவிப்பு நிறைவேறி விட்டது. உதயமாகும் ஒவ்வொரு

நாளிலும் எனது வெற்றிக்கான கனிகள் கிடைத்துக் கொண்டே இருக்கின்றன. அஸ்தமனமாகும் ஒவ்வொரு நாளிலும் எனது எதிரிகளின் வீழ்ச்சிக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு அல்லாஹ் என் மூலம் அஹ்மதிய்யா ஜமாஅத்தை உலகெங்கும் பரவச் செய்தான். நான் காலால் ஓரடி நடக்கின்ற போதும் அல்லாஹ் எனக்கு வழிகாட்டித் தந்தான். பின்னர் ஒருநாள் இறைவன், 'வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்கு முன்னறிவிக்கப்பட்ட மகன் நீர்தான்' என்று எனக்கு வெளிப்படுத்திக் காட்டினான். அன்றிலிருந்து அல்லாஹ்வின் உதவி எனக்குக் கிடைத்துக் கொண்டே இருக்கிறது. இன்று உலகின் எல்லாக் கண்டங்களிலும் அஹ்மதிய்யா இயக்கப் பிரச்சாரகர்கள் இஸ்லாத்தைப் பரப்ப ஆன்மீகப் போரை நடத்தி வருகிறார்கள். மூடிக்கிடந்த கிரந்தமாக முஸ்லிம்களிடம் இருந்த திருக்குர்ஆன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கருணையாலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அருளாலும் நமக்கு ஒரு திறந்த நூலாக மாறிவிட்டது. அதிலிருந்து புத்தம் புதிய அறிவுகளும், ஞானங்களும் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இஸ்லாத்திற்கு எதிராக எழுப்பப்படும் ஒவ்வொரு ஆட்சேபனைக்கும் உரிய பதிலை இறைவன் எனக்குத் திருக்குர்ஆனிலிருந்து கற்றுத் தந்தான். இவ்வாறு திருக்குர்ஆனின் கண்ணியம் மேலோங்கச் செய்யப் படுகின்றது. அல்லாஹ்வின் வசனங்களிலும் இல்ஹாம்களிலும் உறுதியும் நம்பிக்கையும் கொண்டு நாங்கள் திருக்குர்ஆனின் சிறப்பை உலகிற்கு எடுத்துக்காட்டி வருகிறோம். .......... முஹம்மது நபி (ஸல்) அவர்களுடைய இஸ்லாத்தின் வெற்றியை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. உலகில் திருக்குர்ஆனின் ஆட்சி

நிலைநாட்டப்படுகின்றது. உலகம் தனது கைகளால் உருவாக்கிய சிலைகளையும் மனிதர்களையும் வணங்குவதை விட்டு விலகி ஏக இறைவனை மட்டும் வணங்கும் காலம் அண்மையில் வரப்போகிறது. (Introduction to the Study of Holy Qruan Pages 499, 500)

சுருக்கமாக, ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் அஹ்மதிய்யா இயக்கம் ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா கண்டங்களைச் சேர்ந்த நாடுகளில் மிகவும் வேகமாகப் பரவியது. உலகெங்கும் பள்ளிவாயில்களும், பிரச்சார நிலையங்களும், மருத்துவமனை களும், கல்வி நிலையங்களும் அமைக்கப்பட்டன. பல மொழிகளில் ஆயிரக்கணக்கான புத்தகங்களும், பிரசுரங்களும் வெளியிடப்பட்டன. பல்வேறு மொழிகளில் திருக்குர்ஆன் மொழிபெயர்க்கப்பட்டது. திருக்குர்ஆன் வசனங்களுக்குச் சுருக்கமான விளக்கம் தரும் 'தஃப்ஸீர் ஸகீர்' என்ற நூலும், விரிவான விளக்கம் அளிக்கும் பெரும் பாகங்களைக் கொண்ட 'தஃப்ஸீரே கபீர்' என்ற நூலும் அவர்களுடைய சாதனைகளில் குறிப்பிடத்தக்கவையாகும்.

சுருங்கக்கூறின், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் தமக்குப் பிறக்கப்போகும் மகனைப் பற்றிச் செய்த முன்னறிவிப்புகள் மிகவும் அதிசயிக்கத்தக்க விதத்தில் நிறைவேறியதை உலகம் காண முடிந்தது.

### *பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படுதல்:*

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்பட்ட ஏராளமான சம்பவங்களால் அஹ்மதிய்யா

ஜமாஅத்தின் வரலாறு நிறைந்துள்ளது. அவற்றுள் இரண்டை மட்டும் இங்கு தருகிறோம்.

**1)** அப்துல் கரீம் என்ற பெயருடைய மாணவர் ஒருவர் ஆந்திரப் பிரதேசத்திலுள்ள ஹைதராபாத் நகரிலிருந்து காதியானுக்கு மத்ரஸா அஹ்மதிய்யாவில் மார்க்கக் கல்வி கற்பதற்காக வந்திருந்தார். அவரை ஒரு வெறி நாய் கடித்து விட்டது. எனவே சிகிச்சைக்காக அவர் கஸோலி என்னும் இடத்திற்கு அனுப்பப்பட்டார். சிகிச்சை முடிந்து காதியானுக்குத் திரும்பி வந்த சில நாட்களில் அவரிடம் அந்நோயின் அறிகுறிகள் காணப்பட்டன. வெளிச்சத்தைக் கண்டால் வெறுப்பும், தண்ணீரைக் கண்டால் பயமும், தூக்கமின்மையும் அவரிடம் காணப்பட்டன. உடனே கஸோலிக்குத் தந்தி மூலம் செய்தி அனுப்பப்பட்டது. அதற்குப் பதிலாக கஸோலியிலிருந்து, 'Sorry! Nothing can be done for Abdul Kareem' வருந்துகிறோம்! அப்துல் கரீமைக் குணப்படுத்த எதுவும் செய்ய இயலாது' என்ற செய்தி வந்தது. இவ்வாறு குணம் கிடைப்பதற்கான வழிகள் அனைத்தும் மூடபட்ட நிலையில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் அந்த மாணவருக்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்தார்கள். அல்லாஹ் அந்தப் பிரார்த்தனையை ஒப்புக்கொண்டு அவருக்கு முழுமையான உடல் நலத்தை வழங்கினான். அல்லாஹ் அவருக்கு நீண்ட ஆயுளை வழங்கி, பிள்ளைகளையும், பேரன் பேத்திகள் அடங்கிய பெரிய குடும்பத்தையும் வழங்கினான்.

வெறிநாய்க் கடித்ததால் உண்டான நோயின் அறிகுறிகள் தோன்றிய ஒருவர் இப்படி அதிசயிக்கத்தக்க விதத்தில் குணம்

பெற்றது வரலாறு காணாத அற்புதமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் உண்மைக்கான ஆதாரமும் ஆகும்.

2) பஞ்சாபில் மாலேர் கோட்லா என்னும் இடத்திலுள்ள நவாப் முஹம்மது அலிகான் என்பவரின் மகன் டைபாய்டு காய்ச்சலால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். சிகிச்சைகள் எதுவும் பலன் அளிக்காமல் போகவே, வைத்தியர்களும், டாக்டர்களும், நம்பிக்கை இழந்து நோய் குணப்படுத்த முடியாத நிலையை அடைந்து விட்டது என்று கூறி கை விட்டு விட்டனர். நோயாளி இன்னும் ஒரு சில மணி நேரமே உயிரோடு இருப்பார் என்று அனைவருமே கூறினர். இச்செய்தி கேட்டு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள், அவர் உடல் நலம் பெறுவதற்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்தார்கள். அந்த நிமிடம் முதல் நோயாளி குணமடையத் தொடங்கினார்; ஓரிரு தினங்களில் முழுமையான உடல் நலம் பெற்றார்.

பிரார்த்தனைகள் ஒப்புக்கொள்ளப்படுகின்றன என்பதை நிரூபித்துக் காட்டுவதற்காக, ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் உலகிலுள்ள எல்லா மார்க்கங்களைச் சேர்ந்தவர்களையும் போட்டிக்கு அழைத்தார்கள். ஆனால் எவரும் இந்த அறைகூவலை ஏற்க முன்வரவில்லை.

### இறையுதவி:

இறைவன் புறமிருந்து உதவிகள் கிடைக்கப்பெற்ற ஆயிரக் கணக்கான சான்றுகளால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வரலாறு நிரம்பிக் காணப்படுகிறது.

கல்வித் துறையில் அவர்கள் பெற்ற மாபெரும் வெற்றி இதற்கொரு சான்றாகத் திகழ்கிறது. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இந்தியாவை விட்டு எங்கும் சென்றதில்லை; எந்தவொரு ஆசிரியரிடத்தும் அரபு மொழியின் ஆரம்பக் கல்வி தவிர எதுவும் கற்கவுமில்லை.

இருப்பினும், இறைவன் அன்னாருக்கு அரபு மொழியில் எத்தகைய புலமையை வழங்கினான் என்றால், அவர்கள் அம்மொழியில் மிகச் சிறந்த பல நூல்கள் எழுதியுள்ளார்கள். தாம் எழுதிய சில அரபி நூல்களுக்கு, அரபு மொழியிலேயே பதில் எழுதுமாறு தமது எதிரிகளுக்கு அறைகூவல் விடுத்தார்கள். இஃஜாஸே அஹ்மதி, இஃஜாஸுல் மஸீஹ், நூருல் ஹக், அல்ஹுதா வத்தப்ஸிரத்து லிம(ன்)ய் யரா போன்ற தாம் எழுதிய அரபி நூல்களுக்கு, பதில் எழுதுவோருக்கு, ஒவ்வொரு நூலுக்கும் ரூ. 20,000/– பரிசு கொடுக்கப்படும் என்று அக்காலத்திலேயே அறிவித்தார்கள். இந்த அறைகூவலை ஏற்றுக்கொள்ள எவரும் முன்வரவில்லை.

## எதிர்ப்புகளும், அவற்றின் முடிவுகளும்

முன்பு தோன்றிய இறைதூதர்களிடமும், இறை இயக்கங்களோடு மக்கள் எவ்வாறு நடந்து கொண்டனரோ அவ்விதம் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களோடும் அன்னாரைப் பின்பற்றியவர்களுடனும் ஆரம்ப நாள் முதலே மக்கள் நடந்து கொண்டனர். பலமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது பொய் வழக்குத் தொடர்ந்தனர். அன்னாரைக் கொலை செய்யச் சதித் திட்டங்கள் தீட்டப்பட்டன. மிகவும் தரக்குறைவான

இழிமொழிகளில் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. பல பொய் செய்திகளையும், தப்பெண்ணங்களையும் மக்கள் மத்தியி பரப்பினர். இவை அனைத்திலும் எதிரிகள் தோல்வியே கண்டனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கும், அன்னாரைப் பின்பற்றியோருக்கும் எதிராக ஏராளமான குஃப்ர் ஃபத்வாக்கள் வெளியிடப்பட்டன. பள்ளிவாயில்களும், அடக்கஸ் தலங்களும் (கபருஸ்தான்) அஹ்மதிகளுக்கு மறுக்கப்பட்டன. இந்தத் துன்பங்கள் அனைத்தையும் அஹ்மதிகள் பொறுமையோடு சகித்துக் கொண்டனர். ஏனெனில் அல்லாஹ்வின் தீர்ப்பே இறுதியில் வெற்றி பெறும். உலகில் அஹ்மதிய்யா ஜமாஅத்தை எதிர்த்தவர்கள் அழிந்த பல வரலாறை நாம் காண்கிறோம். அவற்றில் ஒன்றிரண்டை இங்கு தருகிறோம்.

ஹஸ்ரத் மஹ்தி மஸீஹ் (அலை) அவர்களையும் அஹ்மதிய்யா இயக்கத்தையும் எதிர்த்தவர்கள் மீது இறைவனின் தீர்ப்பு எவ்வாறிருந்தது என்பதைக் காண்போம்.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் வாழ்ந்திருந்த காலத்தில் அஹ்லே ஹதீஸ் இயக்கத்தைச் சார்ந்த மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி என்பவர் புகழ்பெற்றவராக இருந்தார். இவர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு எதிராகப் பல்வேறு ஆலிம்களிடமிருந்து ‘குஃப்ர் ஃபத்வா’ – காஃபிர் என்ற தீர்ப்பைப் பெற இந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் செய்தார். இரு நூறு ஆலிம்களிடம் இத்தகைய ஃபத்வாக்களைப் பெற்று அவற்றை பிரசுரமாக வெளியிட்டார்.

இவ்வேளையில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இறைவன் புறமிருந்து கீழ்வரும் அறிவிப்பினைப் பெற்றார்கள்.

'இன்னீ முஹீனும் மன் அராத இஹானதக' – உம்மை இழிவுபடுத்த எண்ணுகின்றவரை நான் இழிவுபடுத்துவேன்.

மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் வாழ்வின் பிற்பகுதி இறைவனின் இந்த வாக்குறுதி அல்லது தீர்ப்பு எத்தனை அற்புதகரமாக நிறைவேறியது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் இழி செயலுக்குப் பிறகு அவருடைய செல்வாக்கு மங்கத் தொடங்கியது. அஹ்லே ஹதீஸ் இயக்கத்திலிருந்து அவர் நீக்கப்பட்டார். அவருடைய மனைவி மக்கள் அவரை விட்டுப் பிரிந்தனர். அவருடைய ஒரு மகன் கிறிஸ்தவராக மாறினார்.

அவர் தமது சந்ததிகளின் நிலையினை இவ்வாறு எழுதுகிறார்: "என்னுடைய சந்ததிகளின் நிலை 'ஃபிஸ்க்' (தீமை) என்ற நிலையைத் தாண்டி 'குஃப்ரியத்' (காஃபிர்) என்னும் நிலைக்கு வந்து விட்டது. நான் என்னுடைய சொத்தை இந்த தீயவர்களிடம் ஒப்படைத்தால் விபசாரத்திலும் குடியிலும் மூழ்கியுள்ள இவர்கள் ஒரு சில நாட்களில் அவற்றை காலி செய்து விடுவார்கள். என்னுடைய பிள்ளைகளும் உறவினர்களும் ஷரீஅத்தைப் பேணாமல் மார்க்கத்தையே புறக்கணிக்கின்றவர்களாக ஆகிவிட்டனர். என்னுடைய பிள்ளைகள் என்னையே 'நீர் எங்களின் தந்தையல்ல' என்றும், பிறரிடம் அவர்கள் என்னுடைய பிள்ளைகள் அல்ல என்றும் கூறுகின்றனர்."

(இஷாஅத்துஸ் ஸுன்னா பத்திரிகை பாகம் 22 பக்கம் 204)

அஹ்மதிய்யா ஜமாஅத் தோன்றிய நாளிலிருந்து அதனை முழு மூச்சாக எதிர்த்தவர்களில் அஹ்லே ஹதீஸ் தலைவராயிருந்த மவ்லவி ஸனாவுல்லாஹ்வும் ஒருவர். இவர் பஞ்சாப் மாநிலத்தில் உள்ள அமிர்தசரஸ் நகரைச் சார்ந்தவர். இவர் 'அஹ்லே ஹதீஸ்' என்னும் பத்திரிகையின் வாயிலாகவும் பல்வேறு பிரசுரங்கள் மூலமாகவும் அஹ்மதிய்யா ஜமாஅத் பற்றியும் அதன் தூய ஸ்தாபகரைப் பற்றியும் பல தவறான கருத்துகளைப் பரப்பிய வண்ணம் இருந்தார்.

இவருடைய அபாண்டமான குற்றச்சாட்டுகளுக்கும் அபத்தமான கூற்றுக்களுக்கும் பலமுறை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் சார்பாக மறுப்புக் கூறப்பட்டு அவருடைய கூற்றை நிரூபிக்கும்படி அறைகூவலும் விடுக்கப்பட்டது.

ஆனால், மவ்லவி ஸனாவுல்லாஹ் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் தொடர்ந்து தமது இழிசெயலைச் செய்து வந்தார். அப்போது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தூய ஸ்தாபகர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள், 'அஞ்சாமே ஆத்தம்' எனும் நூலின் மூலம் இந்தியாவில் புகழ்பெற்ற எல்லா ஆலிம்களுக்கும் தம்மோடு விவாதம் நடத்தவும் உண்மையாளர் யார் என்பதை வெளிப்படுத்தவும் இறைவனை வேண்டுவதற்காக அழைப்பு விடுத்தார்கள்.

"என்னை எதிர்க்கின்ற இவர்கள் அனைவரும் எனக்கு எதிராக 'முபாஹலா' –வை ஏற்றுக் கொண்ட ஒரு வருட காலத்திற்குள் இவர்கள் இறைவனின் கோபத்திற்கு இலக்காகவில்லை என்றால், இவ்வாறு ஏற்றுக் கொண்டவர்களில்

ஒரிருவராவது எஞ்சியிருந்தால் நான் ஒரு பொய்யன் என்று தீர்மானித்துக் கொள்ளுங்கள்.'' (அஞ்சாமே ஆத்தம் பக்கம் 67)

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் இந்த அழைப்பை அக்காலத்தில் வாழ்ந்திருந்த எந்த ஆலிமும் ஏற்க முன்வரவில்லை. மவ்லவி ஸனாவுல்லாஹ்வும் இதனைக் கண்டும் காணாதது போல் இருந்து விட்டார். ஆனால் அஹ்மதிய்யா இயக்கத்திற்கு எதிராக செயல்படுவதை மட்டும் அவர் விட்டுவிடவில்லை.

இதன் காரணமாக பலவித சர்ச்சைகள் நிலவி வந்தன. இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள், ''மவ்லவி ஸனாவுல்லாஹ்வுடன் ஒரு கடைசி ஒப்பந்தம்'' என்ற ஓர் அறிக்கையை வெளியிட்டு மவ்லவி ஸனாவுல்லாஹ்வை 'முபாஹலா' –விற்கு அழைத்தார்கள்.

ஆனால் இந்த அழைப்பை ஏற்காமல் மவ்லவி ஸனாவுல்லாஹ் தமது பத்திரிகையில் இவ்வாறெல்லாம் எழுதினார்:

''நீங்கள் எழுதியிருப்பதை ஏற்க எனக்கு சம்மதமில்லை.'' (அஹ்லே ஹதீஸ் 26.04.1907)

''அல்லாஹ் பொய்யர்களுக்கும் கள்வர்களுக்கும் குழப்பவாதிகளுக்கும் நீண்ட ஆயுளை அளிக்கின்றான்.'' (அஹ்லே ஹதீஸ் 31.07.1907)

ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் உண்மையாளராக இருந்தும் பொய்வாதியான முஸைலமா கத்தாபிற்கு முன்னதாகவே மரணமடைந்து விட்டார்கள். முஸைலமா பெரும் பொய்யனாக இருந்தும் 'ஸாதிக்' ஆன (உண்மையாளரான)

நபிபெருமானாரின் மறைவிற்குப் பிறகும் வாழ்ந்திருந்தான். (முறக்கயே காதியான் பக்கம் 7)

இவற்றிலிருந்து ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் அழைப்பை மவ்லவி ஸனாவுல்லாஹ் ஏற்கவில்லை என்பது தெளிவாகப் புலனாகிறது.

இதனைத் தொடர்ந்து ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இவ்வாறு அறிக்கை விடுத்தார்கள்:

பொய்யன் உண்மையாளருக்கு முன்னால் மரணமடைய வேண்டும் எனக்கோரி பரஸ்பரம் பிரார்த்திக்க வேண்டும் என்ற இந்த முபாஹலாவை அவர் (மவ்லவி ஸனாவுல்லாஹ்) ஏற்கவில்லை. இதனை அவர் ஏற்றிருந்தால் நிச்சயமாக எனக்கு முன்னர் அவர் மரணித்துப் போவார். (இஃஜாஸே அஹ்மதி பக்கம் 35)

கிறிஸ்தவர்களை முபாஹலாவிற்கு அழைத்து, அவர்கள் அதனை ஏற்காதிருந்தபோது அண்ணல் நபிபெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியிருந்ததாக அறிவிக்கப்பட்டிருக்கிறது:

"அந்தக் கிறிஸ்தவர்கள் முபாஹலா செய்திருந்தால் ஓராண்டிற்குள் அவர்களெல்லாம் மரணித்துப் போயிருப்பார்கள்." (தஃப்ஸீரே கபீர் தொகுதி 2 பக்கம் 499)

மவ்லவி ஸனாவுல்லாஹ், ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் விடுத்த சவாலை ஏற்காததோடு பொய்யர்களும் குழப்பவாதிகளும் முஸைலமா போன்றவர்களும் நீண்ட நாள் வாழ்வார்கள் எனக் கூறியிருந்தார். இதன்படியே இறைவனின் தீர்ப்பு அமைந்தது. மவ்லவி ஸனாவுல்லாஹ் நீண்ட நாள் வாழ்ந்திருந்தார். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின்

மறைவிற்குப் பின்னரும் அவர் வாழ்ந்திருந்தார். இதன் மூலம் அவருடைய கூற்றின்படி, அவரே பொய்யர்; அவரே குழப்பக்காரர்; அவரே முஸைலமா போன்றவர் என்பது உறுதியாயிற்று.

மவ்லவி ஸனாவுல்லாஹ், அஹ்மதிய்யா இயக்கத்தை பல வழிகளில் எதிர்த்திருந்தும் அது நாளுக்கு நாள் வளர்ந்தோங்கி வருவதைக் கண்டு பொறாமை கொண்டார். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் மறைவிற்குப் பின் அவ்வியக்கம் அழிந்துவிடும் என எண்ணினார்.

1908 மே மாதம் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் வஃபாத் ஆனபோது மவ்லவி ஸனாவுல்லாஹ் ஆனந்தக் கூத்தாடினார்.

1908 ஜூன் மாதம் 13 ஆம் நாளில் 'வக்கீல்' எனும் வார ஏட்டில் மவ்லவி ஸனாவுல்லாஹ் இவ்வாறு ஓர் அறிக்கை வெளியிட்டார்:

"மிர்ஸாவின் எல்லா நூற்களையும் கிழித்து கடலில் எறிய வேண்டும் அல்லது நெருப்பிட்டுக் கொளுத்த வேண்டும் என முஸ்லிம்களிடத்தில் இறைவனின் பெயரால் நான் கேட்டுக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல. முஸ்லிம் அல்லது முஸ்லிமல்லாத எந்த வரலாற்று ஆசிரியரும் இந்திய இஸ்லாமிய வரலாற்றில் மிர்ஸாவைப் பற்றி ஒரு வார்த்தை கூட எழுதக்கூடாது."

மவ்லவி ஸனாவுல்லாஹ் அஹ்மதிய்யா இயக்கத்தோடு கொண்டிருந்த பகைமையைப் பிரதிபலிக்கும் இந்த அறிக்கை பொதுமக்களிடையே எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. மாறாக, ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுடைய நூற்கள் பலமொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு பொதுமக்களால்

பெரிதும் விரும்பி படிக்கப்பட்டன. இவ்வகையிலும் மவ்லவி ஸனாவுல்லாஹ் பெருத்த ஏமாற்றம் அடைந்தார்.

இனி மவ்லவி ஸனாவுல்லாஹ்வின் முடிவு எவ்வாறிருந்தது என்பதைப் பார்ப்போம்.

மவ்லவி அப்துல் மஜீது ஸோஹத்ரவி என்பவர் மவ்லவி ஸனாவுல்லாஹ்வின் வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ளார். ஸீரத்தே ஸனாயி என்பது அந்நூலின் பெயராகும். இந்நூலில் இந்தியா பாகிஸ்தான் பிரிவினை காலத்தில் (1947 இல்) பஞ்சாப் மாநிலத்தில் நடைபெற்ற பயங்கரமான இனக் கலவரத்தைக் குறிப்பிட்டு நூலாசிரியர் இவ்வாறு வரைகிறார்.

“மவ்லவி ஸனாவுல்லாஹ் ஒரு இலட்சாதிபதியாக வாழ்ந்திருந்தார். பல ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நூலகம் ஒன்று அவருக்குச் சொந்தமானதாக இருந்தது. இனக்கலவரத்தின் போது சொற்ப பணத்துடனும் ஆடைகளுடனும் தமது குடும்பத்தினருடன் தமது சொந்த வீட்டை விட்டு வெளியேற வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது. இவரது வீட்டில் புகுந்த குண்டர்கள் இவருடைய செல்வங்களைக் கொள்ளையடித்தனர். அது மட்டுமல்ல. இவர் தமது உயிரை விட அதிகமாக நேசித்த இவரது நூலகத்தைத் தீயிட்டுக் கொளுத்தினர். இவரது ஒரே மகன் கலவரத்தில் கொல்லப்பட்டபோது இவர் அடைந்த துயரத்தைவிட இவருடைய நூற்கள் தீக்கிரையான போது இவர் அடைந்த துக்கம் பன்மடங்காயிருந்தது. இவருடைய மரணத்திற்கு இந்த இரு துயரங்களுமே காரணமாக இருந்தன.

(ஸீரத்தே ஸனாயி பக்கம் 389, 390)

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் நூல்களைத் தீக்கிரையாக்குவதன் மூலம் அஹ்மதிய்யா இயக்கத்தை அழித்து விடலாம் என மவ்லவி ஸனாவுல்லாஹ் எண்ணினார். ஆனால் இறைவனுடைய தீர்ப்பு வேறு விதமாக இருந்தது. மவ்லவி ஸனாவுல்லாஹ் தமது வாழ்நாளில் சேகரித்திருந்த பல அரிய நூற்கள் அவர் எதிரிலேயே தீக்கிரையாகின. அவருடைய ஒரே ஆண் வாரிசும் கொலை செய்யப்பட்டார். அவருடைய செல்வங்கள் அனைத்தும் அழிந்தன. இந்தத் துக்கங்களைத் தாங்க இயலாமல் அவரும் மரணித்தார்.

ஆனால், அஹ்மதிய்யா இயக்கம் இந்தியா, பாகிஸ்தான் பிரிவினையால் எவ்வித பாதிப்பும் இல்லாது வளர்ந்தோங்கியது. அதற்கு இந்தியாவில் ஒரு தலைமையகமும் பாகிஸ்தானில் ஒரு தலைமையகமும் உருவாகின. உலக நாடுகளிலெல்லாம் அது தனது பிரச்சார நிலையங்களை நிறுவி செயல்படத் தொடங்கியது. இவையெல்லாம் அஹ்மதிய்யா இயக்கம் ஓர் உண்மையான இயக்கம் என இறைவன் அளித்திட்ட தீர்ப்புகளாகும்.

இக்காலத்தின் இறைவழிகாட்டியான ஹஸ்ரத் இமாம் மஹ்தியின் இயக்கத்திற்கு எதிராகச் செயல்பட்டவர்கள் எந்த அளவுக்கு இறைவனின் கோபத்திற்கும் சாபத்திற்கும் இலக்கானார்கள் என்பதை விளக்குவதென்றால் அஹ்மதிய்யா இயக்கத்தின் 90 ஆண்டு கால வரலாற்றையே இங்கு விவரிக்க வேண்டியது வரும்.

அஹ்மதிய்யா இயக்கத்தை அழிக்க மக்களிடையே மிகுந்த செல்வாக்குள்ள சிலர் முயன்றதையும் அவர்களுக்கு எதிராக இறைவனின் தீர்ப்பு அமைந்திருந்ததையும் நாம் கண்டோம்.

இப்போது அதிகார பீடத்தில் இருந்தவர்கள் அஹ்மதிய்யா இயக்கத்திற்கு எதிராக செயல்பட்டதையும், இறைவனுடைய வல்லமைக்கு முன்னால் அவர்கள் தோற்றுப்போனதையும், அவனுடைய சாபம் அவர்களைத் தொடர்ந்ததையும் இனி காண்போம்.

ஆப்கானிஸ்தானில் நெஞ்சை உலுக்குகின்ற ஒரு சம்பவம் நடைபெற்றது. இமாம் மஹ்தி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் காலத்திலேயே பிரசுரங்களும் நூற்களும் வெளியிடப்பட்டு பல்வேறு நாடுகளுக்கு அவை அனுப்பப் –பட்டிருந்தன. ஆப்கானிஸ்தானில் அக்காலத்தில் மிகப் பிரபலமான வலியுல்லாஹ் ஆகவும் ஆப்கான் மன்னருக்கு முடிசூட்டும் தகுதி பெற்றவருமான ஹஸ்ரத் சாஹிப் ஸாதா செய்யது அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களுக்கு இத்தகைய நூற்கள் சில கிடைத்தன. அந்நூற்களால் பெரிதும் கவரப்பட்ட அவர் தமது சீடரான ஹஸ்ரத் மவ்லானா அப்துர் ரஹ்மான் அவர்களைக் காதியானுக்கு அனுப்பினார். மவ்லானா அவர்கள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களைச் சந்தித்து தாமும் பைஅத் செய்து, சாஹிப் ஸாதா செய்யது அப்துல் லத்தீஃப் சாஹிப் சார்பாகவும் பைஅத் செய்தார்.

ஆப்கானிஸ்தான் திரும்பிய மவ்லானா அப்துர் ரஹ்மான் அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றி விட்ட நற்செய்தியை

அங்கு அறிவித்தார். அங்கிருந்த ஆலிம்கள் கொதித்தெழுந்தனர். மவ்லானா மார்க்கத்தைக் கெடுக்க முயல்வதாக குற்றம் சாட்டினர். இதன் விளைவாக அங்கிருந்த அமீர் அவருக்கு மரண தண்டனை விதித்தார். எவ்வித குற்றமும் இழைக்காத மவ்லானா அவர்களை அம் மாபாவிகள் கழுத்தில் துணியைக் கட்டி மூச்சுத் திணற வைத்து ஷஹீதாக்கினார்கள்.

இச்சம்பவம் நடைபெற்று இரண்டு வருடங்கள் கழித்து ஹஸ்ரத் சாஹிப் ஸாதா செய்யது அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்கள் காதியான் சென்றார்கள். சில மாதங்கள் அங்கு தங்கி ஹஸ்ரத் மஹ்தி மஸீஹ் (அலை) அவர்களிடமிருந்து ஆன்மீக ஞானங்களைப் பெற்றார்கள்.

ஹஸ்ரத் சாஹிப் ஸாதா சாஹிப் காதியான் சென்றதை அறிந்த அங்கிருந்த ஆலிம்கள் போர்க்கொடி தூக்கினர். எவர்கள் ஹஸ்ரத் சாஹிப் ஸாதா அவர்களை வலியுல்லாஹ் எனப் போற்றினார்களோ அவர்களே பின்னர் காஃபிர் எனத் தூற்றத் தொடங்கினர். அது மட்டும் அல்ல. அவர்களெல்லாம் ஒன்று திரண்டு அப்போது ஆப்கானிஸ்தான் அமீராக இருந்த ஹபீபுல்லாஹ் கானிடம் ஹஸ்ரத் சாஹிப் ஸாதாவுக்கு எதிராகப் புகார் செய்தனர். இதன் விளைவாக செய்யது சாஹிப் ஸாதா தமது கொள்கைகளைக் கைவிட்டு தவ்பா செய்யவில்லை என்றால் அவர்களைக் கல்லால் அடித்துக் கொல்லப் போவதாக அமீரின் சார்பாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் ஹஸ்ரத் சாஹிப் ஸாதா செய்யது அப்துல் லத்தீப் சாஹிப் காதியானில் தோன்றியுள்ள ஹஸ்ரத் மிர்ஸா குலாம்

அஹ்மது (அலை) அவர்களே வாக்களிக்கப்பட்ட மஹ்தி மஸீஹ் என்ற தமது நம்பிக்கையை மாற்றப்போவதில்லை என உறுதியாகக் கூறினார்கள். தாம் உண்மையெனக் கண்டவற்றை மரணமே வந்தாலும் மறுப்பதற்கில்லை என அவர்கள் தெரிவித்தார்கள்.

செய்யது சாஹிப் அவர்களைக் கல்லால் அடித்துக் கொல்ல வேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டது. அத்தண்டனை நிறைவேற்ற சில நிமிடங்கள் இருக்கையில் ஆப்கானிஸ்தான் அமீர் ஹபீபுல்லாஹ் ஹஸ்ரத் சாஹிப் ஸாதா அவர்களிடம் வந்து தவ்பா செய்யுமாறு வேண்டினார். பகிரங்கமாக அறிவிக்கா விட்டாலும் தமது காதில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை ஏற்கவில்லை என ஒரு வார்த்தை சொன்னால்போதும், தான் செய்யது சாஹிபை விடுதலை செய்யத் தயாராக இருப்பதாகக் கூறினார். ஆனால் உண்மைக்கு எதிராக தமது உயிரைத் துச்சமென மதிப்பதாக ஹஸ்ரத் செய்யது சாஹிப் கூறி விட்டார்கள். கோபமடைந்த அமீர் செய்யது சாஹிபைக் கல்லால் அடித்துக் கொல்ல ஆணையிட்டார். ஆணை நிறைவேற்றப்பட்டது. ஈஸா நபியை சிலுவையில் அறைந்து கொலை செய்யச் சொன்ன யூத மத பண்டிதர்களையொத்த ஆப்கானிஸ்தானில் வாழ்ந்த ஆலிம்கள், மார்க்கத்திற்குப் பெரும் தொண்டாற்றி விட்டதாக மனமகிழ்ந்தனர். ஆனால் இந்தப் படுகொலை, ஓர் உண்மையான இறை அடியாரைக் கொன்ற பாவம் ஆப்கானிஸ்தான் மீது இறைவனின் சாபம் இறங்குவதற்குக் காரணமாக அமைந்தது.

இச்சம்பவங்கள் நடைபெறுவதற்கு சுமார் இருபது வருடங்களுக்கு முன் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கீழ்வருமாறு ஓர் இறை அறிவிப்பைப் பெற்றிருந்தார்கள்.

'ஷா(த்)தானி துத் பஹானி' – இரண்டு ஆடுகள் பலியிடப்படும்.

உயிர்த் தியாகிகளான ஹஸ்ரத் சாஹிப் ஸாதா செய்யது அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களும், மவ்லானா அப்துர் ரஹ்மான் அவர்களும் உண்மையில் இறைவனுக்காக தம் இன்னுயிரையே அர்ப்பணித்து ஆப்கான் மண்ணில் ஷஹீதான சம்பவத்தையே மேற்கண்ட இறை வெளிப்பாடு அறிவிக்கிறது.

அஹ்மதிய்யத்தின் உண்மைக்காக தம்மையே அர்ப்பணித்துக் கொண்ட இவ்விருவரின் திருநாமங்கள் அஹ்மதிகளின் நெஞ்சத்தில் என்றென்றும் நிலைத்திருக்கும்.

இத்துயரச் சம்பவத்தைப் பற்றி அறிந்த ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ‘‘காபூல் பூமியே! கொடூரமான செயல் உன் மீது நடந்தேறியுள்ளது. பாக்கியமற்ற நாடே! நீ இறைவனுடைய பார்வையில் மிகவும் இழிவுற்று வீழ்ந்து விட்டாய். அக்கிரமும், அநியாயமும் நடைபெறுகின்ற பூமியாக நீ மாறிவிட்டாய்! ’’ (தத்கிரதுஷ் ஷஹாததைன்)

இச்சம்பவம் நிகழ்ந்து ஒரு மாதத்திற்குள் ஆப்கானிஸ்தான் இறை ஆக்கினைக்கு உள்ளாகியது. காபூலில் மிகக் கொடூரமான காலரா நோய் பரவியது. ஆயிரக்கணக்கானோர் இந்நோயிற்குப் பலியாயினர். ஹஸ்ரத் செய்யது அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களைக் கொலை செய்வதற்குக் காரணமாயிருந்த அத்தனை பேரும் மாண்டனர். இறைவனின் ஒரு நல்லடியாரை அநியாயமாகக் கொன்றதனால் இந்நிலை ஆப்கானிஸ்தானுக்கு ஏற்பட்டிருக்கிறது என மக்கள் வெளிப்படையாகவே கூறினர். பலரும் அஹ்மதிய்யத்தின் உண்மையைத் தெரிந்து அதனை ஏற்றனர்.

ஆனால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் அறிவிப்பின் படி ஆப்கானிஸ்தான் இன்றுவரை பாக்கியமிழந்த நாடாக இறைவனின் கோபத்திற்கும் சாபத்திற்கும் இலக்கான ஒரு நாடாக இருந்து வருகிறது. இக்கொடிய சம்பவம் 1903 –இல் நடைபெற்றது. அது முதல் இந்நாள் வரை ஆப்கானிஸ்தானில் ஆட்சிக்கு வருபவர்கள் அனைவரும் கொல்லப்படுகின்றனர். அமைதியான ஆட்சி என்பது அங்கு இல்லாதொழிந்து விட்டது.

ஹஸ்ரத் ஸெய்யது அப்துல் லத்தீஃப் அவர்களை கல்லால் எறிந்து கொல்ல உத்தரவிட்ட அமீர் ஹபீபுல்லாஹ் கான் தன்னுடைய சொந்த மகனாலேயே கொலை செய்யப்பட்டார். தந்தையைக் கொன்று அரசுக் கட்டிலில் ஏறிய அமீர் அமானுல்லாஹ் கானுக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்தனர். மக்களின் எதிர்ப்பை சமாளிக்க முடியாத நிலையில் இவர் நாட்டை விட்டு ஓடினார். பின்னர் பச்சர் ஸிக்கா என்பவர் அரசரானார். அவரும் கொலை செய்யப்பட்டார். நாதிர் கான் என்பவர் நாதிர்ஷா என்ற பெயரில் அரசரானார். அவரும் கொலை செய்யப்பட்டார். அதன் பிறகு ஸாஹிர் ஷா என்பவர் அரசரானார். 1973 ஜூன் 17 –இல் ஸர்தார் தாவூத் கான் ஸாஹிர் ஷாவை நாடுகடத்தியதுடன், முடியாட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகக் கூறி ஆப்கானிஸ்தானுக்கு ஜனாதிபதி ஆனார். ஆனால் 1977 ஏப்ரல் 27 –இல் நூர் முஹம்மது தராக்கி என்பவர் தாவூத் கானையும் அவரது குடும்பத்தினரையும் கொலை செய்துவிட்டு தன்னை ஜனாதிபதியாகப் பிரகடனப்படுத்திக் கொண்டார். அடுத்து ஹஃபீஸுல்லாஹ் அமீன் என்பவர் நூர் முஹம்மது தராக்கியையும் அவரது குடும்பத்தினரையும்

கொன்றுவிட்டு ஜனாதிபதி ஆனார். 1979 –இல் பப்ரக் கார்மல் ஹஃபீஸுல்லாஹ் அமீனைக் கொலை செய்தார்.

இவ்வாறு 1903 முதல் இந்நாள் வரை ஆப்கானிஸ்தானில் ஆட்சியாளர்கள் கொல்லப்படுவதும், குழப்பமான சூழ்நிலையும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. பின்பு ஆப்கானிஸ்தானில் ஜனாதிபதி பப்ரக் கார்மல் ரஷ்யாவின் பிடியில் அகப்பட்டுக் கொண்டார். 80,000 ரஷ்யத் துருப்புகள் ஆப்கானிஸ்தானில் இருந்தபோதிலும், அங்கு அமைதியும் சமாதானமும் ஏற்படவில்லை.

இவையெல்லாம் ஆப்கானிஸ்தானுக்கு எதிராக இறைவனின் தீர்ப்பு உள்ளது என்பதற்கான சான்றுகளாகும்.

அஹ்மதிய்யா இயக்கம் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வரும் ஓர் இறை இயக்கமாகும். இதற்கு எதிரில் பதவி மோகமும் உலக ஆசையும் கொண்டு, வேண்டுமென்றே எதிர்ப்பும் ஏளனமும் செய்வோரையும், அடக்குமுறையைக் கையாண்டு அநியாயம் செய்வோரையும் இறைவன் தண்டிக்காமல் விட்டதில்லை. ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்கள் வாழ்நாளிலும், அதற்குப் பின்னரும் இதற்கு ஏராளமான சான்றுகள் காணக்கிடைக்கின்றன. குறிப்பாக எகிப்திய மன்னர் பாரூக், ஹைதராபாத் நிஸாம், பாகிஸ்தான் அதிபர் பூட்டோ ஆகியோரின் ஆட்சி அதிகாரங்கள் பறிக்கப்பட்டு அவர்கள் அழிவிற்குள்ளாயினர். இவை யாவும் சிந்திக்க மக்களுக்குத் தகுந்த எடுத்துக்காட்டுகளாகும்.

1952 –ஆம் ஆண்டு எகிப்தில் பாரூக் மன்னர் மிகவும் வலிமை மிக்கவராக ஆட்சி புரிந்து கொண்டிருந்தார். இஸ்லாமியக்

குடியரசு என்று பிரகடனப்படுத்திக் கொண்ட ஒரு நாட்டின் மன்னராக இருந்தும், உயரிய இஸ்லாமிய வாழ்க்கை நெறிகளைக் கடைபிடித்து ஒழுகாமல், இஸ்லாம் அனுமதிக்காத மோசமான வாழ்வை அவர் நடத்தி வந்தார். குடித்துக் கூத்தாடி விபசாரச் செயல்களில் ஈடுபட்டு இழிவான வாழ்க்கையை நடத்தி வந்தார். அப்போது பாகிஸ்தான் அரசின் வெளியுறவு அமைச்சராக, அரபு நாடுகளில் பேரும் புகழும் பெற்றுத் திகழ்ந்த ஸர். முஹம்மது ஸஃபருல்லாஹ் கான் அவர்கள் எகிப்து நாட்டிற்கு வருகை தந்தார்கள். பாரூக் மன்னரைச் சந்தித்து மிகவும் அன்புடனும், நேசத்துடனும் அவர் நடத்தி வரும் இஸ்லாத்திற்கு முரண்பட்ட இந்த வாழ்க்கையைக் கைவிட்டு, ஓர் இஸ்லாமிய ஆட்சியின் தலைவருக்கே உரிய – இஸ்லாத்தின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட அழகிய வாழ்க்கை முறையை கடைபிடித்து ஒழுகுமாறு நல்லுபதேசம் செய்தார்கள். பாரூக் மன்னரின் மோசமான செயல்முறை மற்றும் பழக்கவழக்கங்களால் எகிப்தின் உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதையும் மாற்று மதத்தைச் சார்ந்தோர் மத்தியில் இஸ்லாத்திற்கு அவமதிப்பு ஏற்பட்டுள்ளதையும் சுட்டிக் காட்டினார்கள்.

இந்த நல்லுபதேசங்களைக் கேட்டு தன்னைச் சீர்திருத்திக் கொள்வதை விடுத்து, மன்னர் பாரூக் ஹஸ்ரத் முஹம்மது ஸஃபருல்லாஹ் கான் அவர்கள் மீது கோபம் கொண்டார். அன்னாரை அவமதிக்க பல்வேறு திட்டங்களைத் தீட்டினார். அத்திட்டங்களில் ஒன்றாக, அப்போது எகிப்தில் முஃப்தியாக விளங்கிய ஷேக் ஹுஸைன் முஹம்மது மக்லூப் என்பவரையும், வேறு சில ஆலிம்களையும் ஒன்று திரட்டி, 'ஸஃபருல்லாஹ் கான்

ஓர் அஹ்மதி; அவருக்கு எதிரான ஒரு ஃபத்வாவை (மார்க்கத் தீர்ப்பை) வழங்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார். அந்த அரசு உத்தரவைக் கட்டாயம் செயல்படுத்தியாக வேண்டும் எனவும் கட்டளையிட்டார். இதனைக் குறித்து பெய்ரூத்தில் இருந்து வெளிவரும் 'அஸ்ஸய்யாத்' என்னும் பத்திரிகை 7.8.1952 அன்று தமது வெளியீட்டில் பின்வருமாறு செய்தி வெளியிட்டிருந்தது.

“ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டம் முடிந்து, பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் மதிப்பிற்குரிய ஸஃபருல்லாஹ் கான் எகிப்து வழியாக தமது நாட்டிற்குப் பயணமானார்கள். அப்போது, உலகின் மிகப் பெரும் மார்க்க, அரசியல் தலைவரான ஸஃபருல்லாஹ் கான், எகிப்து மன்னர் பாரூக்கைச் சந்தித்து சில அரசியல், மார்க்க விஷயங்களைக் குறித்து நல்லாலோசனை வழங்கினார்கள். இதனை மன்னர் விரும்பவில்லை. இந்தச் சந்திப்பிற்குப் பிறகு மன்னர் அஸ்ஹரிலுள்ள ஆலிம்களை அழைத்து ஸஃபருல்லாஹ் கான் அவர்கள் காஃபிர் என்றும், அவர் இஸ்லாத்திற்கு அப்பாற்பட்டவர் என்றும் ஃபத்வா (மார்க்கத் தீர்ப்பு) வழங்க வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார். அதன்படி அவர்கள் பத்திரிகைகளில் அறிக்கை கொடுத்துள்ளனர்.”

இந்த ஃபத்வா வெளிவந்ததும் பாரூக் மன்னருக்கும், அதனை வெளியிட்ட முஃப்திக்கும் எதிராக மிகப்பெரும் கிளர்ச்சி ஏற்பட்டது. ஃபத்வா வெளிவந்த மறுநாளே, அரபு லீக்கின் பொதுச் செயலாளர் உஸ்ஸாம் பாஷா என்பவர் 'அல்ஜதீதா' என்னும் பத்திரிகையில் ஓர் அறிக்கை வெளியிட்டார்.

“காதியானி ஜமாஅத்தைப் பற்றிய முஃப்தியின் கருத்துக்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுப்பதைக் கண்டு நான் ஆச்சரியம் அடைகிறேன். இந்த அறிக்கையை மார்க்கத்தின் போதனை என்றும் ஷரீஅத்தின் தீர்ப்பு என்றும் ஒப்புக் கொண்டால், பின்னர் மக்களின் கொள்கைகளும் அவர்களின் எதிர்காலமும் சில ஆலிம்களின் கருணைக்கு ஏங்கி நிற்கும் நிலை ஏற்பட்டு விடும். முஸ்லிம் சமுதாயத்தின் ஏதாவது பிரிவுக்கு எதிராக குஃப்ர் ஃபத்வா கொடுத்துக் கொண்டிருந்தால், அது முஸ்லிம் சமுதாயத்தின் நலனை மோசமாகப் பாதித்து விடும். குஃப்ர் ஃபத்வா வழங்குவதிலிருந்தும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்ற இஸ்லாத்தின் மிகச் சிறந்த கொள்கைக்கு மாறுபட்ட செயல்தான் இது.” (அல்ஜதீதா, ஆகஸ்டு 1952)

பெய்ரூத்திலிருந்து வெளிவரும் ‘பெய்ரூத்துல் மஸாயி’ என்னும் பத்திரிகை, முஃப்தி மக்லூபிற்கு எதிராக எழுதிய ஒரு நீண்ட கட்டுரையின் இறுதியில் இவ்வாறு வரைகின்றது:

“ஷேக் மக்லூப் முஸ்லிம் பிரிவுகளுக்கு மத்தியில் வேற்றுமையையும் குழப்பத்தையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறார். முஸ்லிம் பிரிவுகளுக்கு மத்தியில் ஒற்றுமை மிகவும் தேவைப்படும் இந்தக் காலகட்டத்தில் முஃப்தி இவ்வாறு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அஹ்மதி முஸ்லிம்களுக்கு எதிராக குஃப்ர் ஃபத்வா வழங்க முஃப்திக்கு என்ன ஆகிவிட்டது? என்று தெரியவில்லை. எகிப்து அரசு, மக்களின் ஏகோபித்த கருத்துக்குச் செவிசாய்த்து இந்த முஃப்தியைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். பாகிஸ்தான்

அரசின் வெளியுறவு அமைச்சர் ஸஃபருல்லாஹ் கான், ஓர் அஹ்மதி என்ற காரணத்திற்காகவே அவருக்கு எதிராக குஃப்ர் ஃபத்வா கொடுத்துள்ளார். ” (பெய்ரூத்துல் மஸாயி ஆகஸ்டு 1952)

இவ்வாறு எகிப்து முழுவதுமுள்ள மக்களின் வெறுப்பின் காரணமாக ஒரு மாத காலத்திற்குள் அந்த முஃப்தி பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

ஆனால், நிலைமை அத்தோடு முடிந்துவிடவில்லை. இறைவனின் கோபக்கனல் இதற்கெல்லாம் காரணமாக இருந்த எகிப்து மன்னர் மீது விழுந்தது. மன்னர் பாரூக், தான் அரசர் என்ற காரணத்தால் அகம்பாவமும், பெருமையும் கொண்டிருந்தார். தனது ஆட்சியையும், அதிகாரத்தையும் பயன்படுத்தி அஹ்மதிகளைக் காஃபிர்கள் என்று முத்திரையிட்டு, அவர்களை அவமானத்திற்கு உள்ளாக்கலாம் என்று அவர் கருதினார்.

ஆனால் இறைவன் புறமிருந்து அவருக்குக் கிடைத்த தண்டனையைப் பார்க்கும்போது,

“நான் அரசருக்கெல்லாம் அரசனல்லவா?” என்று இறைவன் திருமறையில் கேட்கும் கேள்வியின் பொருள் நமக்கு தெளிவாகப் புலப்படுகின்றது.

அவர்களது ஃபத்வா வெளிவந்த அடுத்த மாதத்திலேயே மன்னர் பாரூக்கிற்கு எதிராக மிகப்பெரிய கிளர்ச்சி தோன்றியது. எகிப்து இராணுவ தளபதி நஜீபின் தலைமையில் கிளர்ச்சி தோன்றி பாரூக் மன்னர் பதவி நீக்கம் செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டார். பெரும் அவமானத்திற்குள்ளாகி தமது

பதவியையும், நாட்டையும் துறந்து வேற்று நாட்டில் தஞ்சம் புக வேண்டிய இழிநிலைக்கு ஆளானார். நாடு கடத்தப்பட்டபின் அவருடைய வாழ்க்கை மிகவும் மோசமடைந்தது.

இவ்வாறு, இறைவன் இமாம் மஹ்தி (அலை) அவர்களுக்கு அளித்த, ‘‘இன்னீ முஹினும் மன் அராத இஹானதக – உம்மை அவமானப்படுத்த எண்ணுவோரை நான் அவமானத்திற்கு உள்ளாக்குவேன்’’ என்ற தனது வாக்குறுதியை மீண்டும் நிறைவேற்றினான்; தனது தூதரின் உண்மைக்குச் சான்றாக இதனை ஆக்கினான்.

***ஹைதராபாத் நிஸாமின் முடிவு:***

1947 –ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பு வரை ஹைதராபாத் சமஸ்தானம் நிஸாமின் ஆட்சியின் கீழ் இயங்கி வந்தது. அப்போது இந்தியாவில் இருந்த சமஸ்தானங்களுள் மிகப் பெரிதாக இருந்த ஹைதராபாத் சமஸ்தானம், தற்போது ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களின் சில பகுதிகளும் கூட ஹைதராபாத் சமஸ்தானத்தில் அடங்கும். நிஸாம் மீர் உஸ்மான் அலிகான் இந்த சமஸ்தானத்தின் அதிபராகத் திகழ்ந்தார். அன்றைய தினம் உலகில் இருந்த மிகப்பெரும் செல்வந்தர்களில் ஒருவராகத் திகழ்ந்த மீர் உஸ்மான் அலி கான் என்பவர் இந்தச் சமஸ்தானத்தின் நிஸாமாக இருந்து ஆண்டு வந்தார்.

இந்த சமஸ்தானத்தின் பல்வேறு இடங்களில் அஹ்மதிய்யா இயக்கம் இயங்கி வந்தது. ஆனால் அங்கு வாழ்ந்து வந்த அஹ்மதிகள் பல்வேறு இன்னல்களுக்கும் துன்பங்களுக்கும்

ஆளாயினர். அவர்களின் உயிருக்கும் உடமைக்கும் எந்த நேரமும் ஆபத்து ஏற்படலாம் என்ற நிலையே இருந்தது. இவற்றிற்கெல்லாம் காரணம் அங்கு வாழ்ந்த அஹ்மதிகளுக்கு எதிரான ஆலிம்கள், ஷேக்மார்களின் தூண்டுதலே ஆகும். சமஸ்தானத்தின் தலைநகரான ஹைதராபாத்தில் பள்ளிவாசல் கட்டுவதற்குக் கூட அஹ்மதிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் அஹ்மதிய்யா இயக்கத்தின் அப்போதைய இமாமும், இயக்கத்தின் இரண்டாவது கலீஃபாவுமான ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள், சமஸ்தானத்தின் நிஸாம் நவாப் மீர் உஸ்மான் அலிகான் பஹாதுர் சுல்தானுல் உலூம் என்பவருக்கு விளக்கமான நீண்ட ஒரு கடிதம் எழுதினார்கள். இக்கடிதம் “துஹ்ஃபத்துல் முலூக்” என்னும் பெயரில் நூல் வடிவில் வெளிவந்துள்ளது. அக்கடிதத்தில் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் உண்மையைத் தெளிவாக விளக்கி, அஹ்மதிய்யா இயக்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக்கூறி, இவ்வியக்கத்தில் இணையுமாறு நிஸாமுக்கு அழைப்பு விடுத்தார்கள். இந்த அழைப்பினை மதித்து ஏற்காவிட்டால் ஏற்படவிருக்கும் மிகப்பெரும் அரசியல் புரட்சி குறித்தும் அக்கடிதத்தில் எச்சரிக்கை விடுத்திருந்தார்கள். இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அக்கடிதத்தில் இவ்வாறு எழுதுகிறார்கள்.

“வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்ற (இமாம் மஹ்தியின்) வாதம் மிகவும் முக்கியமானதொரு வாதமாகும். முஸ்லிம் என்று கூறும் ஒவ்வொருவரும் இவ்வாதத்தைப் பற்றி ஆராயக்

கடமைப்பட்டிருக்கின்றார். எனவே தாங்களும் இந்த வாதத்தைப் பற்றி ஆய்வு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். தங்களுடைய செயலின் பிரதிபலிப்பு தங்களது சமஸ்தானத்தின் கீழுள்ள குடிமக்களையும் பாதிக்கும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எனவே தாங்கள் இந்தச் சத்தியத்தை ஒப்புக் கொண்டால், அது தாங்கள் மட்டுமல்லாது, தங்களுக்கு கீழிருக்கும் ஆயிரக்கணக்கான மக்களையும் இந்த உண்மையை ஒப்புக் கொள்ள வைத்ததற்குச் சமமாகும். அவ்வாறு நடந்தால் அதற்கான நற்பலனும் தங்களுக்குக் கிடைக்கும். அதே போன்று, தாங்கள் இந்த உண்மையை நிராகரித்தால், அதன் விளைவு தங்களை மட்டுமல்லாது ஆயிரக்கணக்கான மக்களையும் உண்மையை ஒப்புக்கொள்வதிலிருந்தும் தடை செய்ததற்குச் சமமாகும். இறைவன் சந்நிதியில் அதற்கு நீங்களே பொறுப்பேற்க வேண்டும். ஏனெனில், அரசர்களுக்கெல்லாம் அரசனான இறைவன் முன்னால், அரசனும் ஆண்டியும் ஒரேவிதமான பொறுப்பாளிகளாகவே இருக்கின்றனர். இதுபோன்ற ஒரு கடிதத்தை தங்களுக்கு எழுத வேண்டும் என்று எனக்குக் கட்டளை கிடைத்ததின் பேரிலேயே இதனை எழுதுகிறேன். இந்த அழைப்பைத் தங்களுக்கு விடுத்ததன் மூலம் எனது பொறுப்பில் இருந்தும் கடமையிலிருந்தும் என்னை விடுவித்துக் கொண்டேன்.

இந்த மாபெரும் அருட்கொடையை ஹஸ்ரத் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) அவர்களின் ஆன்மீகச் சீடரை ஏற்றுக் கொள்கின்ற மாபெரும் பாக்கியத்தை ஒப்புக் கொள்வதும், ஒப்புக் கொள்ளாமல் இருப்பதும் தங்கள் விருப்பத்திற்குட்பட்டதாகும்.

இறையருள் நிறைந்த இந்தக் காலத்தில் நம்மைப் படைத்த அல்லாஹ் அருளிய பேரருளே இதுவாகும். ஏனெனில் இலட்சக் கணக்கான பேரறிஞர்களும், பெரியோர்களும் இமாம் மஹ்தியின் வருகையைக் காண துடித்துக் கொண்டே மறுவுலகம் சென்று சேர்ந்து விட்டனர். இமாம் மஹ்தியும் வஃபாத் ஆகிவிட்டார்கள். ஆனால் அன்னாரை நேரில் கண்ட ஏராளமானோர் இன்னும் வாழ்ந்து வருகிறார்கள். எனவே இந்தக் காலத்தை அருட்கொடை நிறைந்த காலமென்று கருதுங்கள். உலகிலுள்ள சக்திவாய்ந்த அரசர்களெல்லாம் இவ்வியக்கத்தில் சேரும் நாள் விரைவில் வந்து கொண்டிருக்கின்றது. ஆனால் முதற்கட்டத்திலேயே இந்த இறையருளைப் பெறுகின்றவர்களே பாக்கியசாலிகள்...................... ஓர் இறைக் கட்டளையின் அடிப்படையிலேயே நான் இந்தக் கடிதத்தை எழுதியுள்ளேன். வீணான கட்டளை எதையும் நான் பெறுவதில்லை என்பதே எனது நம்பிக்கை.''

``விரைவில் அல்லது சற்று தாமதித்து இந்த வரிகள் ஒரு மிகப்பெரும் புரட்சியை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. அந்தப் புரட்சி இந்நாட்டின் (ஹைதராபாத்தின்) வரலாற்றில் ஒரு மாபெரும் மாறுதலை ஏற்படுத்தும். ஏனெனில் அல்லாஹ்வின் வார்த்தைகள் வீண்போவதில்லை.'' (துஹ்பதுல் முலூக் பக்கம் 125–157)

ஆனால் ஹைதராபாத் நிஸாம் உண்மையிலேயே ஒரு துர்பாக்கியசாலியான மனிதர். இறைவனின் அருள்பெற இந்த அழைப்பை, ஒரு சாதாரண மனிதனின் அர்த்தமற்ற எழுத்துக்களாக எண்ணிப் புறக்கணித்தார்.

இந்தக் கடிதம் எழுதப்பட்டபோது ஹைதராபாத் சமஸ்தானத்தில் அமைதி நிலவியது. ஆனால் பிறகு அங்கு மிகப்பெரும் புரட்சி தோன்றியது. பிரிவினைக்குப் பின் இந்தியாவிலுள்ள சமஸ்தானங்கள் பல்வேறு சட்டப் பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியதிருந்தது. இதனால் ஹைதராபாத்தின் நிலைமை மேலும் சீர்கெட்டது. 'ரிஸாக்கார்' படை என்ற ஒரு அமைப்பு தோன்றி கிளர்ச்சி செய்தது. இதனால் அரசுக்குச் சிக்கல் அதிகமானது. இறுதியாக 1948 –ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13 –ஆம் நாள் இந்திய இராணுவம் ஹைதராபாத்தினுள் நுழைந்தது. இந்த சமஸ்தானம் அனுபவித்து வந்த தனித்தன்மையை இழந்து இந்தியக் குடியரசின் ஓர் அங்கமாக மாறியது. அதன் பின்னர் நிஸாம் தனது பதவியை இழந்து ஒரு சாதாரண மனிதனின் வாழ்க்கையை நடத்த ஆரம்பித்தார். 1962 முதல் 1967 வரை ஹைதராபாத் நிஸாமைக் கடைவீதியில் கண்டிருக்கிறேன்.

இதற்கும் மேலாக, ஒரு சமயம், தான் ஏழையாகி விட்டதாக நிஸாம் ஓர் அறிக்கையில் கூறியபோது, பொதுமக்களில் பலரும் அவரைக் கேலி செய்ய 25 பைசா, 50 பைசா, ஒரு கட்டு பீடி போன்றவற்றை அவருக்கு அனுப்பி வைத்தனர். இந்தச் செய்தி பத்திரிகைகளில் கூட இடம்பெற்றது.

இறுதியாக 1967 –ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24 –ஆம் தேதி அவர் காலமானார். அவருடைய மரணச் செய்தி பத்திரிகை களில் பின்வருமாறு தலைப்பிட்டு வெளியிடப்பட்டிருந்தது.

“ஆஸிஃபிய்யா அரசாங்கத்தின் கடைசி ஆட்சியாளர் ஹுஸூர் நிஸாமின் மரணம்”

“அஃலா ஹஸ்ரத் நவாப் மீர் உஸ்மான் அலிகானின் மரணத்தின் மூலம் ஆஸிஃபிய்யா வரலாற்றின் ஒளிமயமான அத்தியாயம் முடிவுற்றது.”

இவ்வாறு நிஸாம் தனது ஆட்சி அதிகாரம் அந்தஸ்து எல்லாவற்றையும் இழந்த நிலையில் மரணமடைந்தார். இதன் மூலம் பல வருடங்களுக்கு முன்பே கூறப்பட்ட முன்னறிவிப்பும் எச்சரிக்கையும் முழுவதுமாக நிறைவேறியது.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தமது கிலாஃபத் ஆட்சிக் காலத்தில் மூன்று அரசர்களுக்கு அஹ்மதிய்யத்தின் தூதை எடுத்துக்கூறி அழைப்பு விடுத்தார்கள். அவர்கள், (1) ஆப்கானிஸ்தான் மன்னர் அமீர் அமானுல்லாஹ் கான் – தஃவத்துல் அமீர் (2) ஹைதராபாத் நிஸாம் – துஹ்பதுல் முலூக் (3) வேல்ஸ் இளவரசர் – துஹ்பயே வேல்ஸ்

ஆனால் இந்த அழைப்பிற்கு எந்தவித மதிப்பும் கொடுக்காமல் புறக்கணித்ததின் மூலமாக இவர்கள் தாங்களே தங்களின் மோசமான முடிவைத் தேடிக் கொண்டனர்.

***ஈரான் – ஒரு பெரும் அடையாளம்:***

ஈரானில் ஏற்பட இருக்கும் பயங்கர நிலை பற்றி முன்பே இறைவன் இமாம் மஹ்தி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு அறிவித்திருந்தான் என்பது மிக வியப்பிற்குரிய விஷயமாகும். 1906 ஜனவரி 15 –ஆம் நாளன்று இமாம் மஹ்தி (அலை) அவர்கள் ஓர் இறை அறிவிப்பைப் பெற்றார்கள்.

“தஸல்ஸுல் தர் அய்வானே கிஸ்ரா ஃபதாத் – ஈரான் அரச மாளிகையில் அதிர்ச்சிக்குமேல் அதிர்ச்சி ஏற்படும்.”

இந்த இறை அறிவிப்பு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் எல்லா ஆங்கில உருது ஏடுகளிலும் அப்போது வெளியிடப்பட்டது. மேலும் அக்காலத்தில் வெளிவந்த நூற்களிலும் இவ்வறிவிப்பு இடம் பெற்றிருந்தது.

இமாம் மஹ்தி (அலை) அவர்கள் இந்த இறையறிவிப்பைப் பெற்ற போது ஈரானில் அமைதி நிலவியது. அப்போது ஆட்சி பீடத்திலிருந்த முஸஃப்பருத்தீன் ஷா மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க 'பார்லிமெண்ட்' முறையை ஏற்படுத்தினார். இதனால் அவர் மக்களிடையே மிகுந்த செல்வாக்கைப் பெற்ற மன்னராக விளங்கினார். இறையறிவிப்பு கிடைத்த ஓராண்டிற்குள் முஸஃப்பருத்தீன் ஷா தமது 55 –ஆவது வயதில் மரணமடைந்தார். பின்னர் இவருடைய மகன் கிர்ஸா முஹம்மது அலி ஆட்சிக்கு வந்தார். இவருடைய காலத்தில் குழப்பங்கள் தலைதூக்க ஆரம்பித்தன. இவரது தந்தையால் ஏற்படுத்தப்பட்ட மக்களவையில் குழப்பம் ஏற்பட்டது. இதனால் இவர் மக்களவையைக் கலைத்தார். இதனைத் தொடர்ந்து இவருடைய ஆட்சிக்கு எதிராக பெரும் கலகம் ஏற்பட்டது. 1909 –இல் இவருக்கு எதிராக ஈரான் இராணுவம் கிளர்ச்சி செய்தது. இதனை எதிர்கொள்ள இயலாத நிலையில் இவர் ரஷ்ய தூதரகத்தில் தஞ்சம் புகுந்தார்.

இவ்வாறு இறைவன் இமாம் மஹ்தி (அலை) அவர்களுக்கு அருளிய முன்னறிவிப்பு நிறைவேறியது.

ஈரான் அரச பரம்பரையில் கடைசியாக வந்த ரிஸா ஷா பஹ்லவிக்கு இறைவன் மிகப்பெரும் அடையாளத்தைக் காட்டியிருந்தான். ஈரான் மன்னர் ஷா ஷியா பிரிவைச் சார்ந்தவர்.

இறுதிக் காலத்தில் இமாமே காயிப் (மறைந்திருக்கும் இமாம்) தோன்றுவார் என்ற நம்பிக்கை ஷியா பிரிவினரிடம் உண்டு. ஈரான் மன்னர் ஷா ஒருமுறை ஓர் அரிய காட்சியைக் கண்டார். அதில் இமாம் மஹ்தி (அலை) அவர்களை அவர் பார்த்ததாக அவரே தமது சுயசரிதையில் எழுதியுள்ளார். மேலும் பம்பாயில் இருந்து வெளிவரும் பிளிட்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலும் குறிப்பிட்டுள்ளார். இது நூல் வடிவாகவும் வெளி வந்தது. இதன் பகுதிகள் 1977 அக்டோபர் 22, 29 'இல்லஸ்ட்ரேடட் வீக்லி' வார ஏட்டிலும் இடம் பெற்றிருந்தன.

இந்தப் பேட்டியில் மன்னர் ஷா இவ்வாறு கூறியுள்ளார்: "நான் இளைஞனாக இருந்தபோது ஒருநாள் எனது தனிச் செயலருடன் ஷர்மானிலுள்ள அரசமாளிகையின் வெளிப்புறத்தில் உலாவிக் கொண்டிருந்தேன். அப்போது ஒரு மகானை எனது பக்கத்தில் கண்டேன். அவருடைய தலையைச் சுற்றி ஒளி வீசிக் கொண்டிருந்தது. இவரே 'இமாமே காயிப்'. இவரே நபி பெருமானார் (ஸல்) அவர்கள் முன்னறிவித்த இமாம் மஹ்தி (அலை). இவரே இறுதிக் காலத்தில் தோன்றி உலகை இரட்சிக்கவிருக்கும் மகான் என்ற எண்ணம் என் உள்ளத்தில் அப்போது தோன்றியது.

இந்தக் காட்சியை நான் கண்டு கொண்டிருக்கும்போது எனது செயலாளர் பக்கம் திரும்பி, 'நீர் யாரையாவது இங்கு கண்டீரா?' என்று கேட்டேன். அவர் வியப்புடன் என்னை நோக்கி தான் யாரையும் காணவில்லை என்று பதிலளித்தார்."

மன்னர் ஷா இப்பேட்டியில் தொடர்ந்து இவ்வாறு குறிப்பிடுகின்றார்: "நீங்கள் என்னுடைய இந்தப் பேச்சைக் கேட்டு

எனக்கு மனநோய் இருக்குமோ என சந்தேகிக்கலாம் அல்லது நான் குறிப்பிடுவது வெறும் பிரமை என்று கூட நீங்கள் கருதலாம். ஆனால் நான் கண்ட அந்தக் காட்சி என்னுடைய மத நம்பிக்கைக்கு ஊக்கமளித்தது. இது போன்ற நிகழ்வு நவீன விஞ்ஞானத்தால் விளக்கம் கூற இயலாது.''

இதனைக் கேட்ட பிளிட்ஸ் பத்திரிகை ஆசிரியர் இவ்வாறு கூறுகின்றார்: ''இக்காலத்தில் ஆன்மீகமும் மத நம்பிக்கையும் நலிவடைந்து விட்டன. ஐரோப்பிய இளைஞர்கள் போதைப் பொருட்களுக்கு அடிமையாகி ஹரே கிருஷ்ணா போன்ற இயக்கங்களில் ஆன்மீகத்தைத் தேடுகிறார்கள். மன அமைதியை நாடி இவர்கள் உங்கள் நாட்டிற்கும் (ஈரானுக்கும்) எங்கள் நாட்டிற்குமே அதிகமாக வருகிறார்கள். இவ்விரு நாடுகளில் ஏதாவது ஒன்றுதான் மக்களை இரட்சிக்க ஓர் இறை தூதரை உலகுக்கு அருளும் என்பதே எனது கருத்து.''

மன்னர் ஷா இதனை ஆமோதித்து இவ்வாறு கூறுகின்றார்: ''தாங்கள் கூறுவது முழுக்க முழுக்க உண்மை. நாங்கள் எதிர்பார்த்திருக்கும் இமாம் தோன்றும் காலம் மிக நெருங்கி விட்டது.''

மன்னர் ஷாவின் சுயசரிதையையும் மேற்கண்ட பேட்டியையும் ஆய்வு செய்த அனைத்துலக அஹ்மதிய்யா பிரச்சாரச் செயலகம் மன்னர் ஷாவைச் சந்திக்க ஒரு குழுவை அனுப்பியது. இக்குழு மன்னர் ஷாவை சந்தித்து இமாம் மஹ்தி தோன்றிய செய்தியை அவருக்கு அறிவித்தது. தாம் அச்செய்தியை ஏற்றால் அஹ்மதிய்யா ஜமாஅத்தை அச்செயல் வலுப்படுத்தும்; மக்களிடையே தமக்குள்ள

அந்தஸ்து அதனால் பாதிக்கப்படும் என்று எண்ணி மன்னர் ஷா மௌனமாக இருந்து விட்டார். மத நம்பிக்கை மிகுந்தவராக தம்மைக் காட்டிக்கொண்ட மன்னர் ஷா உண்மையை மறைத்தார். ஆட்சி அதிகாரத்தையும் மக்களிடையேயுள்ள தம் செல்வாக்கையுமே அவர் பெரிதாக மதித்தாரேயொழிய உண்மையை அல்ல. மேலும் இறைவன் நாடினால் ஒரு நொடிப்பொழுதில் அவற்றை அழித்துவிட முடியும் என்பதையும் எண்ணிப் பார்க்க அவர் தவறிவிட்டார்.

இறைவன் இமாம் மஹ்தி (அலை) அவர்களை அடையாளம் காட்டித் தந்திருந்தும் கூட, அழிந்துபோகும் உலக சுகபோகங்களுக்காக அவ்வுண்மைகளை மறைத்தார். இறைவனுடைய பேரருளை புறக்கணித்தார். அதன் விளைவு, ஆட்சி பீடத்திலிருந்து அவர் தூக்கி வீசப்பட்டார். உயிருக்கு அஞ்சி தமது நாட்டைவிட்டு ஓட வேண்டிய இழிநிலை அவருக்கு ஏற்பட்டது. எந்த மக்களுக்காகவும், ஆட்சிக்காகவும் தாம் கண்ணால் கண்ட இமாம் மஹ்தி (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ள மறுத்தாரோ அந்த மக்களும் ஆட்சியும் ஒரே நாளில் அவரிடம் இருந்து தொலைந்து போயின. இது இறைவன் அவருக்கு எதிராக வழங்கிய தீர்ப்பாகும்.

### *பூட்டோவின் முடிவு – மற்றுமோர் அடையாளம்:*

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் ஸுல்ஃபிகார் அலி பூட்டோவின் பரிதாபத்திற்குரிய வீழ்ச்சியும், மரணமும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் உண்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

இச்சம்பவம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதனைச் சற்று விரிவாகக் காண்போம்.

இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக இறைவனால் உருவாக்கப்பட்ட அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராக பூட்டோ செயல்பட்டதால் இறை தண்டனை அவரைப் பற்றிக்கொண்டது.

உண்மையில் பூட்டோ, அஹ்மதிய்யா ஜமாஅத்தின் எதிரியாக இருக்கவில்லை. மார்க்க விஷயங்களில் அவருக்கு எவ்வித ஈடுபாடும் கிடையாது. எனவே இஸ்லாத்தின் பிரிவுகள் அவருக்கு ஒரு பிரச்சனையாகவே இருக்கவில்லை. முழுக்க முழுக்க அவர் ஓர் அரசியல்வாதியாக இருந்தார். 1970 டிசம்பரில் பாகிஸ்தானில் நடந்த தேர்தலின் போது பூட்டோ விடுத்த வேண்டுகோளை ஏற்று, அஹ்மதிகள் பூட்டோவுக்காகவும், அவருடைய பாகிஸ்தான் மக்கள் கட்சியின் வெற்றிக்காகவும் செயல்பட்டனர். அஹ்மதிகளின் வாக்கு வங்கியால் பூட்டோவின் கட்சிக்கு பாராளுமன்றத்தில் 20 இடங்கள் கிடைத்தன.

அதே சமயத்தில் பூட்டோ அரபு நாட்டு மன்னர்கள், தலைவர்களின் கைப்பாவையாக விளங்கினார். 1974 பிப்ரவரியில் லாஹூரில் பூட்டோ இஸ்லாமிய உச்சி மாநாட்டைக் கூட்டினார்.

பாகிஸ்தானில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னேற்றத்தைக் கண்டு பொறாமை கொண்ட ஜமாஅத்தே இஸ்லாமியின் தலைவர் மவ்லவி அபுல் அஃலா மவ்தூதியும் அவரின் சீடர்களும் பல ஆண்டுகளாக இவ்வியக்கத்திற்கு எதிராக கிளர்ச்சிகள் செய்து வந்தனர். முடிவாக 1953 –ல் இவர்களால் நடத்தப்பட்ட ‘அஹ்மதிய்யா எதிர்ப்புக் கிளர்ச்சி’ (Anti- Ahmadiyya Agitation) படுதோல்வி கண்டபிறகு மக்காவில் உருவாக்கப்பட்ட ‘ராபிதத்துல் ஆலமீன்’ என்னும் சபையிடம் இவர்கள் மண்டியிட்டனர்.

அவர்களுடன் இணைந்து, பாகிஸ்தானிலும், இந்தியாவிலும் உள்ள ஆலிம்களும் தங்கள் உள்ளங்களில் புகைந்து கொண்டிருக்கும் அஹ்மதிய்யா எதிர்ப்புக் கனலை வெளிப்படுத்தி 'ராபிதத்துல் ஆலமீன்' எனும் சபையை பயன்படுத்த முயற்சி மேற்கொண்டனர்.

'ராபிதத்துல் ஆலமீன்' என்னும் சபையை அமெரிக்காவும், ஸயோனிஸமும் (இஸ்ரேல்) பின்னாலிருந்து இயக்குகின்றன என்று அப்பொழுதே விஷயமறிந்த பல அறிஞர்கள் கூறியுள்ளனர். எகிப்திற்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையிலான உறவை முறிப்பதே இந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோளாகும். ஏனெனில் அன்று இஸ்ரேலுக்கு எதிராக ஒருங்கிணைந்த முஸ்லிம் நாடுகளுள் வலிமை வாய்ந்த நாடுகளாகத் திகழ்ந்தது எகிப்தும், சவூதி அரேபியாவுமே ஆகும். காலஞ்சென்ற ஜலால் அப்துல் நாசரின் கடும் விரோதியும், ஸர் முஹம்மது ஸஃபருல்லாஹ் கானுக்கு எதிராக 'குஃப்ர்' ஃபத்வா கொடுத்ததால் பதவி நீக்கம் செய்யப்பட்டவருமான ஷைக் ஹஸனைன் மஃலூப் என்பவர் 'ராபிதத்துல் ஆலமீன்' –ஐ உருவாக்கியவர்களில் குறிப்பிடத்தக்கவர். முஸ்லிம் அரசுகளின் முயற்சிகளையும் தோல்வியுறச் செய்து, முஸ்லிம்களின் ஆரம்பகால கிப்லாவும், புனிதஸ்தலமுமான பைத்துல் முக்கத்தஸை யூதர்கள் இந்த 'ராபிதத்துல் ஆலமீன்' உருவான பின்புதான் கைப்பற்றினர்.

இந்த அமைப்பின் கூட்டங்களில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு எதிராக பல தீர்மானங்களை நிறைவேற்றினர். முடிவாக 1974 –ல் அனைத்துலக முஸ்லிம் மாநாடு என கூட்டி அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராக குஃப்ர் ஃபத்வா விடுத்தனர். இவ்வியக்கத்தைச் சார்ந்தவர்களை முஸ்லிமல்லாதவர் எனவும் பிரகடனப்படுத்தினர். சவூதி அரேபிய மன்னர் பைஸலின் ஆதரவு

இப்பிரகடனத்திற்குப் பின்னால் மறைந்திருந்தது. இவர்களின் தீய இலக்கு பாகிஸ்தானிலுள்ள அஹ்மதி முஸ்லிம்கள் மற்றும் அஹ்மதிய்யா இயக்கத்தின் தலைமையகமான ரப்வாவாக இருந்தது.

அத்தோடு, இஸ்லாமிய கிலாஃபத் ஆட்சிமுறையை மீண்டும் கொண்டு வர வேண்டும் என்பதும் இதன் எண்ணமாகும். இறுதியில் லாஹூரில் நடைபெற்ற முஸ்லிம் உலக உச்சி மாநாட்டில் உகாண்டா அதிபர் இடிஅமீன், முஸ்லிம் உலகிற்கு தலைவரும் கலீஃபாவுமாக ஒருவர் இருக்க வேண்டும் என்றும், அதற்குத் தகுதியுடையவர் சவூதி மன்னர் பைஸல்தான் என்றும் கூறினார். இந்த மாநாட்டிற்கான செலவுகள் முழுவதும் சுமார் 28 கோடி டாலர் பைஸல் மன்னரால் மட்டும் கொடுக்கப்பட்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இது தவிர, இஸ்லாமிய ஆட்சியின் ஆரம்ப காலத்தில் கலீஃபாக்கள், கிலாஃபத்தின் அடையாளங்களாகப் பாதுகாத்து வந்த நினைவுச் சின்னங்களை, துருக்கி அரசாங்கம் இஸ்தான்புல் மியூசியத்தில் பாதுகாத்து வருகிறது. அவைகளை பைஸல் மன்னரிடம் ஒப்படைத்து விடும்படியும், அதற்குப் பகரமாக மலிவு விலையில் பெட்ரோல் தருவதாகக் கூறிய வேண்டுகோளை, துருக்கி அரசாங்கம் நிராகரித்துவிட்டதாக 'கௌடியன்' என்ற துருக்கி பத்திரிகை எழுதி இருப்பதை டைம்ஸ் ஆஃப் இந்தியா (பாம்பே) தனது 2.07.1974 இதழில் ஒரு செய்தியாக வெளியிட்டிருந்தது.

உலக முஸ்லிம்களின் கலீஃபாவாக அமீருல் முஃமினீனாக தாம் வர வேண்டும் என்று சவூதி மன்னர் பைஸல் பகற்கனவு கண்டு கொண்டிருந்தார். அதற்குத் தடையாக இருப்பது அஹ்மதிய்யா

கிலாஃபத் ஒன்றுதான் என்பதையும் அவர் அறிவார். எனவே அதை அழித்துவிட முடிவு செய்தார். அதற்காகப் பெட்ரோலில் கிடைக்கும் செல்வத்தை பாகிஸ்தானில் மழையாகப் பொழியச் செய்தார். இச்சந்தர்ப்பத்தை தமது பதவிக்குச் சாதகமாகப் பயன்படுத்த எண்ணிய பூட்டோ, மன்னர் பைஸலையும், ஏனைய முஸ்லிம் தலைவர்களையும், எதிர்க்கட்சிகளையும் ஒரே சமயத்தில் திருப்திப்படுத்தும் நோக்கத்தோடு அஹ்மதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கினார்.

'90 வருடகால காதியானி பிரச்சனைக்குத் தாங்கள் முடிவு கட்டி விடுவீர்களானால், எங்களுடைய தாடியால் உங்கள் காலணிகளைத் துடைக்கத் தயார்' என்று பாகிஸ்தானிலுள்ள முல்லாக்கள் பூட்டோவிடம் கூறியதாக, பாகிஸ்தான் 'டைம்ஸ்' என்ற பத்திரிகை எழுதியது. இத்திட்டத்தின் படியே பாகிஸ்தானில் அஹ்மதிகளுக்கு எதிரான கிளர்ச்சிகள் நடைபெற்றன. ஒரு நாள் முல்தானிலுள்ள நிஷ்த்தர் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் ஒரு பெருங்கும்பலாக ரப்வா இரயில் நிலையத்திற்கு வந்து பல அராஜக செயல்களைச் செய்தனர். ஒரு பெரும் கலவரத்தை உண்டாக்கினர். அஹ்மதி முஸ்லிம்களை அநியாயமாகத் தாக்கினர். அஹ்மதிகளே இக்கலவரம் செய்ததாகப் பழியும் சுமத்தினர். 1974 மே மாதம் நடந்த இந்த கொடுமைக்குப் பிறகு பூட்டோ, மவ்தூதி, முஃப்தி மஹ்மூத், மவ்லவி நூரானி போன்ற மத, அரசியல் தலைவர்களின் தூண்டுதல் மற்றும் சூழ்ச்சியின் காரணமாக, பாகிஸ்தான் முழுவதும் அஹ்மதிகளுக்கு எதிராக வன்முறைகள் தூண்டிவிடப்பட்டன. இக்கலவரங்களை அதிகப்படுத்தவும், இக்கிளர்ச்சியைத் தொடரவும் சவூதி அரேபியாவிலிருந்து தாராளமாக உதவி பெறப்பட்டது. இதன்

விளைவாக ஏராளமான அஹ்மதி ஆண்களும் பெண்களும் ஷஹீதானார்கள். ஆயிரக்கணக்கானோர் காயமுற்றனர். இஸ்லாத்தின் பாதுகாவலர்களாகத் தங்களைக் கூறிக் கொள்ளும் இவர்கள் பச்சிளம் குழந்தைகளை வீடுகளின் மேல் மாடியிலிருந்து எறிந்து கொன்றனர். கோடிக்கணக்கான மதிப்புள்ள சொத்துக்கள் கொள்ளை அடிக்கப்பட்டன. அஹ்மதிகளால் கட்டப்பட்ட பள்ளிவாயில்களை இடித்து நிர்மூலமாக்கினர். **6000** –க்கும் அதிகமான திருக்குர்ஆன் பிரதிகளை வீசி அவற்றின் மீது நடனமாடினர். இவ்வக்கிரமங்கள் அனைத்தும் புனித இஸ்லாத்தின் பெயராலும் கத்மே நுபுவ்வத்தின் பெயராலுமே கட்டவிழ்த்து விடப்பட்டன.

பாகிஸ்தானில் இவ்வாறு பெரும் அக்கிரமங்கள் நடந்து கொண்டிருக்கும்பொழுது, இலண்டனில் சவுத்ரி முஹம்மது ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்கள் ஒரு பத்திரிகை நிரூபர்கள் கூட்டத்தைக் கூட்டி, மனிதத் தன்மைக்கு எதிரான இச்செயல்களை விளக்கி, உலக மக்களின் மனசாட்சியைத் தட்டி எழுப்பினார்கள். இவ்வறிக்கையை அமெரிக்க ஐரோப்பா நாட்டின் பத்திரிகைகள் அதிக முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன. இந்தியாவிலுள்ள பத்திரிகைகளிலும், இந்த அராஜக செயலைக் கண்டித்து செய்திகள் வெளியிடப்பட்டன.

பாகிஸ்தானில் நடைபெற்ற இந்த தீய செயல்கள் அனைத்திற்கும் காரணமான பூட்டோ, தன்னை நிரபராதியாகக் கூறிக்கொண்டு ஒரு விசாரணைக் கவுன்ஸிலை ஏற்படுத்தினார். இரு தரப்பினரும் தங்களின் வாதங்களைக் கூற ஏற்பாடு செய்தார். இதுவும் உலகை ஏமாற்ற ஒரு திட்டமாக இருந்தபோதிலும்

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) இவ்விசாரணைக் கவுன்ஸில்முன் பலநாள் தொடர்ந்து அஹ்மதிகளின் கொள்கைகள் பற்றி திருக்குர்ஆன், ஹதீஸ், இமாம் மஹ்தியின் போதனைகள் ஆகியவற்றின் அடிப்படையில் விவாதித்து விளக்கம் தந்தார்கள். எதிரிகளின் எல்லாக் கேள்விகளுக்கும் ஆட்சேபனைகளுக்கும் விளக்கமான விடை அளித்தார்கள்.

ஆனால் உண்மை வெளிவரக் கூடாது என்ற நோக்கத்தில் இரு தரப்பு வாதங்களும் வெளிவராது என்று பூட்டோ அரசு எதிரிகளுக்கு வாக்குறுதி கொடுத்ததன் காரணமாக அவ்வாதங்கள் வெளிவரவில்லை. வெளியிடப்பட்டிருந்தால், உண்மையை உணர்ந்து, ஏராளமான பாகிஸ்தான் மக்கள் அஹ்மதிய்யா இயக்கத்தில் சேர்ந்து விடுவார்கள் என பார்லிமெண்ட் விசாரணைக் கவுன்ஸிலைச் சேர்ந்தவர்களே கவலை கொண்டிருந்தனர். இவ்வாறான சூழலில், ஏற்கனவே திட்டமிட்டபடி 1974 செப்டம்பர் 7 ஆம் தேதி பாகிஸ்தான் நேஷனல் அசெம்பிளி கூடி 'அஹ்மதிகள் முஸ்லிம்கள் அல்ல' என்ற தீர்ப்பை வெளியிட்டனர். அத்தீர்மானத்தின் வாசகம் கூறுவது என்னவெனில்,

"A person who does not believe in the absolute and unqualified finality of the prophethood of Mohamed, the last of the prophets, or claim to be prophet in any sense of the word after Mohamed (Peace be upon him) or recognises such a claimant as a prophet or a religious reformer is not a Muslim for the purposes of the Constitution of law."

இதன் கருத்து என்னவெனில், "நபிமார்களின் இறுதியானவராகிய முஹம்மது (ஸல்) அவர்களின் இறுதி

நபித்துவத்தில் முழுமையாகவும், நிபந்தனையற்ற விதத்திலும் நம்பிக்கை கொள்ளாதவரும், முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்குப் பின் ஏதாவதொரு விதத்தில் நபி என்று வாதிப்பவரும் அவ்வாறு வாதிப்பவரை நபி என்றோ, மார்க்கச் சீர்திருத்தவாதி என்றோ ஒப்புக் கொள்பவரும் அரசியல் சாசனத்தைப் பொருத்தவரையில் முஸ்லிம் அல்ல என்று கருதப்படுவார்." இந்த அறிக்கைக்குப் பின் பூட்டோவின் புகழ் முஸ்லிம்களுக்கிடையில் வெகுவாகப் பரவியது. 90 வருட காதியானிப் பிரச்சனையை 90 நாட்களில் முடிவு கட்டிய மாவீரன் என அவர் புகழப்பட்டார்.

இறைத் தூதர்களால் நிறுவப்படும் இயக்கங்களுக்கு எதிராக, எப்பொழுதெல்லாம் இவ்வுலகில் பெரும் பெரும் அரசாங்கங்கள் கிளர்த்தெழுந்தனவோ, அப்பொழுதெல்லாம் அவ்வரசாங்கங்கள் அல்லது அவ்வரசர்களே அழிந்து வீழ்ந்தனர் என்பது வரலாற்று உண்மையாகும். இறைத் தூதர்கள் தோன்றுவது சட்டமன்றத்திலும் பாராளுமன்றத்திலும் பெரும்பான்மை பலம் கொண்டோ அல்லது ஐக்கிய நாடுகள் சபை தீர்மானங்களினாலோ அல்ல. இறைத் தூதரின் உண்மை மக்கள் மத்தியில் வாக்கெடுப்பு நடத்தி அறிவிக்கப்படுவதில்லை. பெரும்பான்மை மக்களின் எதிர்ப்பையும், அரசாங்கங்களின் பலமிக்க தடைகளையும் இறைத் தூதர்கள் எதிர்கொண்டு இறை உதவியால் அவற்றில் வெற்றி கண்டு தாங்கள் உண்மையாளர்கள் என உலகிற்கு நிரூபித்துக் காண்பித்துள்ளார்கள். இது மார்க்கங்கள் கூறும் உண்மையாகும்.

இஸ்லாத்தின் பெயரால், இறைவனால் உருவாக்கப்பட்ட அஹ்மதிய்யா இயக்கத்திற்கு எதிராக பூட்டோவும் முஃப்தி முஹம்மது

மவ்தூதியும் போர்க்கொடி உயர்த்தியபொழுது அஹ்மதிகள் அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள்: "நீங்கள் எங்களுக்கு எதிராக போர் தொடுங்கள். உங்கள் பின்னால் இராணுவம் இருக்கின்றது. எங்களுக்கு அது இல்லை. உங்கள் பின்னால் தங்கத்தின் மலைகளும் பெட்ரோலின் சமுத்திரங்களும் இருக்கின்றன. ஆனால் எங்களுக்கு அது இல்லை. உங்கள் பின்னால் அணி அணியாக படைகளும் ஆயுதங்களும் கோடிக்கணக்கான மக்களும் உள்ளனர். எங்களுக்கு அவைகள் ஒன்றுமே இல்லை. ஆனால் எங்களுக்கு உதவியாக அல்லாஹ்வும், அவனுடைய வல்லமையும் இருக்கின்றது. அது உங்களுக்கு இல்லை."

இறைத் தூதர்களால் தோற்றுவிக்கப்படும் இயக்கங்களுக்கு இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுவது ஒன்றும் புதிதல்ல. நம்ரூத்தும், ஃபிர்அவ்னும், இப்ராஹீம் நபியையும், மூஸா நபியையும் எதுவும் செய்து விட முடியவில்லை. ஆப்கானிஸ்தான் அரசரும், எகிப்தின் பாரூக் மன்னரும் மற்றும் ஏனைய மன்னர்களும் அஹ்மதிகளுக்கு எதிராக செயல்பட்ட காரணத்தால், அழிக்கப்பட்ட வரலாறு நம்முன் இருக்கின்றது. ஆனால் பூட்டோவின் பரிதாபத்திற்குரிய வீழ்ச்சியும் மரணமும் நெருங்கி விட்டது எனவும் நம்ரூத்துக்கும், ஃபிர்அவ்னுக்கும் ஏற்பட்ட முடிவு அவருக்கும் ஏற்படப் போகின்றது என்றும் நாம் கூறியுள்ளோம். 'சமாதான வழி' யின் முந்தைய இதழ்கள் நம் கூற்றுக்கு சான்றுகளாக உள்ளன. துஆவினால் மட்டும் பெரும் வல்லரசுகள் தலைகீழாக வீழ்ந்துள்ள வரலாறுகள் அஹ்மதிகளின் முன் இருக்கின்றன.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "உண்மையின் விரோதிகளுக்கு எப்போதாவது தம் கொடூரக் குற்றங்களில் வெற்றி பெற முடிந்திருக்கலாம். ஆனால் இறைவனுக்கும் அவனுடைய நோக்கங்களுக்கும் விரோதமாகச் செயல் புரிந்து வந்தவர்களுக்கு, எப்பொழுதும் தோல்வியே கிடைத்தது. இது உண்மை என்றால், இவர்களுக்கும் இழிவும் அழிவும் தோல்வியும் வரக் கூடிய காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இறை வசனங்கள் ஒருபோதும் தோல்வி அடையாது. இறைவனும், இறைத் தூதர்களும் வெற்றி பெற்றே தீருவார்கள் என்பது ஒரு சட்டமாக ஆக்கப்பட்டிருக்கின்றது என்று திருக்குர்ஆன் கூறுகிறது.... எனவே, ஆதமின் காலம் முதல், எம்பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்கள் காலம் வரை மேற்கூறப்பட்ட விதியும், சட்டமும், சத்தியமாகப் பூர்த்தியாகி வந்ததைப் போல், என்னுடைய விஷயத்திலும் அது நிச்சயமாக பூர்த்தியாகியே தீரும் என்று நான் ஆணித்தரமாகக் கூறுகின்றேன்." (நுஸூலுல் மஸீஹ்)

ஆம்! உண்மை வந்து விட்டது. பொய் ஓடி விட்டது என்ற திருவசனம் முற்றிலும் நிறைவேறி விட்டது.

நம்பிக்கையாளர்களுக்கு சோதனைகளும், எதிரிகளுக்குத் தண்டனைகளும் வருவது என்பது இறைவனின் ஒரு மாறாத சட்டமாகும். இவை இரண்டும் – தண்டனையும் சோதனையும் தொன்று தொட்டு நடந்து வரும் செயல்முறை ஆகும். பூட்டோ தன் எல்லா உரைகளிலும் 90 வருட காதியானிப் பிரச்சனையைத் தானே முடிவு செய்து விட்டதாகக் கூறிக் கொண்டிருந்தார்.

**1974** மே மாதம் முல்தான் மருத்துவக் கல்லூரி மாணவர்களைக் கொண்டு, ரப்வாவில் கலவரத்தை உருவாக்கி, அதன் மூலம் முழுப் பாகிஸ்தானிலும் அஹ்மதிகளுக்கு எதிராகப் பயங்கரமான ஆர்ப்பாட்டங்களைத் தூண்டி, பல உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் நஷ்டங்கள் ஏற்பட மூலக்காரணம் பூட்டோவின் சூழ்ச்சியே ஆகும். இத்தகைய தீயச் செயலைச் செய்த பூட்டோவை இறைவன் தன் ஆற்றல் மிக்கக் கரங்களைக் கொண்டு பிடித்தான்.

எவ்வாறெனில் இந்நிகழ்ச்சி நடந்து மூன்று ஆண்டுகளுக்குப் பின் பாகிஸ்தானில் இராணுவப் புரட்சி ஏற்பட்டு **1977** செப்டம்பர் 7 –இல் பூட்டோ கைதானார். ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டபோதிலும் பூட்டோ மீண்டும் கைது செய்யப்பட்டார். நீண்ட காலம் கொடுஞ்சிறையில் தள்ளப்பட்டார். நவாப் முஹம்மது கான் என்பவரை கொலை செய்ததாக பூட்டோ மீது கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு வழக்கு நடந்தது.

தனக்கு எதிராக போடப்பட்ட கொலைக் குற்றம், வழக்கு அத்தனையும் தனது அரசியல் எதிரிகளின் சதி என பூட்டோ கூறினார். ஆனால் இதே போல் அநியாயமாக அஹ்மதிகள் மீது பழிசுமத்தி வழக்கு, விசாரணை என்று தானே நடத்திய சதிச் செயலை அவர் மறந்து விட்டார்; இறைவன் மறக்கவில்லை; அவன் மறக்கக்கூடியவனல்ல.

பூட்டோ விசாரணையின்போது கூறிய வாக்குமூலங்கள் வெளியிடப்படாமல் மறைக்கப்பட்டு, அவருக்கு எதிரான நியாயங்களும், வாதங்களும் மட்டுமே வெளியிடப்பட்டதாக குறை கூறினார்.

ஆனால் அஹ்மதிகளுக்கு எதிராக பூட்டோ நடத்திய விசாரணை நாடகத்திலும் இதே வழியைத்தான் கடைபிடித்ததை – அஹ்மதிகளின் வாதங்களை மறைத்ததை அவர் மறந்து விட்டார். ஆனால் இறைவன் மறக்கவில்லை. அவன் மறக்கக் கூடியவனும் அல்லன்.

பாராளுமன்ற கவுன்ஸில் முன் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் கொடுத்த விளக்கங்கள், வாக்குமூலங்கள் தெளிவுரைகள் வெளியிடப்படாமல் பூட்டோவால் மறைக்கப்பட்டன. அவைகள் வெளியிடப்பட்டிருந்தால் ஏராளமான மக்கள் அஹ்மதிய்யத்தின் உண்மையினை ஏற்றுக் கொள்வார்கள் எனப் பயந்தார்.

லாஹூர் உயர்நீதி மன்றம் ‘பூட்டோ ஒரு முஸ்லிம் அல்ல’ என்று தீர்ப்பு வழங்கியது. என்னே! இறைவனின் அற்புதச் செயல்!! அஹ்மதிகள் தாங்கள் முஸ்லிம் என்பதற்கு என்னென்ன வாதங்கள் கூறினார்களோ, அவைகளையே தான் முஸ்லிம் தான் என்பதற்கு பூட்டோ கூறினார். தான் கலிமாவைக் கூறுகின்ற ஒருவனாக இருக்கின்ற நிலையில் தன்னை முஸ்லிமல்ல என்று கூற உலகத்தில் எவருக்கும் அதிகாரமில்லை என்று பூட்டோ வாதித்தார். ஆனால் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அந்தோ பரிதாபம்!!

இறுதியில் **1979** ஏப்ரல் **4** ஆம் நாள் புதன்கிழமை அதிகாலை அந்த சம்பவம் நடந்தது. பூட்டோவால் தப்பிக்க முடியவில்லை. வல்லமை மிக்க இறைவனின் கரம் வேலை செய்தது.

ராவல்பிண்டி சிறைச்சாலையில் பூட்டோ தூக்கில் இடப்பட்டார்! உலகம் அமைதியாக நித்திரையிலிருந்த சமயம் பூட்டோவின் உயிர் துடி துடித்து உடலை விட்டுப் பிரிந்தது.

பூட்டோ ஒரு முஸ்லிமாக மரணமடையவில்லை என்று பாகிஸ்தான் அரசு ஓர் அறிக்கையும் வெளியிட்டது.

பூட்டோவை தூக்குக் கயிற்றிலிருந்து காப்பாற்ற வல்லரசுகளான அமெரிக்கா, ரஷ்யா, சீனா போன்ற நாடுகளும், அரபு நாடுகளும் ஏனைய முஸ்லிம் நாடுகளும் தங்களால் இயன்ற முயற்சிகள் செய்தன. அஹ்கமுல் ஹாகிமீனான இறைவனின் தீர்ப்பை மாற்ற எந்த சக்தியாலும் முடியவில்லை.

வாக்களிக்கப்பட்ட மஹ்தி (அலை) அவர்கள் ஒரு கவிதையில் கூறுகின்றார்கள்:

“ஜோ குதா கா ஹே உஸே லல்கார்னா அச்சா நஹி(ன்)
ஹாத் ஷேரோன்பர் நா டால் அயே ரூபயே ஸாரோ நிஸார்.”

“இறைவன் புறமிருந்து வந்தவருக்கு எதிராக சவால் விடுவது நல்லதல்ல. ஏ துர்பாக்கியசாலியே! நீ சிங்கங்களின் மீது கை வைக்காதே.”

இப்போது பாகிஸ்தானில் அஹ்மதிய்யா இயக்கத்திற்கு எதிராக நடந்த வன்முறைகளுக்கு மறைமுகமாக ஆதரவு அளித்தவர்களின் நிலை என்னவாயிற்று என்பதைப் பார்ப்போம்.

***பைஸலின் முடிவு:***

சவூதி அரேபியாவின் மன்னர் பைஸல் ஒரு நல்ல மனிதராகவும், பண்டிதராகவும் இருந்தார். ஸர் முஹம்மது

ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் போன்றோர் கூட இவருக்கு நண்பராயிருந்தனர். அஹ்மதிய்யா இயக்கத்தைப் பற்றி ஓரளவு அறிந்திருந்த அவர் இலண்டனிலுள்ள அஹ்மதிய்யா பள்ளிவாயிலுக்கு வருகை தந்ததோடு, அங்குள்ள படிப்பகத்திற்குப் பல புத்தகங்களையும் அன்பளிப்பாகக் கொடுத்தார். மேலும் அவர் அஹ்மதிய்யா இயக்கத்தின் எதிரியாக இருந்ததில்லை. ஆனால் ராபிதாவைச் சேர்ந்த ஆலிம்களே அவரை வழிதவறச் செய்தனர். அவர்களின் தீய ஆலோசனைகளின் காரணமாகவே அவர் கலீஃபத்துல் முஸ்லிமீனாக வேண்டும் என்று விரும்பினார்.

ஆனால், சர்வ வல்லமை பொருந்திய இறைவனால் ஏற்படுத்தப்பட்ட கிலாஃபத் உலகில் வெற்றிகரமாக இயங்கி வருவதால், இறைவனது உதவி பைஸல் மன்னருக்குக் கிடைக்கவில்லை. இறைத் திட்டத்திற்கு எதிரான அஹ்மதிய்யா இயக்கத்தையும், கிலாஃபத்தையும் உலகிலிருந்து துடைத்துவிட வேண்டும் என்ற பைஸலின் தீய எண்ணம் நிறைவேறவில்லை. மாறாக அவருடைய சொந்த சகோதரனுடைய மகன் கைகளாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

மன்னர் பைஸலை உலக முஸ்லிம்களுக்கு அமீராக, கலீஃபத்துல் முஸ்லிமீனாக நியமிப்பதற்கு ஆப்பிரிக்கா நாட்டில் உகாண்டாவின் அதிபராக இருந்த இடிஅமீன் மிகுந்த ஆர்வம் காட்டினார். முடிவில் அவர் தம் பதவியை இழந்து தலைமறைவானார்.

## அஹ்மதிய்யா கிலாஃபத்

**1908** மே **26** –ஆம் தேதி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வஃபாத்தான பின், அடுத்த நாள் ஹஸ்ரத் மவ்லானா ஹக்கீம் நூருத்தீன் (ரலி) அவர்கள் அஹ்மதிய்யா இயக்கத்தின் முதல் கலீஃபாவாக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அன்னாரின் ஆறு வருட கிலாஃபத் காலத்தில், இந்தியாவின் பல்வேறு இடங்களில் இயக்கத்தின் கிளைகள் ஏற்படுத்தப்பட்டு ஜமாஅத் வலுப்பெற்றது.

**1914** மார்ச் **13** –ஆம் நாள் அவர்கள் வஃபாத்தானார்கள். அப்போது ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் பெரும்பான்மையான அஹ்மதிகளால் இரண்டாவது கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அப்போது ஒரு சிலர் மட்டும் ஜமாஅத்திற்கு இனி கிலாஃபத் தேவையில்லை என்றும், அதற்குப் பதிலாக ஓர் அஞ்சுமன் ஆட்சிமன்றக் குழுவை நியமித்தால்போதும் என்றும் கருத்துத் தெரிவித்தனர். ஆனால் ஜமாஅத்தின் பெரும்பான்மையான மக்களின் மனதில் கிலாஃபத்தின் அவசியத்தை அல்லாஹ் உருவாக்கினான். இவ்வாறு கிலாஃபத் தேவையில்லை என்று கூறிய சிலர் தங்கள் தலைமையகத்தைக் காதியானிலிருந்து லாஹூருக்கு மாற்றிச் செயல்பட ஆரம்பித்தனர். ஆனால் பெரும்பான்மையான மக்கள் கிலாஃபத் என்னும் அருட்கொடையின் கீழ் ஒன்று திரண்டனர். காலம் செல்லச் செல்ல கிலாஃபத்தைப் பின்தொடர்ந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே சென்றது. கிலாஃபத்தை மறுத்து லாஹூருக்குச் சென்றோரின் எண்ணிக்கை குறைந்து கொண்டே போனது.

இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் காலத்தில் ஜமாஅத்திற்கு உலகளாவிய முன்னேற்றமும் வெற்றியும் கிடைத்தது. ஜமாஅத்தின் அமைப்பு மேலும் உறுதியானது. அன்னாரின் காலத்தில் ஜமாஅத் மகத்தான வளர்ச்சி கண்டது. அவற்றின் சிலவற்றை இங்கு தருகிறோம்.

***பைத்துல் மால் அமைப்பு:***

அஹ்மதிய்யா இயக்கம் ஒரு சிறு அமைப்பாக இருந்தும் உலகிலுள்ள செல்வந்தர்களும், வலிமை மிக்க முஸ்லிம் அரசுகளும் செய்யாத பல அரும் சாதனைகளைச் செய்திருக்கிறது. இதற்கு ஒரு முக்கியக் காரணம் இறை அருளால் உலகெங்கும் உள்ள அஹ்மதிகள் செய்து வரும் அதிமகத்தான தியாகங்கள் ஆகும். ஒவ்வோர் அஹ்மதி முஸ்லிமும் இமாமின் குரலுக்குக் கட்டுப்பட்டு எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்குப் பொருள் தியாகம் செய்கிறார்கள். காதியானிலும் (இந்தியா), ரப்வாவிலும் (பாகிஸ்தான்) இயங்கி வரும் அஹ்மதிய்யா இயக்க தலைமையகங்களின் ஆண்டு பட்ஜெட் தற்போது பல கோடிகளைத் தாண்டிவிட்டது. இது தவிர ஆப்பிரிக்கா, இந்தோனேஷியா, ஐரோப்பா மற்றும் உலக நாடுகளில் தனித்தனியான நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. பைத்துல் மாலின் மூலம் ஒன்று திரட்டப்படும் இந்த நிதி அனைத்தும், இஸ்லாமியப் பிரச்சாரத்திற்காகவும் ஜமாஅத்தின் அமைப்பு, கல்வி, நல்லொழுக்கம் போன்றவற்றை அபிவிருத்தி அடையச் செய்வதற்காகவும், ஏழைகளின் உதவிக்காகவும் செலவு செய்யப்படுகின்றது. இங்கு ஒரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட நாடுகின்றேன்.

1947 –ல் இந்தியா–பாகிஸ்தான் பிரிவினையின்போது கிழக்கு பஞ்சாபில் வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் அனைவரும் பாகிஸ்தானுக்குச் சென்று விட்டனர். ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சார்ந்த 313 பேர் மட்டும் இந்தியாவிலுள்ள காதியான் நகரில் தங்கி விட்டனர். இந்தப் புனித பூமி இறைவனால் பாதுகாக்கப்பட்டு இன்று இந்தியாவிலுள்ள ஜமாஅத்துகளுக்கு தலைமையகமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இறை அருளால், இன்று ஆயிரக்கணக்கான மக்கள் அங்கிருந்த வண்ணம் இஸ்லாத்திற்கு தொண்டாற்றி வருகின்றனர். இந்நகரை தலைமையகமாகக் கொண்டு இந்தியா முழுவதும் இஸ்லாமியப் பிரச்சாரப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பாகிஸ்தானில் உள்ள அஹ்மதிகளுக்கு ரப்வா, தலைமையகமாகத் திகழ்கின்றது.

***பூமியின் எல்லை வரை இஸ்லாமியப் பிரச்சாரம்:***

இக்காலத்தில் அஹ்மதிய்யா இயக்கம் மட்டுமே உலகம் முழுவதிலும் மார்க்கப் பிரச்சாரம் என்னும் உண்மையான ஜிஹாதை செய்து கொண்டிருக்கிறது. ஒரு மிகப்பெரும் திட்டத்தின் கீழ் அமைப்பு ரீதியாகப் பணியாற்றி வருகிறது. ஜமாஅத்தைச் சேர்ந்தவர்கள் பொருள் தியாகம் மட்டுமின்றி தம் வாழ்வையும் மார்க்கத்திற்காக அர்ப்பணித்து அரும்பணியாற்றி வருகின்றனர். நூற்றுக்கணக்கான அஹ்மதிய்யா இயக்கப் பிரச்சாரகர்கள் முழு நேரமும் பணியாற்றி வருகிறார்கள். இன்று, அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஹாலந்து, சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, டென்மார்க், சுவீடன், நார்வே, பெல்ஜியம், ஸ்பெயின், இத்தாலி போன்ற ஐரோப்பிய நாடுகளிலும், பாலஸ்தீனம், லெபனான், சிரியா, எகிப்து,

குவைத், பஹ்ரைன், மஸ்கட் போன்ற மத்திய கிழக்கு நாடுகளிலும், கென்யா, தன்ஸானியா, உகாண்டா, ஜாம்பியா போன்ற கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளிலும், நைஜீரியா, கானா, செராலியோன் போன்ற மேற்கு ஆப்பிரிக்க நாடுகளிலும் அஹ்மதிய்யா இயக்கப் பிரச்சார நிலையங்களும், ஆயிரக்கணக்கான பள்ளிவாயில்களும் கல்வி நிலையங்களும், மருத்துவமனைகளும் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன.

இஸ்லாத்தின் போதனைகளை மக்களுக்கு எட்டச் செய்யும் மாபெரும் இறைப் பணிக்காக பிரச்சாரகர்களை ஊக்குவித்து உருவாக்குவதும், ரப்வாவிலும், காதியானிலும் மார்க்கக் கல்வி நிலையங்களும், அரபிக் கல்லூரிகளும் அமைக்கப்பட்டு சீரிய முறையில் செயல்பட்டு வருகின்றன. இன்னும் இதுபோன்ற அரபிக் கல்லூரிகள், ஆப்ரிக்கா, இந்தோனேஷியா மற்றும் பிற நாடுகளிலும் மிகவும் வெற்றிகரமாக இயங்கி வருகின்றன.

## இயக்கத்தின் வளர்ச்சியும் பணிகளும்

ஹஸ்ரத் மஹ்தி மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் அவர்களைத் தொடர்ந்து வந்த கலீஃபாக்கள் மற்றும் அஹ்மதிய்யா இயக்கப் பேரறிஞர்கள் ஆகியோரின் ஏராளமான நூல்கள் உலகின் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு உலகெங்கும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

***திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பு:***

1. அஹ்மதிய்யா இயக்கத்தால் வெளியிடப்பட்ட திருக்குர்ஆனின் ஆங்கில மொழிபெயர்ப்பு இலட்சக்கணக்கில் பல பதிப்புகளாக

வெளியிடப்பட்டு உலகெங்கும் பரவச் செய்யப்பட்டுள்ளது. ஆங்கில மொழியில் திருக்குர்ஆனின் விரிவான விளக்கவுரை 3300 பக்கங்களில், ஐந்து பாகங்களாகவும், அதன் சுருக்கமான விளக்கவுரை 1500 பக்கங்களிலும் வெளியிடப்பட்டுள்ளன.

2. ஹாலாந்து நாட்டு மொழியான டச்சு மொழியில் திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பு ஏற்கனவே மூன்று பதிப்புகள் வெளி வந்து விட்டது.
3. ஜெர்மனிய மொழியில் மூன்று பதிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது.
4. கிழக்கு ஆப்பிரிக்காவின் ஸுவாஹிலி மொழியில் மூன்று பதிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.
5. நைஜீரியாவின் யோறுபா மொழியில் திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பு மூன்று பதிப்புகள் வெளிவந்துள்ளது.
6. டென்மார்க்கின் டேனிஷ் மொழியிலும்,
7. உகாண்டாவின் லோகண்டி மொழியிலும்,
8. ஐரோப்பாவின் புதிய மொழியான ஸ்ப்ராண்டோ(Sprnato)விலும்,
9. இந்தோனேஷியா மொழியிலும்,
10. பிரெஞ்சு மொழியிலும் திருக்குர்ஆனின் மொழிபெயர்ப்புகள் வெளியிடப்பட்டு அதன் மூலம் பல்லாயிரக்கணக்கான மக்கள் இறைவனின் வார்த்தைகளைத் தமது தாய்மொழியில் அறிந்து பயன் பெற வகை செய்யப்பட்டுள்ளது.

இவை தவிர ரஷ்ய மொழி, இத்தாலி, ஸ்பானிஷ், போர்ச்சுக்கல், வங்காளம் ஆகிய மொழிகளில் திருக்குர்ஆன் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

அதேபோன்று கிழக்கு ஆப்பிரக்க மொழிகளான கிகூயு (Kikuyu), லுஆ (Luo), கிகாம்பா, (Kikamba) மொழிகளிலும் திருக்குர்ஆன் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

பஞ்சாபின் குர்முகி மொழியில் திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டு விட்டது.

இந்தி மொழியில் திருக்குர்ஆன் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

தமிழ், மலையாளம், தெலுங்கு, ஒரியா போன்ற மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இவை தவிர மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள நைஜீரியாவின் ஹவாஸா சிராலியோன் மென்டீ, கானாவின் பின்டே, பிஜி நாட்டு பீஜியன், சீன மொழி ஆகியவற்றில் திருக்குர்ஆன் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

***மூன்றாம் கிலாஃபத்:***

இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்களின் மறைவு **(08.11.1965)**க்குப் பின், ஹஸ்ரத் ஹாஃபிஸ் மிர்ஸா நாஸிர் அஹ்மது அவர்கள் மூன்றாவது கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இவர்கள் ஹஸ்ரத் மஹ்தி மஸீஹ் (அலை) அவர்களின் பேரர் ஆவார்கள்.

இவர்கள் கலீஃபா பதவியை ஏற்ற பின்னர் ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்காகப் பல திட்டங்களையும், நற்பணிகளையும் மேற்கொண்டார்கள். அவற்றுள் ஃபஸ்லே உமர் ஃபவுண்டேஷன்,

நுஸ்ரத் ஜஹான் திட்டம், நூற்றாண்டு விழாத் திட்டம் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

***ஃபஸ்லே உமர் ஃபவுண்டேஷன் திட்டம்:***

இத்திட்டத்தின் கீழ் ரப்வாவில் கிலாஃபத் நூல் நிலையத்திற்கு மிகப்பெரிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது. பெரிய விருந்தினர் விடுதி ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் முக்கியமான பல நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

***நுஸ்ரத் ஜஹான் திட்டம்:***

இத்திட்டத்தின் கீழ் மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள ஆறு நாடுகளில் அதாவது, நைஜீரியா, கானா, செராலியோன், லைபீரியா, கேம்பியா, ஐவரிகோஸ்ட் ஆகியவற்றில் 25 மருத்துவ நிலையங்களும், 25 மேல்நிலைப்பள்ளிகளும் கட்டப்பட்டுள்ளன.

***நூற்றாண்டு விழாத் திட்டம்:***

1. அஹ்மதிய்யா இயக்கம் உருவாகி ஒரு நூற்றாண்டு (1889–1989) நிறைவையொட்டி அதற்காக வகுக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் காட்டன்பர்க் (சுவீடன்), கனடா, ஜப்பான், நார்வே, ஸ்பெயின், ஸ்ரீநகர் (காஷ்மீர்) ஆகிய இடங்களில் பள்ளிவாயில்களும், பிரச்சார நிலையங்களும் கட்டப்பட்டுள்ளன.

2. இங்கிலாந்தில் சவூத்ஹால், பிராட்போர்டு, ஹடர்ஸ்பீல்ட், பர்மிங்ஹாம் முதலிய இடங்களில் 35 இலட்சம் ரூபாய் செலவில் பள்ளிவாயில்களும் பிரச்சார நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

**3.** உலகின் முக்கிய மொழிகளில் இஸ்லாத்தையும், அஹ்மதிய்யா இயக்கத்தையும் அறிமுகப்படுத்தும் பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மூன்றாவது கிலாஃபத்தின் அருள்மிக்க காலத்தில் இறை அருளால் ரப்வாவின் **82–83** வருட பட்ஜெட் ரூபாய் **6** கோடியே **99** இலட்சத்து **21** ஆயிரத்து **982** –யும் காதியானின் பட்ஜெட் **50** இலட்சத்தையும் எட்டியுள்ளது. ஆப்பிரிக்கா, அமெரிக்கா, இந்தோனேஷியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் தனித்தனியான பட்ஜெட்களைத் தயாரித்தன.

வெற்றிகரமான **17** ஆண்டுகால கிலாஃபத்திற்குப் பிறகு **8.06.1982** அன்று இரவு ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இறைவனடி சேர்ந்தார்கள்.

***நான்காவது கிலாஃபத்:***

**10.06.1982** அன்று ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹி) அவர்கள் ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் நான்காவது கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அன்னார் கிலாஃபத் பதவி ஏற்றதும் ஐரோப்பிய நாடுகளிலுள்ள ஜமாஅத்துகளைப் பார்வை இடுவதற்காகச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்கள். இந்தச் சுற்றுப் பயணத்தின்போது **10.09.1982** அன்று ஸ்பெயினில் அஹ்மதிய்யா இயக்கத்தால் கட்டப்பட்டுள்ள மஸ்ஜித் பஷாரத் பள்ளிவாயிலைத் திறந்து வைத்தார்கள்.

**1983** ஆம் ஆண்டு ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் ஆஸ்திரேலியா, ஃபிஜி தீவுகள், சிங்கப்பூர், இலங்கை போன்ற

நாடுகளிலுள்ள ஜமாஅத்துகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்கள். இதற்கிடையில் ஆஸ்திரேலியாவில் கட்டப்பட இருக்கும் பிரமாண்டமான பள்ளிவாசலுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் கிலாஃபத் காலத்தில் நியூயார்க் நகரில் அந்நகர ஜமாஅத்தின் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றும் விதமாக 4 இலட்சத்து 57 ஆயிரம் டாலர் மதிப்பில் மிகப் பெரிய கட்டடம் ஒன்று வாங்கப்பட்டுள்ளது.

லாஸ் ஏஞ்சல்ஸ் நகர ஜமாஅத் 4 ஏக்கர் நிலம் வாங்கியுள்ளது. அதேபோன்று டெட்ராய்டு நகரில் கட்டடத்தோடு கூடிய 7 ஏக்கர் நிலமும் யார்கு என்னுமிடத்தில் நல்லதொரு கட்டடமும் வாங்கப்பட்டுள்ளது.

நியூ ஜெர்ஸி என்னும் இடத்தில் அங்குள்ள அஹ்மதி ஒருவர் 25 ஆயிரம் டாலர் மதிப்பில் ஓர் ஏக்கர் நிலம் வாங்கி ஜமாஅத்திற்கு நன்கொடையாக வழங்கி இருக்கிறார்.

இங்கிலாந்தில் ஜமாஅத்திற்கு ஒரு தலைமை நிலையம் அமைப்பதற்காக இலண்டனிலிருந்து 35 மைல் தொலைவில் 25 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. தற்போது அது நிர்மாணிக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு நான்காவது கிலாஃபத் காலக்கட்டத்தில் ஜமாஅத் இறையருளால் மகத்தான வளர்ச்சி பெற்று முன்னேறியது.

**1984** –ல் ஜெனரல் ஸியாவுல் ஹக் தலைமையிலான பாகிஸ்தான் அரசு அஹ்மதிகளுக்கு எதிராக பாகிஸ்தானில் இராணுவச் சட்டத்தை நிறைவேற்றியது. அஹ்மதிகளின் மார்க்க உரிமைகள் முற்றிலும் பறிக்கப்பட்டன. இதன் காரணமாக ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் **1984** –இல் ஏப்ரல் மாதத்தில் மாபெரும் இறை உதவியோடு இலண்டனுக்கு ஹிஜ்ரத் செய்தார்கள். ஜெனரல் ஸியா எவ்வளவோ முயன்றும் கிலாஃபத் தலைமையகம் இலண்டனுக்கு மாற்றமாவதைத் தடுத்து நிறுத்த இயலவில்லை. அஹ்மதிய்யா கிலாஃபத்தை ஒழிக்க வேண்டும் என்னும் அவரது சதித்திட்டம் யாவும் பாழாய்ப் போயின. ஏனென்றால் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் கிலாஃபத்தை அல்லாஹ்வே ஏற்படுத்தியுள்ளான்.

**1986** –ல் பாகிஸ்தான் அரசால் அநீதிக்கு ஆளான அஹ்மதி குடும்பங்களுக்கு உதவி செய்வதற்காக ‘சய்யிதுனா பிலால் ஃபண்ட்’ என்ற திட்டம் தொடங்கப்பட்டது.

**1986** –ல் கலீஃபா அவர்கள் கனடா, ஹாலந்து, மேற்கு ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, இத்தாலி, ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டார்கள். கனடா நாட்டில் ஜமாஅத்தின் முதல் பள்ளிவாயிலுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

**1987** –ல் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் வக்ஃபே நவ் திட்டத்தைத் துவக்கினார்கள். இதன்படி அஹ்மதி பெற்றோர்கள் பிறக்கவிருக்கின்ற தமது குழந்தைகளை இஸ்லாத்தின் சேவைக்காக அர்ப்பணிக்க முன்வருமாறு அழைக்கப்பட்டார்கள். இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை முழு

உலகிலும் அறுபதாயிரத்திற்கும் அதிகமான ஆண் பெண் குழந்தைகள் மார்க்கப்பணிக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளனர்.

**1988** –ஆம் ஆண்டு அஹ்மதிகளுக்கு எதிரான பாகிஸ்தான் அரசின் அடக்குமுறை எல்லை மீறியபோது, ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் முபாஹிலாவுக்கான அழைப்பு விடுத்தார்கள். அதன் விளைவாக அதிபர் ஸியாவுல் ஹக் இறைத் தண்டனைக்கு ஆளாகி விமான விபத்தில் கோர மரணம் அடைந்ததை உலகம் கண்டது.

**1989** –ஆம் ஆண்டு மார்ச் மாதம் **23** –ஆம் தேதி அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் நிறுவப்பட்டு **100** ஆண்டுகள் நிறைவையொட்டி முழு உலகிலும் அஹ்மதிய்யா ஜமாஅத் சார்பாக நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது.

**1991** –ஆம் ஆண்டு காதியானில் **100** –ஆவது ஆண்டு மாநாட்டின்போது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இந்தியா வருகை தந்தார்கள். இந்தியா–பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு கலீஃபத்துல் மஸீஹ் இந்தியா வருவது இதுவே முதல் முறையாகும்.

**1992** –ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் கலீஃபாவின் ஜுமுஆ உரை நேரலை (LIVE) ஆக முழு உலகிலும் ஒளிபரப்பப்பட்டது. முழு உலகிலும் ஆண்டுதோறும் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைபவர்களின் எண்ணிக்கை ஆயிரங்களைத் தாண்டி இலட்சங்களை எட்டியது.

**1993** –ஆம் ஆண்டு U.K. ஆண்டு மாநாட்டின்போது முதலாவது உலகளாவிய பைஅத் நிகழ்ச்சி நடைபெற்றது.

**1994 –**ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா (MTA International) தனது **24** மணி நேர சேவையைத் தொடங்கியது. கலீஃபா அவர்களின் ஜுமுஆ உரைகள் வாரந்தோறும் நேரலையாகப் பல்வேறு உலக மொழிகளில் உடனடி மொழியாக்கத்துடன் ஒளிபரப்பு செய்யும் அரும்பணி தொடங்கப்பட்டது. இன்று வரை இப்பணி தொடர்கிறது. மேலும் கலீஃபா அவர்கள் கலந்து கொண்ட திருக்குர்ஆன் வகுப்புகள், கேள்வி பதில் நிகழ்ச்சிகள், ஹோமியோபதி வகுப்புகள், லிகாமஅல் அரப் என்னும் அரபு மொழி கேள்வி பதில் நிகழ்ச்சிகள் போன்ற ஒளிபரப்புகள் ஆரம்பமாயின.

**1994 –**ஆம் ஆண்டு Humanity First (மனிதம் முதலில்) என்ற தொண்டு நிறுவனம் கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களால் தொடங்கப்பட்டது. ஐக்கிய நாட்டு சபையால் அங்கீகரிக்கப்பட்ட இந்தத் தொண்டு அமைப்பு **40 –**க்கும் மேற்பட்ட நாடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இயற்கைப் பேரிடர்களின்போது நிவாரணம் வழங்குவதிலும், நலிவுற்ற ஆப்பிரிக்க நாடுகளில் மருத்துவ சேவைகள், குடிநீர் திட்டங்கள், மின் வசதிக்கான திட்டங்கள் ஆகியவற்றை வழங்குவதிலும் இந்த அமைப்பு முன்னணியில் உள்ளது.

**1994 –**ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அமெரிக்காவில் பைத்துர் ரஹ்மான் பள்ளிவாயில் திறந்து வைக்கப்பட்டது.

**1994 –**ஆம் ஆண்டு இமாம் மஹ்தியின் அடையாளங்களாக நபிமொழியில் கூறப்பட்ட சூரிய சந்திர கிரகணங்கள் தோன்றி **100** ஆண்டுகள் நிறைவையொட்டி நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது.

லாஹூரில் 1896 –ஆம் ஆண்டு நடைபெற்ற சர்வ சமய மாநாட்டில் அனைத்து மார்க்கங்களைச் சேர்ந்த மக்களின் மாபெரும் ஆதரவைப் பெற்ற வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் 'இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம்' என்ற புத்தகத்தின் நூற்றாண்டு விழா 1996 –ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது.

1999 –ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இலண்டன் மார்டனில் மேற்கு ஐரோப்பாவின் மிகப் பெரிய பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

2000 –ஆம் ஆண்டு ஜூன் மாதம் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் மிகப் பெரிய இஸ்லாமிய நாடான இந்தோனேஷியாவுக்குச் சுற்றுப்பயணம் சென்றார்கள்.

2003 –ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஏழைப் பெண்களின் திருமண உதவிக்காக 'மர்யம் ஷாதி ஃபண்ட்' என்ற திட்டம் நிறுவப்பட்டது.

2003 –ஆம் ஆண்டு ஏப்ரல் 19 –ஆம் தேதி ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் வஃபாத் ஆனார்கள்.

***ஐந்தாவது கிலாஃபத்:***

2003 –ஆம் ஆண்டு ஏப்ரல் 22 –ஆம் தேதி ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

**2004** –ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யாவின் இரண்டாவது சேனல் MTA-2 தொடங்கப்பட்டது.

**2004** –ஆம் ஆண்டு தேசிய அமைதிக் கருத்தரங்கில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் தலைவர்கள், மார்க்கத் தலைவர்கள் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டு உலக அமைதியையும் நல்லிணக்கத்தையும் மேலோங்கச் செய்வதற்கான தமது கருத்துக்களை எடுத்துரைத்தார்கள்.

**2005** –ஆம் ஆண்டு காதியான் ஆண்டு மாநாட்டிற்கு ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வருகை புரிந்தார்கள்.

**2006** –ஆம் ஆண்டு பங்களாதேஷில் ஜாமிஆ அஹ்மதிய்யா நிறுவப்பட்டது.

**2007** –ஆம் ஆண்டு மார்ச் **23** –ஆம் தேதி MTA Al-Arabia என்ற பெயரில் முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யாவின் மூன்றாவது சேனல் MTA-3 தொடங்கப்பட்டது.

**2008** –ஆம் ஆண்டு கிலாஃபத் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது.

**2008** –ஆம் ஆண்டு அக்டோபர் **22** –ஆம் தேதி கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பிரிட்டன் பாராளுமன்றத்தில் உலக நெருக்கடிக்குத் திருக்குர்ஆன் தரும் தீர்வு என்னும் தலைப்பில் வரலாற்றுச் சிறப்புமிக்க உரை நிகழ்த்தினார்கள்.

**2009** –ல் அமைதியையும் மனிதநேயத்தையும் தழைத்தோங்கச் செய்வதற்காகச் சிறப்பாகப் பணியாற்றி வரும் தனி நபருக்கோ அல்லது அமைப்பிற்கோ ஆண்டுதோறும் வழங்கப்படும் அமைதி மேம்பாட்டிற்கான அஹ்மதிய்யா முஸ்லிம் பரிசு நிறுவப்பட்டது.

**2010** –ஆம் ஆண்டு மே மாதம் **28** –ஆம் தேதி பாகிஸ்தானில் லாஹூரில் இரண்டு அஹ்மதிய்யா பள்ளிவாயில்கள் மீது நடைபெற்ற கொடூரமான தீவிரவாதத் தாக்குதல்களில் **80**–க்கும் அதிகமான அஹ்மதிகள் ஷஹீதாக்கப்பட்டனர்.

**2012** –ஆம் ஆண்டு ஜூன் மாதம் கலீஃபா அவர்கள் அமெரிக்கா பயணம் சென்றார்கள். அங்கு வாஷிங்டனில் Capital Hill –ல் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் மத்தியில் "அமைதிக்கான வழி – நாடுகளுக்கிடையிலான நீதமான உறவு" என்ற தலைப்பில் வரலாற்றுச் சிறப்புமிக்க உரை நிகழ்த்தினார்கள்.

**2012** –ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பிரஸ்ஸெல்ஸில் அமைந்துள்ள ஐரோப்பிய பாராளுமன்றத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க உரை நிகழ்த்தினார்கள். **30**–க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து **350**–க்கும் அதிகமான விருந்தினர்கள் அதில் கலந்து கொண்டனர்.

**2013** –ல் ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து சுற்றுப் பயணம் சென்றார்கள். நியூசிலாந்து பாராளுமன்றத்தில் கலீஃபா அவர்கள் உரை நிகழ்த்தினார்கள்.

**2014** –ஆம் ஆண்டு பிப்ரவரியில் உலக மார்க்கங்களின் மாநாடு இலண்டனில் அஹ்மதிய்யா ஜமாஅத் சார்பாக நடத்தப்பட்டது.

**2016** –ஆம் ஆண்டு கலீஃபா அவர்கள் கனடா சுற்றுப் பயணம் மேற்கொண்டு அங்குள்ள பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தினார்கள்.

இறையருளால் இன்னும் கணக்கிலடங்கா பணிகள், மக்கள் தொண்டுகள், அமைதியை நிலைபெறச் செய்வதற்கான பேருரைகள், அன்றாட நிகழ்ச்சிகளாக இன்றைய காலத்தின் கலீஃபா ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்) அவர்களால் நடந்தேறி வருகின்றன. இவற்றையெல்லாம் பட்டியலிடுவது சாத்தியமற்ற ஒன்றாகும். குறிப்பாக சமீப காலத்தில் MTA8 சேனல்களில் **11** செயற்கைக்கோள்கள் மூலம் உலகம் முழுவதும் தன் சீரிய பணியை விரிவுபடுத்தியுள்ளது. புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே!

தொடர்ந்து எல்லா விதமான எதிர்ப்புகளையும் சோதனைகளையும் கடந்து ஜமாஅத் உலகெங்கும் வெற்றி நடைபோட்டுக் கொண்டிருப்பது ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் முன்னறிவிப்பு நிறைவேறிக் கொண்டிருப்பதற்கான மிகச் சிறந்த சன்றாகும்.

ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்கள் இறைவனிடம் இருந்து பெற்ற இல்ஹாமின் அடிப்படையில் பின்வரும் நற்செய்தியைக் கூறினார்கள்:

“அல்லாஹ் எனக்கு அடிக்கடி அருளும் நற்செய்தி என்னவென்றால், அவன் எனக்கு அதிகமான அளவில் மகத்துவத்தைத் தந்தருள்வான். மக்கள் உள்ளங்களில் என்மீது அன்பும் நேசமும் ஏற்படச் செய்வான். எனது இயக்கத்தை உலகெங்கும் பரவச் செய்வான். எல்லாத் தரப்பினர் மீதும் எனது இயக்கத்திற்கு வெற்றியைத் தந்தருள்வான். எனது இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அறிவிலும், ஞானத்திலும் முழுமை பெற்றுத் திகழ்வார்கள். பூரணத் தன்மையைத் தந்தருள்வான்; அவர்கள் தங்கள் சத்தியத்தின் ஒளியினாலும், அடையாளங்களாலும் சான்றுகளாலும் மற்றவர்களின் வாயை அடைப்பார்கள். ஒவ்வொரு சமுதாயத்தைச் சார்ந்தவரும் இந்த நீரூற்றிலிருந்து நீர் அருந்துவார்கள். பூமி முழுவதும் பரவும் அளவுக்கு இவ்வியக்கம் மிகப்பெரும் வலுவோடு வளர்ந்து பூத்துக் குலுங்கும். பல்வேறு இடையூறுகளும், சோதனைகளும் வரும். ஆனால், இறைவன் அவை அனைத்தையும் நீக்கிவிடுவான். பின்னர் தனது வாக்குறுதியை நிறைவேற்றுவான். அல்லாஹ் என்னை நோக்கி இவ்வாறு கூறியிருக்கிறான்:

‘அரசர்கள் உமது ஆடையிலிருந்து அருள் தேடும் அளவுக்கு நான் உமக்கு அருளுக்குமேல் அருள் செய்வேன்.’

எனவே காது கொடுத்துக் கேட்பவர்களே! இந்த விஷயங்களை நினைவில் கொள்ளுங்கள். இந்த முன்னறிவிப்புகளை நீங்கள் உங்களுடைய பெட்டிகளில் பாதுகாப்பாகப் பூட்டி வைத்திருங்கள். ஏனெனில் இது ஒருநாள் நிச்சயமாக நிறைவேறவிருக்கும் இறைவனது வசனமாகும்.”

(தஜல்லியாத்தே இலாஹிய்யா பக்கம் 41)

மக்களே! நீங்கள் காதுகொடுத்துக் கேளுங்கள். இது வானங்களையும் பூமியையும் படைத்த அல்லாஹ்வின் திரு வசனமாகும். அதாவது அவன் எனது ஜமாஅத்தை எல்லா நாடுகளிலும் பரவச் செய்வான். அன்பினாலும், அறிவினாலும் எல்லார் மீதும் அவர்களுக்கு வெற்றியைத் தந்தருள்வான். உலகில் ஒரேயொரு மார்க்கம் மட்டுமே மகிமையோடு விளங்கும் நாள் மிகவும் அண்மித்து விட்டது. இறைவன் இவ்வியக்கத்தின் மீது அற்புதமான விதத்தில் அருட்களைப் பொழிந்து கொண்டிருப்பான். இதனை அழிக்க நினைக்கிறவர்களுக்குத் தோல்வியும், நிராசையும் ஏற்படும். இந்த வெற்றி இறுதி நாள்வரை நீடிக்கும். உலகில் ஒரேயொரு மார்க்கமும் ஒரேயோர் இறைத் தூதரும் எஞ்சியிருப்பார்கள். நான் விதையை விதைப்பதற்கே வந்திருக்கிறேன். எனது கரங்களால் அந்த விதை ஊன்றப்பட்டு விட்டது. இனி அது வளரும்; மலரும். அதன் முன்னேற்றத்தை எவராலும் நடத்து நிறுத்த முடியாது.”

(தத்கிரதுஷ் ஷஹாததைன் பக்கம் 64–65)